# காவல் நீதிக்கான குரல்

# Voices for Custodial Justice



# உண்மைகளை வெளிப்படுத்தியவரின் வெற்றி

– பார்வதி மேனன்

*லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் ஜூலியன் அஸாஞ்ஜே அடைத்துவைக்கப்பட்டிருந்தது "தான்தோன்றித்தனமான காவல்" நடவடிக்கைதான் என்று ஒரு ஐ.நா. குழு அளித்துள்ள தீர்ப்பு பிரிட்டன், ஸ்வீடன் அரசுகளுக்குக் கிடைத்த அவமானகரமான அடியாகும்.*

லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகம் முன்பாக ஜூலியன் அஸாஞ்ஜே ஆதரவாளர்கள் ஏராளமானோர் கூடியிருக்கிறார்கள். ஏராளமான ஊடகங்களின் செய்தியாளர்களும் குழுமியிருக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளில் லண்டனின் புகழ்பெற்ற காவல் மையமாகப் பெயர் பெற்றுவிட்ட அந்த தூதரகத்தின் பால்கனியில், கையில் சில காகிதங்களுடனும், சோர்வாகக் காணப்படும் முகத்தில் ஒரு புன்னகையுடனும் வந்து நிற்கும் அஸாஞ்ஜே அவர்களைப் பார்த்துக் கையசைக்கிறார். அத்துமீறிய காவலுக்கான ஐக்கிய நாடுகள் நடவடிக்கைக் குழு (WGAD) 16 மாத கால விசாரணைகளுக்குப் பிறகு அளித்த தீர்ப்பின் நகல்தான் அந்தக் காகிதங்கள்.

ஈக்வடார் தூதரகத்தில் மூன்றரையாண்டு காலம் அவர் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது ஒரு "தான் தோன்றித்தனமான காவல்" நடவடிக்கைதான் என்ற முடிவுக்கு அந்தக் குழு திட்டவட்டமாக வந்துள்ளது. அவர் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் உரிய வகையில் இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்றும் அந்தக் குழு அறிவித்தது. உண்மைகளை வெளிப்படுத்திவரும் புகழ்பெற்ற 'விக்கிலீக்ஸ்' வலைத்தளத்தின் நிறுவனரும் தலைமை ஆசிரியருமான அவரைப் பொறுத்தவரையில், இந்தத் தீர்ப்பு அவரது வலைத்தளத்தின் பணிகளுக்குக் கிடைத்த அங்கீகாரம் மட்டுமல்ல, 2010ல் வன்புணர்வுக் குற்றத்தில் ஈடுபட்டதாக அவர் மீது குற்றம் சாட்டி ஐரோப்பிய கைது ஆணை பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த ஐந்தரையாண்டுகளாக அவரும் அவரது ஆதரவாளர்களும் வழக்குரைஞர்களும் மேற்கொண்ட சட்டப்பூர்வ வழிமுறைகளுக்குக் கிடைத்த அங்கீகாரமுமாகும்.

தீர்ப்பு நகலை உயர்த்திப் பிடித்தபடி, ஆதரவாளர்களைப் பார்த்து அஸாஞ்ஜே இப்படிக் கூறுகிறார்: "எவ்வளவு உண்மையான தருணம் இது! மறுக்க முடியாத வெற்றி இது. எனக்கும் எனது குடும்பத்திற்கும் எனது குழந்தைகளுக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் சுயேச்சைத்தன்மைக்கும் கிடைத்துள்ள ஒரு வரலாற்றுப்பூர்வ வெற்றி இது."

தீர்ப்புக்கு எதிரான விமர்சனங்களும் உடனடியாக, கூர்மையாக வெளிவரத் தொடங்கின. இந்தத் தீர்ப்பால் "எதுவும் மாறிவிடவில்லை" என்று பிரிட்டிஷ் அரசு கூறியது. பிரிட்டிஷ் அரசால் அஸாஞ்ஜே "தான்தோன்றித்தனமாக காவலில்" வைக்கப்பட்டார் என்பதை அரசு மறுத்தது. ஐ.நா.




http://www.frontline.in/multimedia/dynamic/02735/FL09_ASSANGE_2735599g.jpg

நடவடிக்கைக் குழு உண்மைகளைக் காணத் தவறிவிட்டது என்றும், பிரிட்டிஷ் சட்ட ஏற்பாடுகள் எவ்வளவு பாதுகாப்பான முறையில் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை இந்தக் குழு புறக்கணித்துவிட்டது என்றும் அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. தூதரகத்தில் தங்கியிருக்க முடிவுசெய்ததன் மூலம் அஸாஞ்ஜே சட்டப்பூர்வமாகக் கைது செய்யப்படுவதை வேண்டுமென்றே தடுத்து வந்தார் என்றும் அரசு கூறியது. அவர் மீதான வன்புணர்வுக் குற்றச்சாட்டு தொடர்ந்து நீடிக்கிறது என்றும், ஐரோப்பிய கைது ஆணை இன்னமும் நடைமுறையில் இருக்கிறது என்றும், ஆகவே, அவரை ஸ்வீடனுக்கு நாடு கடத்துகிற சட்டப்பூர்வ பொறுப்பு தனக்கு இருக்கிறது என்றும் பிரிட்டிஷ் அரசு கூறியது. பிரிட்டனின் வெளியுறவுத் துறை செயலர் பிலிப் ஹேமண்ட் ஒரு படி மேலே சென்று, ஐ.நா. குழுவின் தீர்ப்பே ''அபத்தமானது'' என்று கூறினார். அந்தக் குழுவில் ''சட்ட வல்லுநர்கள் யாருமில்லை, மாறாக, எதுவும் தெரியாதவர்கள்தான் குழுவில் இடம் பெற்றிருந்தார்கள்'' என்றும் அவர் கூறினார். 2010ல் அஸாஞ்ஜே குறித்து சர்வதேச காவல்துறை (இன்டர்போல்) சிவப்பு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்படுவதற்கும், ஐரோப்பிய கைது ஆணை பிறப்பிக்கப்படுவதற்கும் காரணமாக இருந்த ஸ்வீடன், ஐ.நா. குழுவின் முடிவால் ''ஸ்வீடிஷ் சட்டத்தின் கீழ் தற்போது நடைபெற்று வரும் புலன் விசாரணையில் எவ்விதத் தாக்கமும் ஏற்படாது'' என்று அறிவித்தது.

WGAD குழு ஐந்து சர்வதேச வல்லுநர்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. அவர்களில் ஒருவரான லீ டூமீ, குழுவிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டார். அஸாஞ்ஜேயைப் போலவே தானும் ஒரு ஆஸ்திரேலியர் என்பதால் குழுவில் தொடர்ந்து செயல்பட இயலாது என்று தனது முடிவுக்கு அவர் காரணம் கூறினார். குழுவின் தலைவராகவும் தொடர்பாளராகவும் இருந்தவர் தென் கொரியாவின் சியாங் பில் ஹாங். மெக்ஸிகோ நாட்டின் அன்டோனியா குவேரா பெர்முடேஸ், பெனின் நாட்டைச் சேர்ந்த ரோலண்ட் அட்ஜோவி, உக்ரைன் நாட்டவரான விளாடிமிர் டோச்சிலோவ்ஸ்கி ஆகியோர் குழுவின் இதர மூன்று உறுப்பினர்களாவர். குழுவின் பெரும்பான்மைக் கருத்துடன் மாறுபட்ட டோச்சிலோவ்ஸ்கி, தனது உடன்பாடின்மைக் குறிப்பை வெளியிட்டார்.

### ''தொடர்ந்து மறுக்கப்பட்ட சுதந்திரம்''

அஸாஞ்ஜே மீது ஐரோப்பிய கைது ஆணை பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரை பிரிட்டிஷ் காவல்துறை கைது செய்து லண்டனில் 10 நாட்கள் தனிமைக் காவலில் வைத்திருந்த 2012ஆம் ஆண்டின் இடைக் கட்டத்தில் இருந்து அவருடைய சுதந்திரம் பறிக்கப்பட்ட காலகட்டத்தை WGAD தனது பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது. சுதந்திரம் மறுக்கப்படுவது தொடர்பாக நிர்ணயிக்கப்பட்டுள்ள ஐந்து வரையறைகளுக்குள்ளும் அஸாஞ்ஜே வழக்கு வருகிறது என்று ஐ.நா. குழு கூறியது. ''அஸாஞ்ஜேயின் சுதந்திரம் மாறுபட்ட வடிவில் பறிக்கப்பட்டது: முதலில் வான்ஸ்வொர்த் சிறையில் காவலில் வைக்கப்பட்டார்; அதைத் தொடர்ந்து வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்; பின்னர் ஈக்வடார் தூதரகத்தில் அடைக்கப்பட்டார்.'' தூதரகத்தில் அவர் காவலில் வைக்கப்பட்டிருந்தது ''ஒரு தொடர்ச்சியான சுதந்திர மறுப்பு'' நடவடிக்கையாகவே இருந்தது, ஏனெனில், ''காவலின் முதல் கட்டத்தில் அவர் தனியாக வைக்கப்பட்டிருந்தார். ஸ்வீடிஷ் அரசு வழக்குரைஞரின் முயற்சியின்மை காரணமாக அஸாஞ்ஜே நீண்டகாலம் காவலில் இருக்க வேண்டியதாயிற்று,'' என்று குழு கூறியது. உலக மனித உரிமை பிரகடனம், சர்வதேச குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் உடன்பாடு ஆகிய இரண்டிலும் உள்ள குறிப்பான விதிகளை மீறி அஸாஞ்ஜே மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஐ.நா. குழு கூறியது.

ஸ்வீடன், பிரிட்டன் ஆகிய இரு நாடுகளும் ''திரு. அஸாஞ்ஜேயின் பாதுகாப்பையும் உடல்ரீதியான பாதிப்பின்மையையும் உறுதிப்படுத்துகிற சூழலை ஏற்படுத்த வேண்டும், அவர் சுதந்திரமாக நடமாடுவதற்கான உரிமையை விரைவாக உறுதிப்படுத்த வேண்டும், காவல் தொடர்பாக வரையறுக்கப்பட்டுள்ள சர்வதேச நெறிகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகள் அவரால் முழுமையாக அனுபவிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்,'' என்று WGAD கேட்டுக்கொண்டது. ''காவல் நடவடிக்கை முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இழப்பீடு பெறுகிற உரிமையும் திரு. அஸாஞ்ஜே–வுக்கு வழங்கப்பட வேண்டும்,'' என்று கருதுவதாகவும் WGAD அறிவித்தது.

சர்வதேச குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் உடன்பாட்டில் (ஐசிசிபிஆர்) ஸ்வீடன், பிரிட்டன் ஆகிய இரு நாடுகளுமே கையெழுத்திட்டுள்ளன. ஐரோப்பிய மனித உரிமைகள் மாநாடு உள்ளிட்ட வேறு பல உடன்பாடுகளிலும் இவ்விரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன. இந்த உடன்பாடுகளின் அடிப்படையில்தான் ஐ.நா. சட்ட அமைப்பு தனது பரிந்துரைகளை அளித்துள்ளது. மியான்மர் தலைவர் ஆங் சான் சூ குயி, மாலத்தீவு முன்னாள் அதிபர் முகமது நஷீத் உள்ளிட்டோர் இவ்வாறு ''தான்தோன்றித்தனமான காவல்'' நடவடிக்கை உட்படுத்தப்பட்டபோது ஐ.நா. சட்ட அமைப்பு அளித்த தீர்ப்புகளை இவ்விரு நாடுகளும் ஏற்றுள்ளன. WGAD விசாரணைக்குத் தேவையான ஆவணங்களை அளித்து ஒத்துழைத்துள்ளன. ஆனால், அஸாஞ்ஜே பிரச்சனையில், விசாரணை முடிவு தங்களுக்கு

எதிராக இருக்கிறது என்றதும் இரு நாடுகளும் அதை மீறுகின்றன. ஐரோப்பிய நீதி அமைப்பை விஞ்சியதல்ல சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்ற ஒரு வாதத்தை இரு அரசுகளும் வைக்கின்றன.

## பாலியல் குற்றச்சாட்டு ஒரு திசை திருப்பும் தந்திரமா ?

இந்த வழக்கை மேலோட்டமாக மட்டும் கவனித்து, அதன் திருப்பங்களை கவனிக்காமல் விட்டவர்களுக்கு, ஸ்வீடன் அரசு முன்வைக்கும் வாதங்கள் நியாயமானவையாகவே தெரியும். விக்கிலீக்ஸ் நிறுவனர் மீது 2010ல் ஸ்வீடனில் வன்புணர்வுக் குற்றச்சாட்டு கூறப்பட்டது. தனக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட கைது ஆணையிலிருந்து தப்பிப்பதற்காக அவர் பிரிட்டனுக்குப் பறந்தார்.

தனக்கான சட்டப்பூர்வ வழிகள் அடைக்கப்பட்டிருப்பதைக் கண்ட அவர், ஜாமீன் ஆணையை மீறி, ஈக்வடார் தூதரகத்தில் அடைக்கலம் புகுந்தார். அரசியல்ரீதியாகத் தன்னைப் பழிவாங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று கூறி அடைக்கலம் கோரினார். நடந்ததை இவ்வாறு திரும்பிப் பார்க்கிறபோது, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு உறுப்பினர் என்ற முறையில் ஐரோப்பிய சட்டத்தைச் செயல்படுத்தும் நடவடிக்கையைத்தான் பிரிட்டிஷ் அரசு எடுத்திருக்கிறது. அதனடிப்படையில் அஸாஞ்ஜேயை 24 மணி நேர கண்காணிப்பு நடவடிக்கைக்கு உட்படுத்திய பிரிட்டிஷ் அரசு அவர் தூதரகத்தை விட்டு வெளியே வந்தால் கைது செய்யப்படுவார் என்று அச்சுறுத்தியது. வன்புணர்வுக் குற்றச்சாட்டு வழக்கிலிருந்து தப்பிப்பதற்காகவே அஸாஞ்ஜே அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படலாம் என்ற தேவையற்ற பிரச்சனையை எழுப்புகிறார் என்றும் அதற்கு ஐ.நா. குழு இரையாகிவிட்டது என்றும் பிரிட்டன் கூறுகிறது. 'கார்டியன்' பத்திரிகை தனது தலையங்கத்தில் இதுகுறித்து விவாதித்துள்ளது. “தான்தோன்றித்தனமான காவல் என்பதன் அர்த்தம் முறையான சட்ட விதிகள் பின்பற்றப்படவில்லை என்பதுதான். ஆனால், (இந்த வழக்கில்) பின்பற்றப்பட்டுள்ளன. இது ஒரு விளம்பர உத்திதான்,” என்று 'கார்டியன்' எழுதியுள்ளது.

இந்தக் கூற்றுகள் உண்மையல்ல என்று அஸாஞ்ஜேயும் அவரது வழக்குரைஞர்களும் வாதிட்டார்கள். அவர்களுடைய வாதத்தை ஐ.நா. குழு ஏற்றுள்ளது.

முதலில், அஸாஞ்ஜே மீது ஒருபோதும் வன்புணர்வுக் குற்றச்சாட்டு சுமத்தப்படவில்லை. வன்புணர்வு குற்றம் தொடர்பான வேறு எந்த விசாரணையிலும் அவர் பங்கெடுக்கவில்லை. 2010ல் இரண்டு ஸ்வீடிஷ் பெண்கள் கூறிய வன்புணர்வு குற்றச்சாட்டுகள் தொடர்பாக தன்னிடம் விசாரணை நடத்துமாறு அவரே ஸ்வீடிஷ் அதிகாரிகளிடம் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டார். ஆனால், தன்னுடைய வாக்குமூலம் ஈக்வடார் தூதரகத்தில் வைத்துதான் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தார். ஸ்வீடனுக்குத் திரும்பிச் சென்றால், தன்னை அங்கிருந்து அமெரிக்காவுக்கு நாடு கடத்தக் கூடும் என்றும், அமெரிக்காவில் தன் மீது இதைவிட மோசமான, எதிரிகளுக்கு வேவு பார்த்ததாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். இந்த அச்சங்களுக்கு நியாயமான அடிப்படை இருக்கிறது. அவர் மீது ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், அவருக்கும் விக்கிலீக்ஸ் வலைத்தளத்திற்கும் எதிரான நீதிமன்ற நடுவர்கள் குழு ஆணை இருக்கிறது என்றும் பிரிட்டிஷ் நீதித்துறை ஒரு தடவைக்கும் மேலாக உறுதிப்படுத்தியுள்ளது. விக்கிலீக்ஸ் தளத்தில் முதலில் வெளியான, ஈராக் விவகாரங்கள் தொடர்பான உண்மைகளுக்காக, அவற்றை வெளிப்படுத்திய செல்ஸீ மானிங், விசாரணைக்கு முந்தைய நீண்டகாலக் காவலின்போது சித்ரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் 35 ஆண்டு சிறைத் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது.

2010ல் இரண்டு பெண்கள் ஸ்டாக்ஹோம் நகரத்தில் உள்ள ஒரு காவல்நிலையத்திற்குச் சென்று, தங்களுடன் அஸாஞ்ஜே பாதுகாப்பற்ற பாலியல் உறவு கொண்டதால், அவரை எச்ஐவி பரிசோதனைக்குக் கட்டாயப்படுத்துவது எப்படி என்று விசாரித்தனர். இதனை காவல்துறையினர் ஒரு புகாராக எடுத்துக்கொண்டு அந்தக் குற்றச்சாட்டுகளின் பேரில் ஒரு பூர்வாங்க வழக்குப் பதிவு செய்தனர் (பின்னர் அந்தப் பெண்கள் தாங்கள் கூறியதை மாற்றிக்கொண்டதாகவும், தாங்கள் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்படவில்லை என்று இருவருமே கூறியதாகவும், அவர்களில் ஒருவர் காவல்துறையினர் சொன்னபடி செய்ததாகக் கூறியதாகவும் தகவல் வந்தது. ஸ்வீடிஷ் காவல்துறை பதிவுகளிலேயே இது இருக்கிறது. அஸாஞ்ஜேயின் வழக்கறிஞர்கள் குழுவிற்கு இந்த ஆவணங்கள் கிடைத்துள்ளன). வன்புணர்ச்சிக் குற்றச்சாட்டுக்குப் போதிய ஆதாரம் இல்லையெனக் கூறி அரசு வழக்குரைஞர் ஈவா ஃபின்ஸ் வழக்கை முடித்துக்கொண்டார். பின்னர் இதில் ஸ்வீடனில் ஒரு முக்கிய அரசியல்வாதி தலையிட்டார். அந்த இரண்டு பெண்களுக்கும் அவர் ஒரு புதிய சட்ட ஆலோசகராக மாறினார். அதைத் தொடர்ந்து வழக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்முறை மரியேன் நை என்ற வேறொரு அரசு வழக்குரைஞர் பொறுப்பில் இந்த வழக்கு வந்தது. “குறைவான வன்புணர்வு” என்று இப்போது குற்றம் சாட்டப்பட்டது.

தனது தரப்பு ஆதாரங்களைத் தாக்கல் செய்வதற்காக அஸாஞ்ஜே ஐந்து வார காலம் ஸ்வீடனில் காத்திருந்தார். பின்னர், 2010 அக்டோபரில் அரசு வழக்குரைஞரின் எழுத்துப்பூர்வ அனுமதியுடன் அவர் லண்டனுக்குப் புறப்பட்டார். அவர் ஸ்வீடனிலிருந்து புறப்பட்ட உடனேயே ஈரான் போர் சம்பந்தமான ரகசிய விவரங்கள் விக்கிலீக்ஸ் தளத்தில் வெளியிடப்பட்டன. அதைத் தொடர்ந்து 'கேபிள்கேட்' விவகார ஆவணங்களும் வெளியிடப்பட்டன. நவம்பரில் மரியேன் நை ஒரு சிவப்பு எச்சரிக்கை வெளியிட்டார். அதனை இன்டர்போல் நிர்வாகம் தனது வலைத்தளத்தின் முதல் பக்கத்தில் வெளியிட்டது. ஸ்வீடனின் கைது ஆணையை பிரிட்டன் அதிகாரிகள் டிசம்பரில் அங்கீகரித்தனர்.

அதே மாதத்தில் அஸாஞ்ஜே கைது செய்யப்பட்டு 10 நாட்கள் தனிமைக் காவலில் வைக்கப்பட்டார். டிசம்பர் நடுவில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அதற்கடுத்த ஒன்றரையாண்டு காலம் அவர் தனது நலன் விரும்பும் நண்பர் ஒருவரின் இல்லத்தில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். அதே நேரத்தில் பிரிட்டிஷ் நீதிமன்றத்தில் தன் மீதான நாடு கடத்தல் வழக்குகளில் வாக்குமூலம் அளித்துக்கொண்டிருந்தார். அவருடைய மனு பிரிட்டிஷ் உச்சநீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. அவருக்கான வழிகள், தற்காலிகமாகவாவது, அடைபட்டன. அதைத் தொடர்ந்து அவர் ஈக்வடார் தூதரகத்தில் அடைக்கலம் புகுந்தார். ஒரு அரசியல் அடைக்கலத்திற்கான முழு சலுகைகளையும் அவரால் அனுபவிக்க முடியவில்லை. அதற்குக் காரணம், எப்போது வெளியே வந்தாலும் கைது செய்யப்படுவதற்கான ஆணை பிரிட்டிஷ் காவல்துறையிடம் தயாராக இருந்தது. இதனால் அவர் தூதரகத்திற்கு உள்ளேயே இருக்க வேண்டியதாயிற்று. இந்தக் காலக் கட்டத்தில் தன் மீதான வன்புணர்வுக் குற்றச்சாட்டு தொடர்பாக தனது தரப்பு ஆதாரங்களைத் தாக்கல் செய்ய மீண்டும் மீண்டும் அவர் வாய்ப்புக் கோரினார். ஆனால், அவரது கோரிக்கை ஏற்கப்படவில்லை. 2010ஆம் ஆண்டிலிருந்து அவர் மீதான ஸ்வீடன் அரசின் வழக்கு இன்னமும் நிலுவையில் இருக்கிறது.

2014 ஜூலையில் பிரிட்டனில் ஒரு புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஐரோப்பியக் கைது ஆணை தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கான சட்டம் அது. பின் தேதியிட்டு அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்குமானால் அஸாஞ்ஜேயை ஸ்வீடனுக்குக் கடத்துகிற நடவடிக்கை தடுக்கப்பட்டிருக்கும். உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ஃபிலிப்ஸ், எதிர்காலத்தில் ஐரோப்பிய கைது ஆணைக் குறித்த ஒரு முறையான மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்று கூறினார். அஸாஞ்ஜே வழக்கைப் பொறுத்தவரையில், ''ஒரு உள்நாட்டு கைது ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு காரணமான ஒரு குற்றச்செயல் ஐரோப்பியக் கைது ஆணை பிறப்பிக்கப்படுவதை நியாயப்படுத்தாது,'' என்றார் நீதிபதி. நீதிமன்ற முடிவுகள் எதுவும் எடுக்கப்படாத நிலையில் நாடு கடத்தப்படுவதை இந்த புதிய சட்டம் தடை செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

விசாரணையை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்ல ஸ்வீடிஷ் அரசுத் தரப்பு வழக்குரை அதிகாரிகள் உறுதியாக மறுத்துள்ளனர். இது, ஸ்வீடனும் பிரிட்டனும் நீண்டகாலமாக அஸாஞ்ஜேயுடன் மோதி வருகிற அமெரிக்காவின் ஏவலாட்களாகவே செயல்படுகின்றன என்ற ஊகத்தை வலுப்படுத்துகின்றன என்று அஸாஞ்ஜே வழக்குரைஞர்கள் கூறுகிறார்கள்.

அமெரிக்க, பிரிட்டன் அரசுகள் ஐ.நா. குழுவை நிர்ப்பந்திக்கின்றன என்ற குற்றச்சாட்டை WGAD அமைப்பின் முன்னாள் தலைவரும் நார்வே நாட்டு வழக்குரைஞருமான மேட்ஸ் ஆண்டெனாஸ் முன்வைத்தார். அறிக்கையைத் தயார் செய்யும் பணியின் தொடக்கக் கட்டத்தில் பங்காற்றியவர் இவர். ஐரோப்பிய தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றிற்கு பேட்டியளித்த ஆண்டெனாஸ், ''(இந்த வழக்கில்) அமெரிக்காவிடமிருந்தும் பிரிட்டனிடமிருந்தும் பெருமளவுக்கு அரசியல் நிர்ப்பந்தம் வருகிறது,'' என்று கூறினார். பின்னர், அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட 'டெமாக்ரஸி நௌ' ஊடகத்திற்குப் பேட்டியளித்த அவர், ''அடைக்கலம் கோருவதைத் தவிர அஸாஞ்ஜேக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது. ஆகவேதான் அவர் ஈக்வடார் தூதரகத்தில் தஞ்சம் புகுந்தார். அது அவராகத் தேர்ந்தெடுத்ததல்ல. அது அவரது விருப்பமுமல்ல. தற்போதைய நிலையில் தனது உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ள அவருக்கு இதைத் தவிர வேறு வழியில்லை,'' என்று கூறினார். ஸ்வீடிஷ் அரசு இதில் தொடர்ச்சியான பல நடைமுறைத் தவறுகளைச் செய்திருக்கிறது. பிரிட்டனைப் பொறுத்தவரையில் இதுதொடர்பாக ஒரு ''பொருத்தமான ஆய்வு'' எதுவும் செய்யப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

விக்கிலீக்ஸ் தளத்தில் வெளியான உண்மைகள் அமெரிக்காவின் பாதுகாப்புத் துறைக்கு ஆழ்ந்த ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளன. 'கொலாட்டரல் மர்டர்' என்ற தலைப்பில் வெளியான வீடியோ தொகுப்பு (இதனை வெளியிட்டவர் செல்சியா) ஏதோ விளையாட்டுப் போல அப்பாவி மக்களை அமெரிக்கப் படையினர் கொலை செய்வதை வெளிப்படுத்தியது. அதுவும், ஆஃப்கன் போர்

ஆவணங்களும் ஈராக் போர் பற்றிய பதிவுகளும், 2011 ஏப்ரலில் வெளியான குவான்டநாமோ முகாம் கொடுமைகள் பற்றிய பதிவுகளும் எந்த அளவிற்கு அமெரிக்கப் படையினர் சட்டத்திற்குப் புறம்பாகவும், மனிதத்தன்மையற்ற முறையிலும் நடந்துகொள்கிறார்கள் என்பதற்கான அதிர்ச்சி சான்றுகளாக அமைந்தன. 2012 நவம்பரில் அமெரிக்க வெளியுறவுத்துறையின் பல்வேறு தொடர்புகள் குறித்த ஆவணங்கள் உரிய தலைப்புகளின்கீழ் உலகளாவிய ஊடகங்களில் வெளியாகின. அதற்கு விக்கிலீக்ஸ் நிறுவனம் ஒத்துழைத்தது.

ஐ.நா. குழுவின் அறிக்கைக்கு பிரிட்டன் அரசின் எதிர்வினை பிரிட்டிஷ் ஊடகங்களின் பாராட்டைப் பெற்றிருக்கலாம்தான். ஆனால், உலகளாவிய ஆதரவை அது வேகமான இழந்துவருகிறது. அஸாஞ்ஜே சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும் என்ற ஐ.நா. வேண்டுகோளை ரஷ்யாவும் ஜெர்மனியும் ஆதரித்துள்ளன. தென்னமெரிக்க நாடுகள் ஒன்றியம் (UNASUR) தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. ஆஸ்திரேலியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜூலி பிஷப், ஆஸ்திரேலிய குடிமக்களில் ஒருவராகிய அஸாஞ்ஜே சட்டத்துக்குப் புறம்பாக பிடித்துவைக்கப்பட்டிருக்கிறார் என்ற ஐ.நா. கருத்து குறித்து சட்ட ஆலோசனை கேட்டிருப்பதாக கூறியுள்ளார்.

அஸாஞ்ஜேயின் வாதம் இப்போது சட்டப்பூர்வமாக நிறுவப்பட்டுள்ளது. இது அந்த வாதத்திற்குத் தேவைப்படுகிற ஊக்கத்தை அளித்துள்ளது. பிரிட்டன், ஸ்வீடன் அரசுகளின் இந்த நடவடிக்கையினுடைய நீண்டகால பின்விளைவுகள், பல்வேறு சர்வதேச அமைப்புகளில் இவ்விரு நாடுகளும் பங்கேற்பதைத் தடுப்பதாக, இவ்விரு நாடுகள் மீதும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுவதற்கு இட்டுச்செல்வதாகவும்கூட அமையக்கூடும் என்று அஸாஞ்ஜே வாதிடுகிறார். உடனடி விளைவாக இவ்விரு நாடுகள் மீதான மரியாதை சரிவடையும், அதன் விளைவுகளை இரு நாடுகளும் சந்திக்க வேண்டியிருக்கும் என்கிறார் அஸாஞ்ஜே. சட்டப்பூர்வமாகவும் தார்மீக அடிப்படையிலும் அஸாஞ்ஜேவுக்குத்தான் வெற்றி கிடைத்திருக்கிறது. உண்மைகளை உலகத்தின் கவனத்திற்குக் கொண்டுவர முயல்கிற ஒருவருக்குக் கிடைக்க வேண்டிய தகுதிவாய்ந்த வெற்றிதான் இது.

**ஆதாரம்: ஃப்ரன்ட்லைன், மார்ச் 4, 201**

# இந்திய தேசியத்தின் பெயரால் கொலை

## *அமைதியான காலத்தில் ராணுவம் போர் தொடுக்குமானால் ஜனநாயகத்தின் கதி என்னவாகும்?*

**– மாலேம் நிங்தௌஜா**

“அந்நிய அத்துமீறல்களிலிருந்தும் பயங்கரவாதத் தாக்குதல்களிலிருந்தும் நாட்டைக் காப்பாற்றுகிற தனது இறையாண்மைக் கடமையைத்தான் ராணுவம் நிறைவேற்றுகிறது. அதில் சிலர் கொல்லப்படுவார்களானால் அதற்காக ராணுவத்தைக் குற்றம் சொல்ல முடியாது. ராணுவத்தின் மூலமாக இந்திய ஒன்றியம் நிறைவேற்றுகிற இறையாண்மைக் கடமையின் ஒரு பகுதிதான் இவ்வாறு சிலர் கொல்லப்படுவது.” – இவ்வாறு இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் முகுல் ரோத்தகி 2015 டிசம்பர் 3 அன்று உச்சநீதிமன்றத்திடம் கூறினார். நீதிபதி சந்தோஷ் ஹெக்டே தலைமையிலான ஆணையம் 2013ல் அளித்த அறிக்கையைத் தள்ளுபடி செய்த அரசு அதற்காக அளித்த விளக்கம்தான் இது. மணிப்பூர் மாநிலத்தில் “மோதல்கள்” என்ற பெயரில் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் பற்றி விசாரிப்பதற்காக உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட ஆணையம் இது.

’பாதுகாப்புப் படைகள்’ செய்கிற கொலைகளுக்கு வக்காலத்து வாங்கி அரசு இவ்வாறு கூறியது, ஆயுதப் படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் (AFSPA) தொடர்பாக அரசு மேற்கொண்டுள்ள நிலைபாட்டோடு இணைந்ததுதான். ராணுவச் சீருடைப் பணியாளர்கள் உள்நாட்டுக் கலவர எதிர்ப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக ஈவிரக்கமற்ற குற்றங்களைச் செய்வதற்கு அனுமதி வழங்குகிற இந்தச் சட்டம் குடிமைச் சமூக அமைப்புகளின் பரவலான கண்டனத்திற்கு உள்ளானது. உச்சநீதிமன்றத்தில் தலைமை வழக்குரைஞர் கூறிய கருத்து, ராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட இந்தக் கேள்வியற்ற அதிகாரத்தை நியாயப்படுத்துவதேயாகும். சிக்கல் நிறைந்த இந்தப் பகுதி மேலும் ராணுவ மயமாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் நியாயப்படுத்துவதாகும்.

இத்தகைய கருத்து கூறப்பட்ட காலகட்டம், இக்கருத்தில் உள்ள அரசியல் ஞானம் ஆகியவை குறித்து பல மாறுபட்ட கருத்துகள் உள்ளன. ஆயினும் தலைநகர் தில்லியில் ஆட்சியாளர்கள் இதில் மகிழ்ச்சியாக இருப்பது தெரியவருகிறது. பாஜக தலைமையிலான அரசைப் பொறுத்தவரையில் “தேச விரோத” சக்திகளுக்கு எதிராக “அறுவை சிகிச்சை” நடவடிக்கைகள் எடுத்து மார்தட்டிக் கொள்வதற்கான ஒரு முன்னுரைதான் இது. மிகக் குறுகிய வேறொரு அரசியல் நோக்கத்திற்கும் இது பயன்படும். அரசு அமைப்பின் ஒரு பிரதிநிதியிடமிருந்து இப்படிப்பட்ட “தைரியம்” மிகுந்த வார்த்தைகள் வருவது, அதுவும் ஒரு நீதிமன்றத்தில் இந்த வார்த்தைகள் ஒலிப்பது, அரசு ஏற்படுத்த விரும்புகிற “தேசியவாத” உணர்வுகளைத் திரட்டுவதற்கு உதவியாக அமையும். 2014 மே மாதம் ஆட்சிக்கு வந்தபோது இருந்த நம்பிக்கை இப்போது இந்த அரசுக்கு இல்லை. “தேசிய நலன்” எனக் கூறி கொலை செய்வது, “கற்பனையான தேசியம்” என்ற பெயரில் மக்களை ஈர்க்க விரும்புகிறவர்களுக்கு வலுவூட்டுவதாக அமையும்.

தலைமை வழக்குரைஞரின் கருத்திலிருந்து பின்வரும் தாக்கங்கள் குறித்த சிந்தனைகள் எழுகின்றன:

**நிராகரிப்பிலிருந்து நியாயப்படுத்துவதை நோக்கி**

அமைதியான காலகட்டத்தில் குடிமக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவித்தவர்களுக்கு வக்காலத்து வாங்குகிற கடைசி முயற்சிதான் தலைமை வழக்குரைஞரின் கருத்து. இதுவரையில், ராணுவச் சீருடையாளர்கள், நடந்த குற்றத்தில் தாங்கள் சம்பந்தப்படவில்லை என்ற நுட்பமான வழியைப் பயன்படுத்தி கொலைகளுக்குப் பொறுப்பாவதிலிருந்து நழுவி வந்தார்கள். பொதுமக்களிடையே அது எடுபடவில்லை என்றபோது, ஆதாரங்கள் சீர்குலைக்கப்பட்டு AFSPA சட்டத்தின் கீழ் விசாரணைகளிலிருந்தும் தண்டனைகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டது. அதையும் மீறி, நீதிமன்றத்தின் விசாரணைக்கு வருமானால், மேலும் சிக்கலான நடைமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன, நீதி கிடைப்பதற்கான வாய்ப்பு மேலும் பின்னுக்குத் தள்ளப்படுகிறது.

இந்தியாவின் வடகிழக்கில் சட்டத்துக்குப் புறம்பாக 1,528 பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுவது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் ஒரு ஆணை கோரும் மனு தாக்கல் செய்யப்பட்டது. 2012ல் அதனை நீதிமன்றம் எடுத்துக்கொண்டது. அரசு வன்முறைக் குற்றங்களுக்கு விசாரணை/தண்டனைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும் இறுகிப்போனக் கட்டமைப்பில் உச்சநீதிமன்றத்தின் இந்த முடிவு மூச்சு விடுவதற்கான ஒரு புதிய காற்று நுழைவதற்கு வழிவகுத்தது. முதல் 6 வழக்குகள் குறித்து விசாரிப்பதற்காக நீதிபதி ஹெக்டே தலைமையில் ஒரு ஆணையம் அமைக்கப்பட்டது. அந்த 6

வழக்குகளும் மணிப்பூர் மாநிலத்தில் நிகழ்ந்தவை. ஆணையம் நடத்திய தொடர்ச்சியான விசாரணையில், ஆணையத்தின் முன் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களும் அந்த 6 வழக்குகளிலும் சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் நடந்திருப்பது உண்மைதான் என்று நிரூபமானது. ஆணையத்தின் அறிக்கை வெளியான பிறகு, குற்றம் நடைபெறவில்லை என்று கூறி பாதுகாப்புப் படையினர் நழுவுவதற்கு வழியில்லாமல் போய்விட்டது. இந்தப் பின்னணியில், போலியான தேசிய உணர்வுகளைக் கிளறிவிட்டு, கொலைகளை நியாயப்படுத்துமாறு நீதித்துறையை நிர்ப்பந்திக்கிற நோக்கத்துடன் அரசியல்ரீதியாக உணர்ச்சிமயமான கருத்தை உருவாக்குவதில் மத்திய அரசு ஈடுபட்டது என்பதில் வியப்பில்லை. குற்றம் செய்தவர்களை சட்டத்தின் பிடியிலிருந்து காப்பாற்றுவதற்காக ஹெக்டே குழுவின்அறிக்கை குப்பைத்தொட்டியில் வீசப்பட்டாக வேண்டும்.

**ராணுவ மயமாக்கலுக்கு ஊக்கம்**

நீதிமன்றத்தில் தலைமை வழக்குரைஞர் சொன்ன சொற்கள், 1947ஆம் ஆண்டிலிருந்தே ராணுவ மயமாக்கல் நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கு இந்திய அரசு எப்போதும் கையாண்டு வருகிற உத்தியோடு பொருந்துகின்றன. “தேசியம்” என்ற அடையாளம் பிரிட்டிஷ் ஆட்சியாளரிடமிருந்து சுதந்திரத்தை வென்றெடுக்க வழிவகுத்தது. அதே அடையாளம் பின்னர் வடகிழக்குப் பகுதியில் மன்னர்களின் கீழ் இருந்த அரசுகளை ராணுவரீதியாக அடக்கியதன் மூலமாகவும், கட்டின்றி இருந்த பழங்குடி மக்களையும் பிற சமூகங்களையும் ஒடுக்கியதன் மூலமாகவும் கட்டமைக்கப்பட்டது.

ஆயினும், இந்திய அரசு காஷ்மீரையும் வடகிழக்குப் பகுதிகளையும் ராணுவ மயமாக்கி, அங்கு AFSPA சட்டத்தைத் திணித்ததற்கு காஷ்மீரிலும் வடகிழக்குப் பகுதிகளிலும் ஏற்பட்ட உள்நாட்டுக் கலகங்கள்தான் காரணம் என்று பழி சுமத்தப்படுகிறது.

எனவே, ராணுவமயமாக்கல் பிரச்சனையைப் பொறுத்தவரையில் இன்றைய ஆளுங்கட்சியும் முந்தைய ஆளுங்கட்சியும் ஒரே குரலில் பேசுவது வியப்பளிப்பதாக இல்லை. 2004 ஆகஸ்ட் 17ல் அன்றைய உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல், நாடாளுமன்ற மக்களவையில் பேசுகையில், “ராணுவத்தினரின் தார்மீக உறுதி தாக்குதலுக்கு உள்ளாகாமல் பாதுகாப்பது நமது கட்டாயமான கடமை,” என்று கூறினார்.

வடகிழக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு அமைப்புகளின் உயர் அதிகாரிகளும்கூட இதே உணர்வைத்தான் எதிரொலிக்கிறார்கள். உதாரணமாக, 2008ஆம் ஆண்டில் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு வெளியிட்ட ஒரு அறிக்கை குறித்து கருத்து தெரிவித்த முன்னாள் மணிப்பூர் காவல்துறை தலைவர் ஒய். ஜாய்குமார், “உள்நாட்டுக் கலகம் ஒரு குணப்படுத்த முடியாத வியாதி,” என்று கூறினார். கலகத்தில் ஈடுபடுவோரை ஒழித்துக்கட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்றார்.

2010ல், இந்தியாவின் பழமை வாய்ந்த துணை ராணுவப் படையும், வடகிழக்கில் உள்நாட்டு கலக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் அமைப்புமாகிய அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படையின் தலைமை இயக்குநர், “நாங்கள் (ராணுவத்தினர்) ஆணைகளுக்கு உட்பட்டே செயல்படுகிறோம். ஆகவே எங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்,” என்று கூறினார்.

இந்த மனநிலையை பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற உலகளாவிய சிந்தனையின் ஆதிக்கம் கெட்டிப்படுத்துகிறது. உள்நாட்டுக் கலகத்தை சமாளிப்பதற்கு சாத்தியமான ஒரே வழி மேன்மேலும் ராணுவமயமாக்குவதுதான் என்பதே இந்த மனநிலையின் அடிப்படையாக இருக்கிறது. உள்நாட்டுக் கலகத்தில் ஈடுபடுவோரை எதிர்த்து ராணுவப் படைகள் இறக்கிவிடப்படுகிறபோது ஓரளவிற்கு கண்மூடித்தனமான கொலைகள் நடக்கத்தான் செய்யும், ஓரளவுக்கு மனித உரிமைகள் மீறப்படும், ஆகவே, பாதுகாப்புப் படையினர் தங்களது கடமையை நிறைவேற்ற வேண்டுமானால் குறிப்பிட்ட அளவுக்கு அவர்களுக்கு சட்டப்பூர்வ நடவடிக்கைகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற வாதம் இதனுள்ளே இருக்கிறது.

**பிரச்சாரமே தலையாய வழி**

அரசியல் அமைப்பில் நடைமுறை சார்ந்த பல குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றை சரி செய்வதற்கான அரசியல் முயற்சிகளும் பொருளாதார நடவடிக்கைகளும் இல்லாமல் போகிறபோது உள்நாட்டுக் கலகங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இத்தகைய நடவடிக்கைகள் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் மேற்கொள்ளப்படுகிறபோதுதான் உள்நாட்டுக் கலகங்கள் வலுவிழக்கும் என்பதே இதிலிருந்து பெறப்பட வேண்டிய செய்தி.

இந்திய அரசு இதுவரையில் இந்தக் களத்தில் செயல்படுவதில் செயல்படத் தவறியுள்ள பின்னணியில், அரசாங்கம் என்ன செய்கிறது ?

வடகிழக்கில், கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களுக்கு பதிலாக மேலும் வன்முறை வழிகளைத்தான் அரசாங்கம் சார்ந்திருக்கிறது. அதன்மூலம் இந்திய தேசியம்

என்பதற்கான ''அதிகாரப்பூர்வ'' நிலைபாட்டை இந்திய மக்களின் மனங்களில் பதியம் போடுகிறது. அதற்காக எதிர்ப்புப் போராட்டங்களை சாத்தியமான அனைத்து வழிகளிலும் நசுக்குகிறது.

இதன் விளைவுகள் மனதில் மிரட்சியை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக, உள்நாட்டுக் கலகத்துக்கு எதிரான நடவடிக்கைகளை விமர்சனத்துக்கு உட்படுத்துகிற பலரும், நீண்ட கால கலகங்களை எப்படியாவது ஒடுக்கவேண்டும் என்பதற்காக அரசு பல்வேறு எதிர்ப்புக் குழுக்களையும் ஒன்றுக்கொன்று எதிராக மோதவிடுகிறது, அவர்களுக்கு இடையேயான குறுகிய முரண்பாடுகளை விசிறிவிடுகிறது என்று சுட்டிக்காட்டுகிறார்கள். கொள்கைகளை வகுப்போரும் அதிகார வர்க்கத்தினரும் கலகம் முடிவுக்கு வருவதை விரும்பவில்லை, ஏனென்றால் கலக எதிர்ப்பு நடவடிக்கை ஒரு தங்க முட்டையிடும் வாத்து என்ற வாதத்தையும் பலர் முன்வைக்கிறார்கள். அப்போதுதான் கலக எதிர்ப்பு நடவடிக்கை என்ற பெயரில் ஏராளமான ஆதாயங்களுக்கு வழி வகுக்க முடியும். அதில் ஒரு பகுதி ஊழல் மூட்டைக்குள் போய்ச் சேரும்.

கலக எதிர்ப்பு நடவடிக்கைகளின் பாதிப்புகளுக்கு உள்ளாகிறவர்களிடையே, இந்திய அரசமைப்பு சாசனம் உறுதியளிக்கிற அனைத்து உரிமைகளையும் கட்டுப்படுத்துகிற ஒரே தீர்மானகரமான அம்சம் இது மட்டும்தானா என்ற பயமும் இருக்கிறது. ''பாதுகாப்பு'' படையினர்மீது மட்டுமே பழி சொல்வது தவறாகிவிடும் என்ற கருத்தும் உள்ளது. ஏனெனில், அவர்கள் 'செய் அல்லது செத்துமடி' என்ற அடிப்படையில், எதிரிகளுடன் மோதுவதற்காகப் பயிற்சியளிக்கப்பட்டவர்கள்– தானேயன்றி உள்நாட்டு நிர்வாகத்திற்காக உதவுவதற்காக அல்ல. கலகங்களை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளில், அத்துடன் இணைந்த பாதிப்புகளைத் தவிர்க்க வேண்டுமென்பது நடைமுறைக்கு ஒத்துவராததாகிவிடும் என்றும் கூறப்படுகிறது.

ஆக, அரசு வன்முறைக்கு எதிரான மக்களின் கொந்தளிப்பு, கலக ஒடுக்கு நடைமுறைகள் குறித்து மறுசிந்தனை செய்யுமாறு கட்டாயப்படுத்துகிற ஒரு ஜனநாயக நிர்ப்பந்தமாக உருவெடுக்கக் கூடும் என்பதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? இங்குதான் பிரச்சாரம் வந்து சேருகிறது. ''தேசப் பாதுகாப்பு'', ''பயங்கரவாத எதிர்ப்பு'', ''சட்டம்–ஒழுங்கு பிரச்சனை'' என்பது போன்ற மாயையான சொல்லாடல்கள் குழப்பத்தையும் சீர்குலைவையும் ஏற்படுத்துவதற்குத் தோதாகக் கையாளப்படுகின்றன. ''பாதுகாப்புப் படையினர்'' கட்டவிழ்த்துவிடும் கேள்விக்குரிய வன்முறை நடவடிக்கைகளை மூடி மறைப்பதற்கான பிரச்சாரம் நடைபெறுகிறது. அந்தப் பிரச்சாரத்திற்கு அரசியல்ரீதியாகத் தவறான தகவல்களைப் பரப்புவதற்காக அரசால் ஏற்படுத்தப்பட்ட வலை போன்ற ஏற்பாடுகள் மூலம் இவ்வாறு மூடி மறைக்கும் வேலை நடைபெறுகிறது.

இந்தப் பிரச்சார யுத்தத்தில் மிகுந்த விருப்பத்தோடு கையாளப்படுகிற ஆயுதம் என்னவென்றால் கலக நடவடிக்கைகளை மனித நேயமற்ற செயல்களாகச் சித்தரிப்பதுதான். திரும்பத் திரும்ப சில எதிர்மறையான சொல்லாடல்கள், தோற்றங்கள், கருத்தாக்கங்கள் ஆகியவை மூலம் இந்த ஆயுதம் கையாளப்படுகிறது. திரும்பத் திரும்பச் சொல்லப்படும் பொய் உண்மையாகிவிடும் என்ற பழமொழிக்கேற்ப உள்நாட்டுக் கலகங்கள் பற்றிய எதிர்மறையான கருத்துகள் திரும்பத் திரும்ப ஆயிரக்கணக்கான முறை சொல்லப்படுகின்றன. இந்த கருத்துகளை நுகரும் கோடிக்கணக்கான மக்கள் கேள்வி ஏதுமின்றி அவற்றை நம்புகிறார்கள். இப்படித்தான் பெரும்பகுதி மக்கள், ராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்படுபவர்கள் ஜனநாயக அளவுகோல்களுக்கு உட்படாதவர்கள் என்றும், எனவே அவர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும் நம்புகிறார்கள். தேசியவாதத்தின் பெயரால் குடிமக்கள் கொல்லப்படுவதை நியாயப்படுத்தி தலைமை வழக்குரைஞர் அளித்த வாக்குமூலம் இப்படிப்பட்ட ஒரு கருத்துப் பிரச்சார முயற்சிதான்.

## நாமும் அவர்களும்: ஒரு யுத்தச் சூழல்

2012 நவம்பரில் உச்சநீதிமன்றம் தனது அதிர்ச்சியை வெளிப்படுத்தியதோடு இந்தக் கேள்வியையும் முன்வைத்தது: ''ஒரு மாநில அரசு எப்படி 'அவர்கள்' எங்களைக் கொல்கிறார்கள், ஆகவே நாங்கள் 'அவர்களை' கொல்கிறோம் என்று பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய முடியும்... நாம் என்ன ஒரு யுத்தச் சூழலிலா இருக்கிறோம்?'' நீதிபதி ஹெக்டே ஆணையம் விசாரித்த போலி மோதல் சம்பவங்கள் அனைத்தும் அமைதியான காலகட்டத்தில், ஈவிரக்கமற்ற முறையில் நடத்தப்பட்டவையாகும். தலைமை வழக்குரைஞர் உச்சநீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தில், ''எதிர்வினையாக ஏற்பட்ட தவறுகள்'' என்று ஒரு தவறான விளக்கத்தை அளித்தார். ஆனால், ராணுவத்தினரின் அத்துமீறல்களுக்கும் தலைமை வழக்குரைஞர் சொல்வதற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

புலனாய்வுப் பத்திரிகையாளர் கிஷாலே பட்டாச்சார்ஜி 'ரத்தம் படிந்த எனது கைகள்: போலி மோதல்கள் பற்றிய ஒரு ஒப்புதல் வாக்குமூலம்' என்ற கட்டுரையை எழுதியுள்ளார். ராணுவ அதிகாரி ஒருவர் தனது பெயரை

வெளிப்படுத்திக்கொள்ளாமல் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட கட்டுரை அது. தலைமை வழக்குரைஞர் இந்தக் கட்டுரையை நிராகரிக்கலாம். ஆனால், அரச வன்முறையால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோருக்கு அவர் என்ன ஆறுதல் சொல்லப் போகிறார்? ராணுவத்தினர் தங்கள் விருப்பம்போல் யாரை வேண்டுமானாலும் கொல்லலாம், சித்ரவதை செய்யலாம், பதவி உயர்வு, சொந்தப் பெருமிதம் என்ற சுயநல நோக்கத்துடன் அதிக 'மதிப்பெண்கள்' பெறுவதற்காக, அல்லது பணம் கறப்பதற்காக அல்லது தனிப்பட்ட கோபதாபத்திற்காக இப்படிப்பட்ட போலி மோதல்களில் ஈடுபடலாம். காம வெறி, பொறாமை, பகை போன்ற தீய உணர்வுகளுடன் இந்த நடவடிக்கைகளை எடுக்கலாம் அல்லது ஒரு வக்கிர விளையாட்டாகக்கூட இதையெல்லாம் செய்யலாம். இதற்கெல்லாம் அனுமதிக்கிற நடைமுறை அமைப்பை தலைமை வழக்குரைஞர் எப்படி சரி செய்யப்போகிறார்?

அத்துமீறல்களுக்கான தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கிற கலாச்சாரம், கூட்டாளிகள்போல் செயல்படும் இன்னொரு வகை கிரிமினல் குற்றவாளிகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. பாதுகாப்புப் படையினரோடு தங்களுக்குள்ள தொடர்புகள் காரணமாக இவர்கள் பல வகையான கிரிமினல் குற்றங்களில் அச்சமின்றி ஈடுபடுகிறார்கள்.

இந்தியாவின் சில பகுதிகள் எந்த அளவிற்கு ராணுவமயமாக்கப்பட்டுள்ளன என்பதையும், அப்பகுதிகளில் வாழும் குடிமக்களின் உயிர்வாழும் உரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் 'தேசம்' என்பதைவிட இரண்டாந்தரமானவையாகவே அரசால் கருதப்படுகின்றன என்பதையுமே தலைமை வழக்குரைஞரின் கருத்து பிரதிபலிக்கிறது. AFSPA சட்டத்தின் கீழ் "வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகள்" என்று அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு வட்டாரத்திலும் "தேச நலன்" என்ற கருத்து ஆதிக்கம் செலுத்த வைப்பதற்குத்தான் அரசு முன்னுரிமை அளிக்கிறது. அதற்காக அப்பாவி மக்களின் உயிர்களை காவு கொடுக்கவும் தயாராக இருக்கிறது. ராணுவத்தினரும் இதர சட்டச் செயலாக்க அமைப்புகளும் செயல்படுகிற குற்றப் பொறுப்பிலிருந்து விலக்களிக்கும் கலாச்சாரத்தின் வளர்ச்சியையும், பரவலையும் சகித்துக்கொள்கிற இந்திய அரசின் பண்பு போலியான தேசியவாதத்தின் மீது கட்டப்பட்டதாக இருக்கிறது. "தாய் நாடு" என்பது ஒரு மாசுமருவற்ற கோட்பாடு என்ற அரசியலால் அந்த போலி தேசியவாதம் கிளப்பிவிடப்படுகிறது, வளர்க்கப்படுகிறது, நியாயப்படுத்தப்படுகிறது. 'தேசியவாதம்' என்று திரும்பத் திரும்ப உச்சரிக்கப்படுவதையும், 'தேசம்' என்ற பெயரால் இழைக்கப்படும் குற்றங்களையும் பற்றி வெகு சிலர்தான் கவலைப்படுகிறார்கள்.

தண்டனையிலிருந்து பாதுகாப்புப் படையினருக்கு விலக்கு அளிக்கப்படுவதன் தீய விளைவுகளுக்கு ஒரு அறிகுறிதான் "பாதிக்கப்பட்ட பகுதிகள்" என்று அறிவிக்கப்பட்ட வட்டாரங்களில் வாழும் மக்களிடையே, பல இளைஞர்களுக்கு தாங்கள் முதலில் எதிர்ப்புத் தெரிவித்த அதே ராணுவத்தில் தாங்களும் இணைய வேண்டும் என்ற மோகம் ஏற்பட்டிருப்பது. இந்த மோகத்திற்குக் காரணம் தனிமனிதர்கள் மீது வேறு எந்த வழியிலும் அவர்களால் இப்படிப்பட்ட கொடூரமான அதிகாரத்தைச் செலுத்த முடியாது. ஊழல் வழிகளில் பணம் சேர்ப்பதற்கு ஏராளமான வாய்ப்புகளையும் இது ஏற்படுத்திக் கொடுக்கிறது. உண்மையில் "தேச நலன்" பற்றிய கவலை கடைசி இடத்திற்குத் தள்ளப்பட்டுவிடுகிறது.

இந்தப் போக்கு தடையின்றித் தொடருமானால் "தேசப் பாதுகாப்பு" ஏற்பாடுகளால் இந்த "தேசம்" விழுங்கப்படுகிற நாள் தொலைதூரத்தில் இல்லை.

(கட்டுரையாளர் சிம்லாவில் உள்ள இந்தியன் இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் அட்வான்ஸ்டு ஸ்டடி ஆய்வு நிறுவனத்தில் ஒரு ஆய்வாளர்)

**ஆதாரம்: தெஹல்கா, 19 டிசம்பர் 2015**

# ஆதார் என்றொரு சூழ்ச்சி

– ஜீன் டிரேஸ்

*மக்கள் திரளை கண்காணிப்புக்கு உட்படுத்த வழிசெய்கிறது ஆதார் சட்ட முன்வரைவு. எதிர்க்கருத்து தெரிவிப்பதற்கு உள்ள உரிமையின்மீது அண்மைக்காலமாக தொடுக்கப்படும் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள இந்த அபாயத்தைக் காண வேண்டும். இதுவரையில், எந்த நாடுமே, நிச்சயமாக எந்தவொரு ஜனநாயக நாடுமே, தனது குடிமக்களை இப்படிப்பட்ட ஒரு வலிமையான கண்காணிப்புக் கட்டமைப்புக்குள் சிக்க வைத்ததில்லை.*

ஆதார் எண்ணுக்காகப் பதிவு செய்வது அவரவர் “சொந்த விருப்பமே” என்று சொல்லிக்கொண்டுதான் பொதுமக்களிடையே ஆதார் திட்டம் புகுத்தப்பட்டது. இதன் அடிப்படையான அர்த்தம் என்னவென்றால், ஆதார் பதிவு சட்டப்பூர்வமாகக் கட்டாயமானதல்ல என்பதுதான். ஆனால், பதிவு செய்வதை ஒரு நடைமுறைக் கட்டாயமாக்குவதற்கான வேலைகளை மத்திய அரசும் இந்திய தனித்துவ அடையாள ஆணையமும் (UIDAI) தொடர்ச்சியாகச் செய்து வந்துள்ளன. பல்வேறு வசதிகளும் சேவைகளும் கிடைக்க வேண்டுமென்றால் ஆதார் எண் அவசியம் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆதார் எண் இல்லையென்றால் வாழ்க்கை மிகவும் கடினமாக இருக்கும் என்பது தெளிவாகியுள்ளது. இத்தகைய நிலைமைகளில், ஆதார் அட்டை பெறுவது அவரவர் சொந்த விருப்பமே என்று கூறுவது, மூச்சு விடுவதோ, சாப்பிடுவதோ அவரவர் சொந்த விருப்பமே என்று கூறுவதற்கு ஒப்பானதாகும். சட்டப்படி செய்யப்பட்டாலும் சரி, நடைமுறையில் செய்யப்பட்டாலும் சரி, கட்டாயம் என்பது கட்டாயம்தான்.

### வரம்பிலா அதிகாரங்கள்

இந்த இரட்டை நாக்குப் பேச்சுக்கு உச்சநீதிமன்றம்தான் முடிவுகட்ட வேண்டியிருந்தது. 2014 மார்ச் மாதம், “ஆதார் எண் இல்லை என்பதற்காக, எவரொருவருக்கும் அவருக்குத் தகுதியுள்ள / அவருக்கு உரிய எந்தவொரு சேவையும் மறுக்கப்படக்கூடாது,” என்று ஆணையிட்டது. ஆதார் எண் அவரவர் சொந்த விருப்பமே என்றால் என்ன அர்த்தம் என்பதற்கு இது ஒரு அறிவார்ந்த விளக்கமாகும். இந்த வழக்கு விசாரணையின்போது அரசு இது ஒரு தன்விருப்பத் திட்டமே என்றுதான் சொல்லிவந்தது. அவ்வாறு சொல்வதன் அர்த்தம் என்ன என்று விளக்கமளிப்பதோடு உச்சநீதிமன்றம் நின்றுகொண்டது.

தன்விருப்பத்தின் அடிப்படையில்தான் ஆதார் திட்டம் செயல்படும் என்றால் உண்மையிலேயே அதனால் பல அற்புதங்களைச் செய்ய முடியும் என்பது முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். பலருக்கு, அனைத்து நோக்கங்களுக்கும் பயன்படக்கூடிய ஒரு அடையாள அட்டை ஒரு மதிப்புமிக்க ஆவணமாக இருக்கும். ஆனால், UIDAI நிர்வாகமோ ஆதார் அட்டையில் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. ஆதார் அட்டைக்கான தன்விருப்ப விண்ணப்பங்களை உருவாக்குவதிலும் UIDAI முனைப்பு காட்டவில்லை. மாறாக, பல்வேறு சூழல்களில் ஆதார் எண்ணை ஒரு சட்டப்பூர்வ கட்டாய அடையாளமாக்குவதற்கும், இணையத்தின் வழியாக தனிமனிதர்களின் உயிரியல் அடையாளங்களை மையப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை UIDAI இடையறாமல் செய்து வந்தது. இது வேறுவிதமான விளையாட்டு.

உச்சநீதிமன்றத்தின் ஆணை அதிகார வட்டாரங்களில் ஒரு திகைப்பை ஏற்படுத்தியது. ஏனெனில், ஆதாருக்காக திட்டமிடப்பட்டிருந்த பெரும்பாலான செயல்பாடுகளை இது தள்ளுபடி செய்தது. நாடாளுமன்ற மக்களவையில் சென்ற வாரம் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஆதார் சட்ட முன்வரைவு, மத்திய அரசின் ஒரு எதிர்த்தாக்குதல் என்றே சொல்ல வேண்டும். மிக விரிவான வசதிகளுக்கும் சேவைகளுக்கும் ஆதார் எண்ணைக் கட்டாயமாக்குவதற்கான விரிந்த அதிகாரங்களை இந்த சட்ட முன்வரைவின் பிரிவு 7 மத்திய அரசுக்கு வழங்குகிறது. மேலும், பிரிவு 57 எந்தவொரு சூழலிலும் ஆதார் அடையாள எண்ணைக் கட்டாயமாக்குவதற்கான அதிகாரத்தை அரசுக்கு வழங்குகிறது. பிரிவு 7ல் உள்ள அதே பாதுகாப்பு அம்சங்களுக்கு உட்பட்டதாக இந்த அம்சங்கள் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

திட்டவட்டமாகச் சொல்வதென்றால், ஊதியப் பட்டுவாடா, முதியோர் ஓய்வூதியம், பள்ளிச் சேர்க்கை, ரயில் பயண முன்பதிவு, திருமணப் பதிவு சான்றிதழ், ஓட்டுநர் உரிமம் பெறுதல், 'சிம்' கார்டு வாங்குதல், இணையத் தொடர்புக்கான மையத்தைப் பயன்படுத்துதல் என அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதார் எண் சான்று கட்டாயம் என்று அறிவிப்பதற்கான அதிகாரத்தை அரசுக்கு இந்த சட்ட முன்வரைவு அளிக்கிறது. அரசு இந்த அதிகாரங்களை எந்த வரைமுறையுமின்றிப் பயன்படுத்தும், மேலும் மேலும் புதிய களங்களுக்கு ஆதார் பிடியை விரிவுபடுத்தும் என்பதை கடந்தகால அனுபவங்கள்

காட்டுகின்றன. உண்மையிலேயே, ''நீக்கமற எங்கும்'' ஆதார் அடையாள எண்ணைக் கட்டாமாக்குவதே எப்போதும் அரசின் நோக்கமாக இருந்துவந்திருக்கிறது. இதனை UIDAI முன்னாள் தலைவர் நந்தன் நீல்கேனி தனது சொந்த வார்த்தைகளிலேயே வெளிப்படுத்தியிருக்கிறார்.

**கண்காணிப்பு வலையில் வெகுமக்கள்**

ஆதார் ஒரு பிரச்சனையாகியிருப்பது ஏன்? உயிரியில் தகவல் பதிவுகள் எந்த அளவிற்கு நம்பகமானவை என்பதிலிருந்து, குடிமக்களின் அந்தரங்கத்திற்குள் அத்துமீறல்கள் நடக்கலாம் என்பது வரையில் பல்வேறு கவலைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால், மிக முக்கியமான அபாயம் என்பது, மக்கள் பெருந்திரளாக கண்காணிப்பு வளையத்துக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்பதுதான். ''தேச பாதுகாப்பு'' என்ற காரணத்திற்காக ஆதார் எண் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விதிகள் சட்ட முன்வரைவில் உள்ளன. ஆனால், அத்தகைய விதிகளைப் பின்பற்றாமலே, சட்ட முன்வரைவில் வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரங்கள் எதையும் பயன்படுத்தாமலே, ஆதார் ஆவணத் தகவல்கள் அனைத்தையும் அரசாங்கத்தால் பெற முடியும். நாம் வாழக்கூடிய இடம், நாம் செல்லக்கூடிய இடம், நாம் கலந்து கொள்ளக்கூடிய நிகழ்ச்சி, நாம் யாரைத் திருமணம் செய்துகொள்கிறோம், யாரைச் சந்திக்கிறோம், தொலைபேசியில் யாருடன் பேசுகிறோம் என்பதையெல்லாம் உளவு அமைப்புகள், சிறுபிள்ளைகளின் விளையாட்டுப்போல, பின்தொடர முடியும். இதுவரையில், எந்த நாடுமே, நிச்சயமாக எந்தவொரு ஜனநாயக நாடுமே, தனது குடிமக்களை இப்படிப்பட்ட ஒரு வலிமையான கண்காணிப்புக் கட்டமைப்புக்குள் சிக்க வைத்ததில்லை.

இது தேவையற்ற கவலை என்று நினைப்பீர்களானால், மீண்டும் சிந்தித்துப் பாருங்கள். ஒட்டுமொத்தமாக எல்லோரையும் கண்காணிப்பு வளையத்திற்குள் வைத்திருக்க வேண்டும் என்பதுதான் எப்போதுமே உளவு அமைப்புகளுடைய கனவாக இருந்து வந்திருக்கிறது. எட்வார்ட் ஸ்னோடென் மற்றும் உள்ளிருந்தே செயல்பட்ட பலரது அனுபவங்கள் இதைத்தான் நமக்குக் காட்டுகின்றன. அனைத்து மட்டங்களிலும் எதிர்க் கருத்து தெரிவிப்போரைக் கண்காணிக்க வேண்டும், கட்டுப்படுத்த வேண்டும் என்று இந்திய அரசு விரும்புவது, சமீபத்திய ஆண்டுகளில் தெளிவாக வெளிப்பட்டுள்ளது. ஒருவரைக் குறிவைத்துத் துன்புறுத்துகிறபோது, ஆயிரம் பேர் அடங்கிப்போய்விடுகிறார்கள். தனிமை உரிமை என்பது எதிர்க் கருத்துச் சுதந்திரத்திற்குத் தேவைப்படுகிற ஒரு மிக முக்கியமான அடித்தளமாகும். குடிமைச் சமூக உரிமைகளும், தனி மனிதச் சுதந்திரமும் மேலும் மேலும் விரிவடைகிற வரலாற்றுக்கு, இத்தகைய மக்கள் திரள் கண்காணிப்பு ஒரு அச்சுறுத்தலாகிறது. கடந்த பல நூற்றாண்டுகளாகவே எளிய மக்கள் ஒடுக்குமுறை அரசாங்கங்களின் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்டே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். கட்டாயப்படுத்துவது, கைது செய்வது, தூக்கிலிடுவது, சித்ரவதை செய்வது போன்றவை பொதுமக்கள் அதிகார அமைப்பின் முன் சரணடைவதை உறுதிப்படுத்துகிற, ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளாகும். நம் விருப்பம்போல் எங்கும் சென்று வர, நாம் விரும்புகிறவர்களோடு கலந்து பழக, எதையும் அச்சமின்றிப் பேச என நாம் அனுபவித்து வருகிற, இன்றளவும் சரியானவை என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள உரிமைகளைப் பெறுவதற்கு நீண்ட நெடிய, கடுமையாள போராட்டங்கள் நடந்துள்ளன. இந்த சுதந்திரமும் உரிமைகளும் இப்போதும் பலருக்கு – குறிப்பாக, தலித் மக்களுக்கும், பாதுகாப்புப் படையினரின் காலணிகளுக்குக் கீழே நசுங்கிக் கொண்டிருப்பவர்களுக்கும் – எட்டாக்கனியாகவே உள்ளன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இது, தற்போதுள்ள உரிமைகளும் சுதந்திரங்களும் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டியதன் அவசியத்தைத்தான் காட்டுகின்றனவேயன்றி, இருக்கிற உரிமைகளும் சுதந்திரங்களும் சுருக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அல்ல.

இந்த வரலாற்றுப் போராட்டங்களை மறந்துவிட்டு, அரசாங்கத்தின் பெருந்தன்மை மீது நம்பிக்கை வைக்குமாறு நம்மை ஆதார் சட்ட முன்வரைவு வற்புறுத்துகிறது. ஜனநாயகம் முடக்கப்பட்டு விடும், குடிமைச் சமூக உரிமைகள் விலக்கி வைக்கப்படும் என்ற உடனடி அபாயம் இல்லைதான். ஆனால், மக்கள் திரளைக் கண்காணிக்கும் வளையத்திற்குள் வைப்பதற்கான கருவியாகவே ஆதார் பயன்படுத்தப்படும் என்பதை ஊகிக்கத் தவறுகிறவர்கள் அப்பாவிகளேயாவர். அரசாங்கம் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கிறதோ இல்லையோ இவ்வாறு கண்காணிப்படுவது ஜனநாயக, குடிமைச் சமூக உரிமைகளைப் பறிக்கிற ஏற்பாடேயாகும். அமெரிக்க வழக்குரைஞரும், எழுத்தாளருமான கிளென் க்ரீன்வால்ட் தனது 'ஒளிவதற்கு இடமில்லை' (No Place to Hide) என்ற புத்தகத்தில் எழுதியிருப்பதைப்போல, ''மக்களைக் கண்காணிப்பதற்கான ஒரு அமைப்பு இருக்கிறது என்றாலே, அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தாண்டி, எதிர்க்கருத்தை ஒடுக்குவதற்கான ஏற்பாடேயாகும்.

**நிச்சயமற்ற பலன்கள்**

அரசாங்கம் பணத்தைக் கொஞ்சம் மிச்சப்படுத்துவதற்கு உதவுவதற்காக, ஆதார் சட்டத்திற்காக வாதாடுவோர் மேற்படி கவலைகளை குறைத்து மதிப்பிடுகிறார்கள். பல்வேறு திட்டங்களிலுள்ள குறைபாடுகளை சரி செய்யக்கூடிய ஆற்றல் ஆதார் எண்ணுக்கு இருக்கிறது

என்பதாக பெரிதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், உண்மையில் திட்டங்களின் பயனாளிகளின் பட்டியல்கள் மோசடியாக இரட்டிப்பாக்கப்படுவதைத் தடுப்பது உள்ளிட்ட சில குறிப்பிட்ட குறைபாடுகளை மட்டுமே ஆதார் எண்ணால் சரிப்படுத்த முடியும். அடையாள மோசடியோடு சம்பந்தப்படாத, பொது விநியோக முறை போன்ற திட்டங்களில் உள்ள குறைபாடுகளைச் சரிப்படுத்துவதற்கு இது சிறிதும் உதவாது. அதேவேளையில், பொது விநியோக முறையில் ஆதார் அட்டைகளால் பெரும் சீர்குலைவுகளை ஏற்படுத்த முடியும் என்பதை சமீபத்திய அனுபவங்கள் காட்டுகின்றன. எங்கெல்லாம் பொது விநியோக முறையில் ஆதார் கட்டாயமாக்கப்பட்டதோ அங்கெல்லாம் தேவையற்ற கால தாமதங்கள், அடையாள அங்கீகாரத்தில் பெரும் தவறுகள், தொடர்புப் பிரச்சனைகள் உள்ளிட்ட பல சிக்கல்கள் எழுந்துள்ளன. பொது விநியோக முறை பெரிதும் தேவைப்படுகிற ஏழ்மையான மாநிலங்கள் இந்த வகையான தொழில்நுட்பத்திற்கு இன்னும் தயாராகவில்லை. பொதுவிநியோக முறையை சீர்படுத்துவதற்கு இதைவிடச் சிறந்த வழிகள் உள்ளன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் போன்ற திட்டங்களுக்கும் இந்த விமர்சனம் பொருந்தும்.

ஜார்கண்ட் மாநிலத்தில் ஆதார் திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறப்பட்டது. ஆனால், அங்கே இதன் பாதிப்புகள் சிலவற்றை நான் மிக நெருக்கமாகப் பார்த்திருக்கிறேன். பொது விநியோக முறை, இந்த மாநிலத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், வங்கி நடைமுறைகள் போன்றவற்றில் ஆதார் திட்டம் புகுத்தப்பட்டது. ஆனால், அதனால் பெரும் சீர்குலைவுதான் ஏற்பட்டது. உதாரணமாக, ஊரக வேலை உறுதித் திட்டத்தில் வேலை அட்டை தொடர்பான பதிவுகளில் “நூறு சதவீத ஆதார் செயல்பாடு” எட்டப்பட வேண்டும் என்ற ஆணையிடப்பட்டது. அந்த இலக்கை எட்டுவதற்காக திட்ட அலுவலர்கள் பெரும் எண்ணிக்கையில் வேலை அட்டைகளை ரத்துச் செய்தனர். கிராம வங்கிகள் ஊரக வேலை உறுதித் திட்டத்தின் தொழிலாளர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யும் பொறுப்பை ஆதார் திட்டம் சார்ந்த “வர்த்தக தொடர்பாளர்கள்” எனப்படுவோரிடம் தள்ளிவிட்டன. ஆனால், மோசமான தொடர்பு ஏற்பாடுகள் காரணமாக அவர்களால் தொழிலாளர்களுக்குரிய ஊதியங்களை வழங்க முடியவில்லை. இப்போது நியாயவிலைக் கடைகளில் உயிரியல் அடையாளப் பதிவுகள் கட்டாயமாக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. இது, ஜார்கண்ட் மாநிலத்தில் பொது விநியோக முறையில் செய்யப்பட்ட சில சீர்திருத்தங்களால் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கெடுத்துவிடக் கூடும்.

UIDAI நிறுவனம் ஏற்படுத்தப்பட்டு 7 ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆனால், இதனைச் செயல்படுத்துவதால் ஏற்படக்கூடிய சவால்களை நியாயப்படுத்தும் வகையில் ஆதார் திட்டத்தின் பலன்கள் இவை இவை என இந்த நிறுவனத்தால் சரியான சான்றுகள் எதையும் முன்வைக்க முடியவில்லை. மாறாக, மக்கள் தொடர்பு அலுவலகங்களைப் பயன்படுத்தி, ஊட்டப்பட்ட சில ஆய்வுகளை நடத்தி, கற்பனையான மதிப்பீடுகளை உருவாக்குகிற (உதாரணமாக சமையல் எரிவாயுக்கான மானியத்தை விலக்குவதால் ஆண்டுக்கு ரூ.12,700 கோடி மிச்சமாகும் என்பது போன்ற கவர்ச்சிகரமான புள்ளிவிவரங்கள் பரப்பப்படுகின்றன) உத்திகள் கையாளப்படுகின்றன. இது மிகவும் கவலையளிக்கும் போக்காகும். எனக்குத் தெரிந்து ஆதார் செயல்பாடுகள் குறித்த ஆழ்ந்த மதிப்பீடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. தோல்வியடைந்த நடவடிக்கைகள், அப்பட்டமான பிரச்சார உத்திகளின் மூலம் வெற்றிகரமான நடவடிக்கைகளாக சித்தரிக்கப்படுகின்றன. ஜார்கண்ட் மாநிலத்தின் ராத்து நகரில் செயல்படும் வர்த்தகத் தொடர்பாளர்களின் செயல்பாடுகள், ராஜஸ்தான் மாநிலத்தின் கோட்காசிம் நகரில் மண்ணெண்ணைக்கான மானியங்கள் பயனாளிகளுக்கு “நேரடியாக மாற்றப்பட்ட” நடவடிக்கைகள் ஆகியவை இதற்கான இரண்டு எடுத்துக்காட்டுகளாகும்.

ஆதார் அட்டையை நியாயப்படுத்தக்கூடிய வகையில், அதனால் சில பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதில் ஐயமில்லை. ஆனால், இதிலுள்ள உறுதியற்ற நிலைமைகளைப் பரிசீலிக்கிறபோது, “குறைந்தபட்ச பயன்பாடு, அதிகபட்ச பாதுகாப்பு” என்பதே மையமான கொள்கையாக இருக்க வேண்டும். ஆனால், அரசாங்கமோ இதற்கு நேரெதிராக – அதிகபட்ச பயன்பாடு, குறைந்தபட்ச பாதுகாப்பு என்ற அணுகுமுறையைத்தான் மேற்கொள்கிறது. ஆதார் சட்ட முன்வரைவில் சில சாதகமான பாதுகாப்புகள் இருக்கவே செய்கின்றன. ஆனால், ஆதார் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தவோ, மக்கள் கூட்டத்தைக் கண்காணிப்பதற்காக இது தவறாகப் பயன்படுத்தக்கூடும் என்பதைத் தவிர்க்கவோ எந்த நடவடிக்கையும் ஆதார் சட்டத்தில் இல்லை. இருக்கிற சில பாதுகாப்பு ஏற்பாடுகள் பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு மாறாக, UIDAI நிறுவனத்தைத்தான் பாதுகாக்கின்றன. ஒரு “புரட்சி” நடக்கும் காலகட்டத்தில் நாம் இருக்கிறோம் என்று ஆதார் ஆதரவாளர்கள் நம்மிடம் சொல்கிறார்கள். அவர்களுடைய உற்சாகத்திற்கு உரிய மதிப்பை நாம் அளிக்கலாம். ஆயினும், இந்த திட்டத்தை நாம் ஒரு சூழ்ச்சி என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும். உச்சநீதிமன்ற ஆணைகளைப் புறக்கணிப்பதற்கும், சமுதாயக் கட்டுப்பாட்டிற்கான ஒரு கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கும் ஆதார் சட்ட முன் வரைவு அரசாங்கத்திற்கு உதவுகிறது. மேலும், ஒரு பண மசோதா என்ற பெயரில் இது

நிறைவேற்றப்படுகிறது. அதன்மூலம், இது குறித்த ஆழ்ந்த விவாதங்கள் எதுவும் நடைபெறாமல் தடுக்கப்படுகிறது. ஜனநாயகத்துக்குப் புறம்பான இந்த வழிமுறை ஆதார் அட்டை குறித்த கவலையைத்தான் உறுதிப்படுத்துகின்றன.

(கட்டுரையாளர் ராஞ்சி பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறை சிறப்புப் பேராசிரியர்)

**ஆதாரம்: தி இந்து, மார்ச் 15, 2016**

# ஆதார் அட்டையால் எதிர்மறை விளைவுகளே ஏற்படும்: சமூக நலச் செயல்பாட்டாளர்கள்

## *ஆதார் என்பது ஒரு வளர்ச்சி சார்ந்த தொழில்நுட்பம் அல்ல. மாறாக, மக்களைக் கண்காணிப்பதற்கான தொழில்நுட்பமே*

நாடாளுமன்ற மக்களவையில் பண மசோதா என்ற பெயரில் நிறைவேற்றப்பட்ட ஆதார் சட்ட முன்வரைவு – 2016, இந்தியாவின் ஏழைகளுக்கும் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டவர்களுக்கும் நாசகரமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று சமூக நலச் செயல்பாட்டாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். புதுதில்லியில் மார்ச் 14 அன்று நடைபெற்ற ஒரு ஊடக நிகழ்வில் பங்கேற்றவர்கள் இவ்வாறு கூறினர். மாநிலங்களவையில் ஆதார் சட்ட முன்வரைவு மீதான விவாதத்தை மத்திய பாஜக கூட்டணி அரசு தவிர்த்துவிட்டது. இதைக் கடுமையாக விமர்சிக்கும், உணவு உரிமை பிரச்சார இயக்கத்தைச் சேர்ந்த கவிதா ஸ்ரீவத்ஸவா, ''ஆதார் சட்டம் குறித்து மாநிலங்களுக்கு அவற்றுக்கே உரிய கவலைகள் இருக்கின்றன. ஆகவே, இதுகுறித்த விவாதம் மாநிலங்களவையில் நடைபெறுவது அவசியம். எனவே, ஜனநாயகமற்ற வழிமுறையில் இந்த சட்ட முன்வரைவு மக்களவையில் நிறைவேற்றப்பட்டதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்,'' என்று கூறினார்.

ஆதார் அட்டை உள்ளவர்களுக்கே சமூக நலத்திட்டங்களின் பலன்கள் உறுதியாகக் கிடைக்கச் செய்யப்படும் என்று அரசாங்கம் தனது நடவடிக்கையை நியாயப்படுத்திக் கூறுகிறது. ஆனால் இது நடைமுறைக்கு ஒத்துவராதது என்று வேலை உறுதிக்கான மக்கள் நடவடிக்கை அமைப்பைச் சேர்ந்த நிகில் டே கூறுகிறார்.

''ஆதார் அட்டையால் திட்டங்களின் செயல் திறன் அதிகரிப்பும், பெருமளவுக்கு மக்கள் பலனடைவார்கள், ஊழலைப் பெருமளவுக்குக் குறைக்க முடியும் என்றெல்லாம் அரசாங்கம் கூறுகிறது. ஆனால் ராஜஸ்தானில் செயலின்மை என்பதுதான் மேலும் மேலும் அதிகரிக்கிறது. பெருமளவு மக்கள், திட்டங்களின் பயன்களைப் பெறுவதிலிருந்து தள்ளிவைக்கிறார்கள். ஊழல் அதிகரித்திருக்கிறது'' என்று கூறுகிறார் அவர். ''உதாரணமாக, டோங்க் மாவட்டத்தில் முழுத்தகுதியுள்ள பயனாளிகளில் 80 சதவீதத்தினர் விலக்கிவைக்கப்பட்டுள்ளனர். இதர மாவட்டங்களில் செயலின்மை என்பது 60 சதவீதம் அளவுக்கு அதிகரித்துள்ளது. பொது விநியோக முறையில் தவறானவர்களுக்குப் பலன்கள் சென்றடைவதை சிறிதும் குறைக்க முடியவில்லை. குறிப்பாக, உணவு தானியங்கள் வைக்கப்பட்டிருக்கும் கிடங்குகளிலிருந்து கடைகளுக்குக் கொண்டு செல்லப்படும்போது நடைபெறும் முறைகேடுகளைத் தடுக்க முடியவில்லை. ஊழலையும் கொஞ்சமும் கட்டுப்படுத்த முடியவில்லை,'' என்றும் அவர் கூறினார்.

உயிரியல் அடையாளப் பதிவு நடவடிக்கையால் பயனாளிகளுக்குப் பெரும் தொல்லைகள் ஏற்பட்டுள்ளன என்று சமூகச் செயல்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ''சில நேரங்களில் கைரேகைப் பதிவுகள் பொருந்துவதில்லை. மற்ற நேரங்களில் இணையத் தொடர்புப் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. பல முறை திரும்பத் திரும்ப மக்கள் வரவழைக்கப்பட்டு தொந்தரவு செய்யப்படுகிறார்கள். மக்களுக்கு உரிய திட்டப் பலன்களை மறுப்பதற்கான சாக்காக ஆதார் திட்டத்தை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்கிறது,'' என்கிறார் ஸ்ரீவஸ்தவா.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம், ஓய்வூதியத் திட்டம், உணவுப் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் கீழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்புகளை ஆதார் அட்டையோடு சம்பந்தப்படுத்தக் கூடாது என்று சமூக நல அமைப்புகள் வலியுறுத்துகின்றன. ''அரசாங்கம் கூறுவது போல ஆதார் என்பது ஒரு வளர்ச்சி சார்ந்த தொழில்நுட்பம் அல்ல. மாறாக, மக்களைக் கண்காணிப்பதற்கான தொழில்நுட்பமே. மக்களுக்குத் திட்டப் பலன்கள் கிடைப்பதல்ல, அவர்களது தனிமை உரிமைகளில் தலையிடுவதே இதன் அடிப்படை,'' என்று ஸ்ரீவஸ்தவா குறிப்பிடுகிறார்.

மத்திய அரசின் 2016ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் குறித்த கலந்தாய்வுக்காக, 7 அமைப்புகளைச் சேர்ந்த செயல்பாட்டாளர்கள் கூடியிருந்தபோது இந்தக் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

**தி இந்து, மார்ச் 15, 2016**

# வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா காவல் நிலையத்தினரால் ஷமீல் பாஷா சட்ட விரோதமாக காவலில் வைக்கப்பட்டதாலும் சித்ரவதை செய்யப்பட்டதாலும் மரணமடைந்தது தொடர்பான உண்மை அறியும் குழு விசாரணை அறிக்கை


*உண்மையறியும் குழுவின் விசாரணை 2015 ஜூலை 1ல் நடைபெற்றது*

ஷமீல் பாஷா (26) (த/பெ. ஷாஜஹான்) பள்ளிகொண்டா காவல் நிலைய காவலர்களால் 2015 ஜூன் 15 முதல் 18 வரை சட்ட விரோதமாகக் காவலில் வைக்கப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டார். காவலர் சித்ரவதையால் ஏற்பட்ட காயங்களுக்காக அவர் ஆம்பூர் அரசு மருத்துவமனையிலும் பின்னர் வேலூர் அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றார். 2015 ஜூன் 26 அன்று அவர் சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் உடலின் பல்வேறு அங்கங்களிலும், நரம்புத் தொகுதியிலும் ஏற்பட்டிருந்த பலத்த காயங்களால் மரணமடைந்தார்.

பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் வந்த செய்திகளின் மூலம் இந்தச் சம்பவம் குறித்து காவல்நீதி மற்றும் சித்ரவதை தடுப்பு பிரச்சார அமைப்பு (CCJAT) கவனத்திற்கு வந்தது. கே.ஏ.மேத்யூஸ் (மாநில குழு உறுப்பினர், CCJAT), என். லலிதா (வழக்குரைஞர்), அருட்சகோதரி. சுதா (பெண்ணுரிமை செயல்பாட்டாளர்), எஸ். விஜயசங்கர் (வழக்குரைஞர்), ஆர். ரோஷன் சுந்தர், பீ. சரஸ்வதி, பி. ராஜ் கபில் (மனித உரிமை ஆதரவாளர்கள்) ஆகியோர் கொண்ட உண்மையறியும் குழு அமைக்கப்பட்டது. 2015 ஜூலை அன்று, ஷமீல் பாஷாவின் குடும்பத்தினரை இக்குழுவினர் சந்தித்துப் பேசினர், மருத்துவமனைகளுக்குச் சென்று பார்வையிட்டனர். காவல் நிலையங்களுக்கும். வேறு பல அலுவலகங்களுக்கும் சென்றனர். இப்பிரச்சனை தொடர்பான தகவல்களைத் திரட்டினர்.

உண்மையறியும் குழுவால் பேட்டி காணப்பட்டவர்களின் பட்டியல்:

1. என்.கே. முகமது கவுஸ், (ஷமீல் பாஷாவின் மாமனார்)
2. நூர்–இ–ஷெஸ்மி (ஷமீலின் மனைவி)
3. ஜரீனா பானு (ஷமீலின் மாமியார்)
4. கலீல் பாய் (ஷமீலின் தாயாரின் சகோதரர்)
5. டாக்டர்.கென்னடி (தலைமை மருத்துவ அலுவலர், ஆம்பூர் அரசு மருத்துவமனை)
6. பழனி (பவித்ராவின் கணவர்)
7. சூர்ய பிரகாஷ் (பழனியின் அண்ணன்)
8. பழனியின் தாயார்
9. எஸ்.ஜே. மண்டல் (திப்பசமுத்திரம் கிராம ஊராட்சித் தலைவர்)
10. சிங்காரம் (பள்ளிகொண்டா காவல் நிலைய துணை ஆய்வாளர்)



ஷமீல் பாஷா

**என்.கே. முகமது கவுஸ் (48)** (த/பெ. என்.எம். கியாசுதீன்) வாக்குமூலம் (01.07.2015 காலை 11:30 மணி):

நான் இந்தப் பகுதியில் கடந்த 8 ஆண்டுகளாக குடியிருக்கிறேன். எனக்கு மூன்று மகள்களும் ஒரு மகனும் உள்ளனர். மூத்த மகள் நூர்–இ–ஷெஸ்மிக்கு 18 வயது. என் மூத்த மகளை ஷாஜஹான் மகன் ஷமீல் பாஷாவிற்கு 2014 செப்டம்பர் 15ல் திருமணம் செய்து கொடுத்தோம். என் மகள் பத்தாம் வகுப்பு வரை படித்தார். என் மருமகன் ஷமீல் பாஷாவின் குடும்பம் முதலில் ஆம்பூரில் குடியிருந்தது. அவர்களுடைய மகள் திருமணத்திற்காக ஆம்பூர் வீட்டை விற்றுவிட்டு ஈரோட்டில் குடியேறினார்கள். என் மகளின் திருமணத்திற்கு பிறகு மருமகனும், மகளும், மருமகனின் பெற்றோரும் ஈரோட்டில் ஒன்றாக குடியிருந்து வந்தார்கள். மருமகன் ஈரோட்டில் உள்ள கல்யாண் ஜூவல்லர்ஸ் கடையில் வேலை செய்து வந்தார்.

ஜூன் இரண்டாவது வாரம், மருமகனும் மகளும் ஆம்பூருக்கு மகளின் வயது முதிர்ந்த பாட்டியைப் பார்ப்பதற்காக ஆம்பூருக்கு வந்தனர். பாட்டி கடுமையாக உடல் நலம் குன்றியிருந்தார். மகளும் மருமகனும், மருமகனின் பெற்றோரும் ஆம்பூருக்கு வந்தார்கள். மருமகனும் மகளும் எங்கள் வீட்டில் தங்கியிருந்தார்கள். மருமகனின் பெற்றோர் ஆம்பூரில் அவர்களுடைய சகோதரரின் வீட்டில் தங்கியிருந்தார்கள்.

2015 ஜூன் 15 அன்று, காலை 7.30 மணியளவில், மருமகனின் மாமா கலீல் பாய் எங்கள் வீட்டிற்கு வந்தார். ஒரு பெண் காணாமல் போனது தொடர்பாக விசாரிப்பதற்காக சிலர் மருமகனின் வீட்டிற்கு வந்ததாக தெரிவித்த அவர்,

ஷமீல் பாஷா தன்னுடைய வீட்டிற்கு வந்து அந்த நபர்களுடன் பேச வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஆகவே, நானும், மருமகன் ஷமீல் பாஷாவும் கலீல் பாயுடன் அவரது வீட்டிற்குச் சென்றோம். கலீல் பாய் வீட்டில் 15 முதல் 20 பேர் இருந்தார்கள். உயர்நீதி மன்ற ஆணைப்படி பவித்ரா என்ற பெண்ணைத் தேடி வருவதாகவும், அது தொடர்பாக ஷமீல் பாஷாவைத் தேடியதாகவும் அவர்கள் கூறினார்கள். ஷமீல் பாஷாவிற்கு பவித்ராவுடன் தொடர்பு இருந்ததாகவும், பவித்ராவை ஷமீல் கடத்தி விட்டதாகவும், 2015 மே மாதத்திலிருந்து பவித்ராவைக் காணவில்லை என்றும், இது குறித்து பள்ளிகொண்டா காவல்நிலையத்தில் தாங்கள் புகார் பதிவு செய்திருப்பதாகவும் கூறினார்கள். ஷமீல் பாஷாவை நாங்கள் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். ஷமீல் பாஷாவைக் கொண்டு செல்ல வேண்டுமென்பதில் அவர்கள் பிடிவாதமாக இருந்தார்கள். ஆகவே, இது போலீஸ் கேஸ் என்பதால் நாங்கள் ஷமீல் பாஷாவை போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைப்பதாகக் கூறினோம். அதன்படி, ஷமீல்பாஷாவை நாங்கள் ஆம்பூர் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றோம். அங்கிருந்த சப்–இன்ஸ்பெக்டர், பெண் காணவில்லை என்ற புகார் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், தனக்கு அதை விசாரிக்க அதிகாரம் இல்லையென்றும் சொன்னார். எங்களை பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகச் சொன்னார்.

பகல் 12 மணியளவில் நாங்கள் பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷனை அடைந்தோம். அங்கே போலீஸ் இன்ஸ்பெக்டர் இல்லையென்பதால், எங்களை போலீஸ் ஸ்டேஷனிலேயே காத்திருக்கச் சொன்னார்கள். மருமகன் ஷமீல் பாஷாவை சட்டை, பேண்ட் கழற்றிவிட்டு உள்ளாடையோடு உட்கார்ந்திருக்குமாறு அங்கிருந்த காவல்துறையினர் சொன்னார்கள். மருமகனின் கையிலிருந்த மொபைல் போனை கொடுக்கச் சொன்ன அவர்கள் அதிலிருந்த சிம் கார்டை எடுத்துவிட்டார்கள். இது ஒரு சம்பிரதாய விசாரணைதான் என்றும் அவர்கள் சொன்னார்கள். விசாரணை முடிந்தபிறகு மருமகனை வீட்டிற்கு அனுப்பி விடுவார்கள் என்ற எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டது. ஆனால் 2015 ஜூன் 16 அதிகாலை 2 மணி வரை மருமகனை போலீஸ் ஸ்டேஷனிலேயே வைத்திருந்தார்கள். எங்களை வீட்டுக்குத் திரும்பிப் போகச் சொன்ன போலீசார், இன்ஸ்பெக்டர் மார்ட்டின் பிரேம்ராஜ் வந்து விசாரணை நடத்திய பிறகுதான் ஷமீல் பாஷாவை வீட்டுக்கு அனுப்ப முடியும் என்றும் சொன்னார்கள். அவர்கள் சொன்னதை நம்பி நாங்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தோம். காலையில் குளித்து சாப்பிட்டுவிட்டு 9 மணியளவில் பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷனுக்கு மறுபடியும் போனோம். அங்கே மருமகன் ஜட்டியோடு தரையில் உட்கார்ந்திருந்தார், அவருடைய கைகளில் இன்னொரு ஆளுடன் சேர்த்து விலங்கு போடப்பட்டிருந்தது. மருமகன் மிகவும் சோர்வாகக் காணப்பட்டார். அவருடன் நாங்கள் பேசுவதற்கு போலீசார் அனுமதிக்கவில்லை. விசாரணை நடந்துகொண்டிருக்கிறது என்று கூறிய போலீசார் எங்களை ஸ்டேஷனுக்கு வெளியே இருக்குமாறு சொன்னார்கள். 16ஆம் தேதி மாலையில்கூட ஷமீல் பாஷா பள்ளிகொண்டா ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருந்தார். இரவு 9 மணிக்கு பிறகு போலீஸ்காரர்கள் என்னை வீட்டுக்குப் போகுமாறு சொன்னார்கள். விசாரணை முடிந்த உடனேயே மருமகனை வீட்டுக்கு அனுப்பிவிடுவதாக போலீசார் என்னிடம் சொன்னார்கள். பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷனில் ஷமீல் பாஷா இரண்டு நாட்கள் வைக்கப்பட்டிருந்தார்.

2015 ஜூன் 17 அன்று நான் மீண்டும் பள்ளிகொண்டா ஸ்டேஷனில் காலை 9 மணிக்குப் போனேன். அங்கே மருமகனைப் பார்க்க முடியவில்லை. எனக்கு கவலை ஏற்பட்டது, மருமகன் எங்கே இருக்கிறார் என்று நான் கேட்டபோது விசாரணைக்காக அவரை கெஸ்ட் ஹவுஸ்சுக்கு கொண்டு சென்றிருப்பதாகவும், விசாரணை முடிந்தபிறகு அவரை வீட்டுக்கு அனுப்பி வைப்பதாகவும் சொன்னார்கள். அன்று முழுக்க நான் ஸ்டேஷனில்தான் இருந்தேன். போலீஸ்காரர்கள் இதையேதான் திரும்பத் திரும்ப சொன்னார்கள். 18ஆம் தேதியும் இதேபோல்தான் நடந்தது. இந்த 4 நாட்களும் மருமகன் ஷமீல் பாஷா போலீஸ் காவலில்தான் இருந்தார்.

2015 ஜூன் 19ஆம் காலை 11 மணியளவில் பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷனில் இருந்து எனக்கு ஒரு போன் வந்தது. விசாரணை முடிந்துவிட்டது என்றும், ஸ்டேஷனுக்கு வருமாறும் என்னிடம் சொல்லப்பட்டது. அங்கே நான் வேகமாகச் சென்றேன். போலீசார் எழுதி வைத்திருந்த சில பேப்பர்களில் கையெழுத்துப் போடுமாறு என்னிடம் சொன்னார்கள். இன்ஸ்பெக்டர் மார்ட்டின் பிரேம்ராஜ் விசாரணையின்போது ஷமீல் பாஷாவை அடித்ததாகவும், அவர் எதையும் சொல்லவில்லை என்றும், அவர் குணமாக நான்கைந்து நாட்கள் ஆகும் என்றும் சொன்னார். ஷமீல் பாஷாவுக்கு ஏதோ ஊசி போட்டிருப்பதாகவும் இன்ஸ்பெக்டர் சொன்னார். மருமகன் மீது குறிப்பான குற்றச்சாட்டு எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார். என் மருமகன் திருமணமான பெண்ணுடன் ஓடிப்போகிற ஆள் இல்லை என்று நான் அவரிடம் சொன்னேன். 7 நாட்களுக்குள், பழனியின் மனைவி பவித்ரா பற்றி ஏதாவது தகவல் தெரியுமானால் அவரைக் கண்டுபிடித்து பள்ளிகொண்டா போலீஸ்காரரிடம் எழுதிக்கொடுக்குமாறு இன்ஸ்பெக்டர் என்னிடம் சொன்னார். போலீஸ்காரர் சொன்னபடி நான் கையெழுத்து போட்டேன்.

ஷமீல் பாஷாவின் உறவினருடன் உண்மையறியும் குழுவினர்



ஷமீல் பாஷாவை என்னிடம் ஒப்படைத்தபோது அவருடைய மோசமான நிலைமையைப் பார்த்து நான் அதிர்ச்சியடைந்தேன். அவருடைய இரண்டு கைகளும் வீங்கியிருந்தன. அவரால் கைகளைத் தூக்கவே முடியவில்லை. அவரது உடல் முழுக்க கன்றிப்போய் இருந்தது. அவருடைய இடது தோளிலும் வலது தோளிலும் சிறாய்ப்புகள் இருந்தன. கடுமையான வலியோடு அவர் இருந்தார். உடலில் காயம்பட்டிருந்த பகுதிகள் கறுத்துப்போய் இருந்தன. தூக்கக் கிறக்கமாக இருந்த அவரால் நிற்க முடியவில்லை. அவரை நான் வீட்டுக்குக் கொண்டு வந்தேன். அவர் குளிப்பதற்கு உதவி செய்தேன். அப்போது உடல் முழுக்க கன்றிப்போய் இருந்ததை நான் பார்த்தேன். அவருடைய அந்தரங்க உறுப்புகள் கன்றிப்போயிருந்தன. விசாரணையில் என்ன நடந்தது என்று நான் கேட்டபோது, ஒரு கெஸ்ட் ஹவுஸ் கட்டடத்திற்குள் இன்ஸ்பெக்டர் மார்ட்டின் பிரேம்ராஜ் மற்ற போலீஸ்காரர்களோடு சேர்ந்து தொடர்ச்சியாக மது அருந்திக்கொண்டிருந்ததாகவும், தன்னை அந்தரங்க உறுப்பில் விடாமல் பூட்ஸ் காலால் உதைத்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்குமாறு நிர்ப்பந்தித்தாகவும் மருமகன் சொன்னார். “நான் ஏற்கனவே பேரணாம்பேட்ல ஒரு முஸ்லிம் பையன இதே மாதிரி விசாரிச்சு கதையை முடிச்சிருக்கேன். உன் கதைய முடிக்க ரொம்ப நேரம் ஆகாது. நீ இன்னும் நாலு நாள்தான் உயிரோடு இருப்ப .....” என்றும் இன்ஸ்பெக்டர் பிரேம்ராஜ் என் மருமகனை மிரட்டியிருக்கிறார். குளித்து முடித்த பிறகு ஷமீல் பாஷா மிகவும் சோர்வாக இருந்தார். அவருக்கு நாங்கள் ஜூஸ் கொடுத்தோம். அதை அவர் குடித்தார். சிறிது நேரம் கழித்து அவர் வாந்தி எடுக்கத் தொடங்கினார். அவரால் வலியைத் தாங்கமுடியவில்லை என்பதால் மாலை 6 மணியளவில் அவரை நாங்கள் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தோம்.

மருத்துவமனையில் சேர்த்தபோது, பணியிலிருந்த டாக்டரிடம் நான் போலீஸ் சித்ரவதையால் மருமகனுக்குக் காயம் ஏற்பட்டது என்று சொன்னேன். ஆம்பூர் மருத்துவமனையில் ஷமீல் பாஷா 3 நாட்கள் இருந்தார். ஜூன் 22 அன்று அவரது உடல் நிலைமை மோசமானது. அங்கே எம்ஆர்ஐ ஸ்கேன் வசதி இல்லாததால், ஷமீல் பாஷாவை வேலூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுமாறு டாக்டர்கள் சொன்னார்கள். அதன்படி நாங்கள் அன்று மாலை 4 மணியளவில் ஷமீல் பாஷாவை வேலூர் அரசு மருத்துவமனையில் ஒரு உள்நோயாளியாக சேர்த்தோம். வேலூர் மருத்துவமனையில் எம்ஆர்ஐ ஸ்கேன் எடுக்கப்பட்டது சிகிச்சை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேஷனிலிருந்து, போலீஸ் அதிகாரிகள் முரளி, ஐயப்பன் இருவரும் என்னுடன் போன் மூலம் தொடர்பு கொண்டு, “ஏதோ தெரியாம நடந்து போச்சு... காசு வேணா வாங்கிக்கோங்க ... கேஸ்லாம் போட வேணாம்... காம்ப்ரமைசா போயிடுவோம்” என்று சொன்னார்கள். அவர்கள் பள்ளிகொண்டா ஸ்டேஷனில் கான்ஸ்டபிள்களாக வேலை செய்கிறார்கள் என்று பிறகு எனக்குத் தெரிய வந்தது.

ஜூன் 26 அன்று, வேலூர் மருத்துவமனையில் இருந்த டாக்டர்கள், போலீஸ் தாக்குதல்களால் ஏற்பட்ட காயங்களால் ஷமீல் பாஷாவுக்கு ரத்தம் கட்டியிருப்பதாகவும், அவரை சென்னையில் உள்ள ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சேர்க்குமாறும் சொன்னார்கள். ஆகவே, ஷமீல் பாஷாவை நாங்கள் சென்னை அரசு மருத்துவமனைக்கு மாற்றினோம். அங்கே அவர் மாலை 4 மணிக்கு, காயங்கள் காரணமாக உயிரிழந்தார்.

எனது மருமகனை நான் இழந்துவிட்டேன். 8 மாதங்களுக்கு முன் அவரைத் திருமணம் செய்துகொண்ட எனது மகள் இப்போது ஆதரவற்றவராகியிருக்கிறார். விசாரணை என்ற பெயரில் எனது மருமகனை சித்ரவதை செய்த ஆய்வாளர் மார்ட்டின் பிரேம்ராஜூம், அவருடைய காவலர்களும் அவர்களது தவறான நடவடிக்கைகளுக்காகவும் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதற்காகவும் டிஸ்மிஸ்

செய்யப்பட்டு வழக்கு, அவர்கள் மீது வழக்கு தொடரப்பட வேண்டும்.

**நூர்–இ–ஷெஸ்மி (ஷமீலின் மனைவி):**

எங்க அப்பாவை எனக்கு மிகவும் பிடிக்கும். அவரும் எனக்கு, எனது திருமணத்திற்குப் பிறகும் கூட ஊட்டி விடுவார். அதே கையால், அவர் எனது கணவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு சென்றார். கடைசியில் பிணமாகக் கொண்டு வந்தார். குச்சிப்பாளையத்திலிருந்து வந்தவர்கள் சொன்னதற்காக எனது கணவரை எனது அப்பா போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போகாமல் இருந்திருந்தால் கணவர் கொல்லப்பட்டிருக்க மாட்டார். இப்ப என் கணவர் இல்லை. நான் பத்தாம் வகுப்புவரை படித்திருக்கிறேன். மேலே படிப்பதற்குகூட எங்களுக்கு வசதியில்லை. இந்த நிலைமையில் நான் எங்கள் அப்பாவுக்கு சுமையாக இருக்க விரும்பவில்லை. எங்களுக்கு உதவி செய்ய யாரும் இல்லை. எனக்குக் கண்டிப்பாக ஒரு அரசாங்க வேலை தேவைப்படுகிறது. நான் ஆழமான மன உளைச்சலிலும் விரக்தியிலும் இருக்கிறேன்.

பவித்ரா பற்றி என் கணவர் என்னிடம் எப்போதும் சொன்னதில்லை. அவரை போலீஸ்காரர்கள் சித்திரவதை செய்து கொன்றுவிட்டார்கள்.

**ஜரினா பானு (ஷமீலின் மாமியார்)**

என் மகளின் வாழ்க்கை எப்படி ஆகிவிட்டது என்று பாருங்கள் (அழத்தொடங்குகிறார்). என்னால் இதை கொஞ்சமும் தாங்க முடியவில்லை. என்னுடைய நிலைமையைப் பாருங்கள் என் கணவர் ஆட்டோ ஓட்டிதான் ஒரு பெரிய குடும்பத்தை காப்பாற்ற வேண்டியிருக்கிறது. எனக்கு மூன்று மகள்களும் ஒரு மகனும் இருக்கிறார்கள். என் மகளுக்கு ஒரு அரசாங்க வேலை வாங்கித் தருமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். எங்களுக்கு உதவி செய்ய யாரும் இல்லை.

ஷமீல் மிகவும் நல்ல பையன். அவருடைய நடவடிக்கைகள் அவர் மீது எங்களுக்கு எந்த சந்தேகத்தையும் ஏற்படுத்தியதில்லை. என் மகளை அவர் நன்றாக கவனித்துகொண்டார். அவருடைய சாவுக்கு முன்பாக பவித்ரா பற்றி நாங்கள் எதுவும் கேள்விபட்டதில்லை.

**கலீல்பாய் (ஷமீலின் தாய்மாமன்):**

ஷமீல் பாஷா எனது தங்கையின் மகன். அவர்கள் குடும்பம் இங்கேதான் வாழ்ந்தது. ஷமீலின் சகோதரி திருமணத்திற்காக அவர்கள் சொந்த வீட்டை விற்றுவிட்டு ஈரோட்டில் குடியேறிவிட்டார்கள். ஷமீல் தனது மனைவியின் பாட்டி, கடுமையாக உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்ததால் அவரைப் பார்ப்பதற்கென்று மனைவியுடன் ஆம்பூருக்கு வந்திருந்தார். 2015 ஜூன் 15 அன்று காலையில் கிட்டத்தட்ட 15–20 பேர் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். ஷாஜகானும் ஷமீல் பாஷாவும் எங்கே இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். ஷாஜகான் என்னுடைய சகோதரியின் கணவர். அவர்களிடம் நான் காரணம் கேட்டபோது, குச்சிப்பாளையத்தில் வசிக்கும் பழனி என்பவரின் மனைவி பவித்ராவை ஷமீல் பாஷா கடத்தி வந்துவிட்டதாகவும், அந்தப் பெண்ணுடன் ஷமீலுக்குத் தொடர்பு இருப்பதாகவும் 20 நாட்களாக பவித்ராவைக் காணவில்லை என்றும் அவர்கள் சொன்னார்கள்.

பிரச்சனை சீரியஸ்சானதாக இருந்ததால் நான் முகமது கவுஸ் வீட்டிற்கு விரைந்து சென்று விஷயத்தைச் சொன்னேன். நானும் ஷமீல் பாஷாவும் அவருடைய மாமனார் முகமது கவுஸ்சும் எங்கள் வீட்டிற்குத் திரும்பி வந்தோம். அங்கே இருந்தவர்கள் பதட்டத்தோடு இருந்தார்கள். எங்களை மோசமான வார்த்தைகளில் திட்டத்தொடங்கினார்கள். நிலைமை கட்டுப்பாடில்லாமல் போனதால் நாங்கள் ஆம்பூர் நகர போலீஸ் ஸ்டேசனுக்குப் போனோம். அங்கே சப்–இன்ஸ்பெக்டர் எங்களை பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேசனுக்குப் போகச் சொன்னார். பெண் காணாமல் போனது பற்றி அங்கேதான் புகார் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொன்னார். பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேசனுக்கு நாங்கள் பகல் 12 மணி அளவில் நாங்கள் போய்ச் சேர்ந்தபோது, அங்கே இன்ஸ்பெக்டர் மாட்டின் ப்ரேம்ராஜ் இல்லை. அங்கே இருந்த போலீஸ்காரர்கள் ஷமீல் பாஷாவை பிடித்துக்கொண்டு, அவருடைய பேண்ட், சட்டையை கழற்றச் சொன்னார்கள். தரையில் ஜட்டியோடு மட்டும் உட்காரச் சொன்னார்கள். அவருடைய மொபைல் போனை வாங்கிக்கொண்டு அதிலிருந்த சிம் கார்டை எடுத்துவிட்டார்கள். எங்களை ஸ்டேசனுக்கு வெளியே போகச் சொன்னார்கள். அன்று நாள் முழுக்க ஷமீல் பாஷாவை ஸ்டேஷனில் வைத்திருந்தார்கள். மறுநாள் நானும் ஷமீல் பாஷாவின் தந்தையும் பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேனுக்குப் போனபோது, போலீஸ்காரர்கள் எங்களிடம் ஷமீல் பாஷாவை விசாரணைக்காக ஈரோட்டுக்குக் கொண்டு போக வேண்டியிருக்கலாம் என்று சொன்னார்கள். ஆகவே, சமீலின் தந்தை ஈரோட்டுக்குப் போய்விட்டார். இதனிடையே, கர்ப்பமாக இருக்கிற எனது மகள் சேர்க்கப்பட்டிருக்கிற மருத்துவமனையிலிருந்து எனக்கு போன் வந்தது. ஆகவே, நான் மருத்துவமனைக்குப் போய்விட்டேன். அதன் பிறகு நான் ஷமீலின் தந்தையுடன் போனில் தொடர்புகொண்டபோது ஷமீல் இன்னமும் போலீஸ் காவலில்தான் இருக்கிறார் என்று தெரிவித்தார். போலீஸ்காரர்கள் அவரைத் திருப்பி அனுப்பிய பிறகு, அவர் சீரியஸ்சாக இருக்கிறார். மருத்துவமனையில்

சேர்க்கப்பட்டிருக்கிறார் என்பதை நான் தெரிந்துகொண்டேன். ஜூன் 26 அன்று மாலை 5 மணியளவில் நான் சென்னைக்கு புறப்பட்டபோது, என் சகோதரியிடமிருந்து ஷமீல் பாஷா மருத்துவமனையில் இறந்துவிட்டதாக தகவல் வந்தது. ஷமீலின் நுரையீரல்கள் காயங்களால் வீங்கிவிட்டதாகவும் அதனால் அவர் உயிரிழந்துவிட்டதாகவும் சென்னை அரசு மருத்துவமனை டாக்டர்கள் தன்னிடம் சொன்னதாக ஷாஜகான் என்னிடம் கூறினார்.



**டாக்டர் கென்னடி, தலைமை மருத்துவமனை அலுவலர், ஆம்பூர் அரசு மருத்துவமனை**

இது மருத்துவமும் சட்டமும் சம்பந்தப்பட்ட வழக்காக இருப்பதால், இந்த வழக்கு சம்பந்தமான ஆவணங்களையோ தகவல்களையோ என்னால் தர இயலாது. ஆனால், நீங்கள் ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுக்கலாம். அதனை நான் என்னுடைய மேலதிகாரிக்கு அனுப்புகிறேன். என்னுடைய மேலதிகாரிக்கு அனுப்பினாலும் கூட, இணை இயக்குநர் அனுமதி கொடுத்தால்தான் நான் ஆவணங்களைத் தர முடியும். நான் நோயாளிகளைப் பார்க்க 30 நிமிடங்கள் ரவுண்ட்ஸ் போயிருந்தபோது ஷமீல் பாஷா இல்லை. பிறகுதான் நான் அவரைப் பார்த்தேன் அவருக்கு தோல்களில் பலத்த காயங்கள் இருந்தன. இங்கே, எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி இல்லாததால் நாங்கள் ஷமீல் பாஷாவை வேலூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு போகுமாறு பரிந்துரைத்தோம்.

**சூர்ய பிரகாஷ் – முன்னாள் ராணுவத்தினர், பழனியின் அண்ணன்**

பவித்ரா எனது தங்கை மகள். பழனி என்னுடைய தம்பி. எனக்கு 57 வயதாகிறது. எனக்கு திருமணமாகி 21 ஆண்டுகளாகின்றன. எங்களுக்குக் குழந்தை இல்லை. எங்களது சொத்துகளை பாதுகாப்பதற்காக நாங்கள் பழனிக்கும் பவித்ராவிற்கும் திருமணம் செய்து வைத்தோம். 7 ஆண்டுகளுக்கு முன் அவர்களுடைய திருமணம் நடைபெற்றது. அவர்களுக்கு 5 வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது. பவித்ரா காணாமல் போய்விட்டதால் அந்தக் குழந்தை இப்போது பவித்ராவின் தாயாரிடம் இருக்கிறது. 6 மாதங்களாக பவித்ராவிடம் மொபைல் ஃபோன் எதுவும் கிடையாது.

2015 மே 24 அன்று மாலையில் ஒரு திருமணத்திற்காக நாங்கள் போயிருந்தோம். அப்போது பவித்ரா தன்னுடைய துணிமணிகளையும் வாக்காளர் அடையாள அட்டையையும் எஸ்.எஸ்.எல்.சி. சான்றிதழையும் டைரியையும் வேறு சில பொருள்களையும் எடுத்துக்கொண்டு வீட்டிலிருந்து வெளியேறிவிட்டார். பவித்ரா காணாமல் போன விஷயம் அன்று மாலை 7 மணியளவில்தான் எங்களுக்குத் தெரிய வந்தது. அரியூருக்குப் போகும் வரையில் எங்களுக்கு அந்த முஸ்லிம் பையன் பற்றி எதுவும் தெரியாது. புகழேந்தியும் வேறு சிலரும் போலீஸ் ஸ்டேசனுக்கு மூன்று நாட்கள் கொண்டுவரப்பட்டிருந்தார்கள், அவர்கள் போலீசுக்கு ஏதோ கொடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அதற்கு மேல் எனக்கு எதுவும் தெரியாது.

பெண்ணைத் தேடுவதற்காக நாங்கள் எல்லா முயற்சியையும் எடுத்தோம். பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேசனில் நாங்கள் மே 25 அன்று புகார் பதிவு செய்தோம். அதில் நாங்கள் யார் மீது சந்தேகப்படுகிறோம் என்பது பற்றி குறிப்பிடவில்லை. அரியூரில் ஒரு பெண் கொலை செய்யப்பட்டது பற்றிய ஒரு செய்தி வந்ததைத் தொடர்ந்து நாங்கள் பவித்ராவின் போட்டோவை எடுத்துக்கொண்டு அரியூர் போலீஸ் ஸ்டேசனுக்குப் போனோம். பிறகு அங்கே அந்தப் பெண் பவித்ரா அல்ல என்பதை உறுதிப்படுத்திக்கொண்டோம். அரியூர் சப்–இன்ஸ்பெக்டரை நன்றாகத் தெரிந்த எங்களுடைய உறவினர் ஒருவர் ஒடுக்காட்டூரில் இருக்கிறார். அந்த சப்–இன்ஸ்பெக்டர்தான் எங்களுக்கு ஷமீல் பாஷாவின் போன் நம்பர் கிடைப்பதற்கு உதவி செய்தார். ஷமீல் பாஷா தனக்கும் பவித்ராவுக்கும் சிம் கார்டுகள் வாங்கியிருப்பதாக சப்–இன்ஸ்பெக்டர் எங்களிடம் சொன்னார்.

அரியூர் சப்–இன்ஸ்பெக்டர் கொடுத்த முகவரியைப் பயன்படுத்திக்கொண்டு ஆம்பூருக்கு நாங்கள் 25 பேர் சென்றோம். அங்கிருந்து ஷமீல் பாஷாவை பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேனுக்குக் கொண்டு வந்தோம்.

விசாரணையின்போது ஷமீல் மாற்றி மாற்றி பேசினார். முன்னுக்குப் பின் முரணான தகவல்களைச் சொன்னார்.

அடிவாங்குவதற்கு முன்னால் ஷமீல் பவித்ராவை ஊருக்கு வண்டி ஏற்றி அனுப்பிவிட்டதாகச் சொன்னார். அடிவாங்கியபோது பவித்ராவுக்காக திருப்பூரில் ஒரு வீடு ஏற்பாடு செய்ததாகவும் அங்கே தான் இரண்டு நாட்கள் இருந்ததாகவும் சொன்னார். பவித்ராவை அங்கேயே விட்டுவிட்டு அங்கிருந்து புறப்பட்டுவிட்டதாகவும், அதன் பிறகு பவித்ராவுக்கு என்ன நடந்தது என்று தனக்குத் தெரியாது என்றும் ஷமீல் சொன்னார். பவித்ராவின் அம்மாவுடன் தொலைபேசி மூலம் தொடர்கொண்ட ஷமீல், பவித்ரா கோவை எக்ஸ்பிரஸ் ரயிலில் ஏறியிருப்பதாகவும், ரயிலிலிருந்து அவரை நாங்கள் ரிசீவ் செய்துகொள்ளலாம் என்றும் எங்களிடம் சொன்னார். ஆகவே, எங்களில் சிலர் காட்பாடி ஸ்டேசனுக்கும் சிலர் ஆம்பூர் ஸ்டேசனுக்கும் சிலர் ஜோலார்பேட்டை ஸ்டேசனுக்கும் போனார்கள்.

**பழனி (பவித்ராவின் கணவர்):**
எனக்கு 37 வயதாகிறது. பவித்ரா என்னுடைய மனைவி 2015 மே 24ல் பவித்ரா காணாமல் போனார். மே 25 அன்று நாங்கள் பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேசனில் புகார் கொடுத்தோம். அவர்கள் மே 26 அன்று எஃப்.ஐ.ஆர். பதிவு செய்தார்கள்.

அந்தப் புகாரில் நான் காவல் துறையினர் எனது மனைவியை தேடிக் கண்டுபிடித்து மீட்க வேண்டும் என்று கோரியிருந்தேன். முன்னதாக, புகழேந்தியும் அவருடைய மனைவி அமுதாவும் எனது மனைவிக்காக நகைகளும் வேறு சில விலை உயர்ந்த பொருள்களும் வாங்கியிருந்தார்கள். ஆகவே, எனது புகாரில் அவருடைய பெயர்களை நான் குறிப்பிட்டிருந்தேன். அமுதாவும் புகழேந்தியும் பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேசனில் மூன்று நாட்கள் விசாரிக்கப்பட்டார்கள்.

ஆரம்பத்திலிருந்தே போலீஸ் ரெஸ்பான்ஸ் மோசமாகவே இருந்துவந்தது. நாங்கள் பள்ளிகொண்டா ஸ்டேசனுக்குப் போனபோதெல்லாம் நாங்களே அந்தப் பெண்ணை தேடி கண்டுபிடிக்குமாறு போலீஸ்காரர்கள் கடுமையான வார்த்தைகளில் சொன்னார்கள். முஸ்லிம் பையனிடம் விசாரணை நடத்தப்பட்டபோது, இன்ஸ்பெக்டரிடம் எனது தாயார் மூன்று மாதங்களுக்கு தன்னுடைய வீட்டிற்கு அந்த முஸ்லிம் பையன் வந்ததாக தெரிவித்தார். அப்போது பவித்ரா அந்தப் பையனுக்காக கூல் டிரிங்க் வாங்க வெளியே சென்று வந்தார். அந்தப் பையன் யார் எங்கே இருக்கிறான் என்று எனது தாயார் பவித்ராவிடம் கேட்டபோது, பவித்ரா அவன் தன்னுடைய மாமா பையன் என்று சொல்லியிருக்கிறார். இதை அவர் இன்ஸ்பெக்டரிடம் சொன்னபோது, ஷமீல்மீது கோபப்பட்டு அவரை அடிப்பதற்காக பக்கத்தில் சென்றார். சப்–இன்ஸ்பெக்டர் வயதான எனது அம்மாவை கிட்டத்தட்ட அடிக்கிற அளவிற்கு வந்தார். ஸ்டேசனைவிட்டு வெளியேறுமாறு சொன்ன இன்ஸ்பெக்டர் “போடி” என்று மரியாதைக் குறைவான வார்த்தையைச் சொன்னார்.

அந்தப் பையனின் போன் பேச்சைப் பொறுத்தவரையில் அவர் பவித்ராவின் அம்மாவை தொடர்புகொண்டு சென்னையிலிருந்து பவித்ராவை கோவை எக்ஸ்பிரஸ் ரயிலில் ஏற்றிவிட்டிருப்பதாக சொன்னார்.

சமீபத்தில் ராணிப்பேட்டை இன்ஸ்பெக்டர் இங்கே வந்து வழக்கைப் பற்றி விசாரித்தார். அந்தப் பையன் பவித்ராவை விலை பேசி விற்றிருக்க வேண்டும் அல்லது கொலை செய்திருக்க வேண்டும் என்று நான் அந்த இன்ஸ்பெக்டரிடம் சொன்னேன்.

**பழனியின் அம்மா (பவித்ராவின் மாமியார்):**
10 நாட்களுக்கு மேலாக நாங்கள் பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேசனுக்குப் போயிருந்தோம். ஆனால், போலீசிடம் இருந்து எங்களுக்கு சாதகமான பதில் எதுவும் வரவில்லை. “ஏன் நீங்கள் இங்கே வந்து எங்களைக் கேட்டிகிறீர்கள்? நீங்களே போய் தேட வேண்டியதுதானே,” என்றுதான் போலீஸ்காரர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

**எஸ்.ஜே. மண்டல் (திப்ப சமுத்திரம் கிராம ஊராட்சித் தலைவர்)**
பவித்ரா காணாமல் போனது பற்றிய புகார் செய்வதில் ஆரம்பத்திலிருந்தே இதை கவனித்துக்கொண்டிருப்பது நானும் பழனியும்தான். ஷமீலுக்கும் பவித்ராவுக்கும் ஒருவரை ஒருவர் தெரியும் என்பது ஒன்றரை வருஷமாக போய்கொண்டிருக்கிற கதைதான். பவித்ராவிற்கு சிம்கார்டு வாங்கிக் கொடுத்ததே ஷமீல்தான்.

தனது மனைவி பற்றி பள்ளிகொண்டா ஸ்டேசனில் பழனி புகார் செய்தார். ஆனால், போலீஸ்காரர்கள் தேவையான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை என்று நான் தெளிவாகச் சொல்கிறேன். அதன் பிறகு நாங்கள் 10 நாட்கள் வரையில் பள்ளி கொண்டா போலீஸ் ஸ்டேசனையே சுற்றி வந்தோம். இன்ஸ்பெக்டர் ஸ்டேசனுக்கு வரவில்லை அவர் செம்மரக் கடத்தல் விவகாரத்தில் ஒரு பாமக கட்சி நிர்வாகி கொலை செய்யப்பட்ட வழக்கில் பிஸியாக இருந்தார். ஆகவே, இந்தப் பிரச்சனையை சப்–இன்ஸ்பெக்டர் ரவி விசாரித்தார்.

இந்த கிராமத்திலிருந்து சிலர் ஆம்பூருக்குப் போனபோது நான் அவருடன் போகவில்லை. ஆனால், இந்தக் குடும்பத்திற்கு சொந்தக்காரரான பேரூராட்சித் தலைவர் அவருடன் சென்றார். ஷமீலை அவர்கள் பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேசனுக்கு கொண்டு வந்த பிறகு எனக்குத் தெரிவித்தார்கள். நாங்கள் அங்கே மாலை 4.30

மணியளவில் சென்றேன். ஷமீலிடம் சப்–இன்ஸ்பெக்டர் ரவி கேள்விகள் கேட்டபோது, ஷமீல் முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தார்.

பவித்ராவின் தாயாரிடம் தான்தான் தொலைபேசி மூலம் பேசியதாகவும் பவித்ராவை சென்னையிலிருந்து வீட்டிற்குத் திருப்பி அனுப்பியிருப்பதாகவும், பவித்ராவிற்கு 200 ரூபாய் கொடுத்ததாகவும் ஷமீல் போலீசிடம் கூறினார். பவித்ரா தனது கணவர் தன்னை மோசமாக நடத்துவதாக தன்னிடம் கூறியதாகவும் ஷமீல் சப்–இன்ஸ்பெக்டரிடம் சொன்னார்.

ஆனாலும், இன்ஸ்பெக்டர் விசாரித்தபோது ஷமீல், ‘‘சென்னையிலிருந்து பவித்ரா என்னுடன் ஈரோட்டுக்கு வந்தார். காலை 3.30 மணியளவில் அவரை நான் ரிசீவ் செய்து டிபன் வாங்கிக் கொடுத்தேன். குமாரபாளையத்தில் குடியிருக்க வாடகைக்கு ரூ.2,000 கொடுத்தேன். பவித்ராவிற்கு கேஸ் கனெக்ஷன் ஏற்பாடு செய்தேன்,’’ என்று கூறினார்.

ஜூன் 16 அன்று விசாரணை மாலை 5 மணி முதல் 9.45 வரை நடந்தது. அப்போது நானும் போலீஸ் ஸ்டேசனில் இருந்தேன். ஷமீலிடம் நானும் சில கேள்விகள் கேட்டேன். ஷமீல் என்னிடம் தான் டெய்லரிங் டிப்ளமோ பெற்றிருப்பதாக சொன்னபோது, எனக்கு அது விசித்திரமாக இருந்தது. ஏனென்றால், அப்படிப்பட்ட டிப்ளமோ கிடையாது என்பது எனக்குத் தெரியும்.

பவித்ராவை தான் காப்பாற்றியிருப்பதாகவும் ஷமீல் என்னிடம் சொன்னார். இரவு 9.45 மணியளவில் எனக்கு கோபம் ஏற்பட்டு, ‘‘நீ ஒரு முஸ்லிம். அவள் ஒரு இந்து. உங்கள் இருவருக்கும் இடையே என்ன உறவு இருக்க முடியும்,’’ என்று கேட்டேன். அதற்கு ஷமீல், ‘‘நீ யார் என்னைக் கேட்க? பவித்ரா தனது கணவர் தன்னிடம் நல்லபடியாக நடந்துகொள்ளவில்லை என்பதால் என்னிடம் வந்தார், அவரை நான் காப்பாற்றியிருக்கிறேன்,’’ என்று கேட்டார்.

மறுநாள் பழனியின் அம்மா ஸ்டேசனுக்கு வந்தார். அப்போது இன்ஸ்பெக்டர் ஷமீலை அவருக்கு அடையாளம் தெரிகிறதா என்று கேட்டார். ஷமீலை உற்றுப் பார்த்த பழனியின் அம்மா, மூன்று மாதங்களுக்கு முன் தன்னுடைய வீட்டிற்கு வந்தது இந்தப் பையன்தான் என்று கூறினார். பவித்ராவிடம் அந்தப் பையன் யார் என்று கேட்டதாகவும், பவித்ரா அதற்கு கண்ணம்மா வீட்டிலிருந்து அவன் வருவதாகவும் சொன்னார். கண்ணம்மா வீடு என்பது பவித்ராவின் சொந்த ஊர் என்பதால் ஷமீல் பற்றி மேலும் பல தகவல்களை பழனியின் அம்மா கேட்டிருக்கிறார். ஷூ கம்பெனியில் சிலருக்கு வேலை கொடுக்கிற விஷயமாக ஷமீல் வந்திருப்பதாக பவித்ரா சொல்லியிருக்கிறார். விசாரணையின்போது, கூடியிருந்தவர்கள் சத்தம் போட்டார்கள் ஷமீலை தாக்க முயன்றார்கள். அப்போது போலீசார் எல்லோரையும் வெளியே போகுமாறு சொன்னார்கள். அதுவரையில் நானும் எனது ஆட்களும் விசாரணையின்போது ஸ்டேசனில்தான் இருந்தோம். அதன் பிறகு நான் வெளியே வந்துவிட்டேன்.

பிறகு நான் இன்ஸ்பெக்டரிடம் ஸ்டேசனில் ஷமீல் இருந்தது பற்றி கேட்டேன். அதற்கு அவர் ஷமீலின் தந்தையும் மாமனாரும் இன்னொரு உறவினரும் ஷமீலை ஜாமீனில் எடுத்துக்கொண்டுசென்றிருப்பதாகவும் தெரிவித்தார். பவித்ராவைத் தாங்கள் கண்டுபிடித்தால் போலீசிடம் ஒப்படைப்பதாகவும் கூறினார் என்று தெரிவித்தார்.

மறுநாள் ஷமீல் மருத்துவமனைக்குச் சென்று தனக்கு உடலில் பல இடங்களில் வலிப்பதாகக் கூறினார். அதே நாளில் பள்ளிகொண்டா போலீஸ் ஸ்டேசன் இன்ஸ்பெக்டரைக் கண்டித்து ஆம்பூரில் போராட்டம் நடத்த அவர் திட்டமிட்டு அதற்கான தயாரிப்பில் ஈடுபட்டார். உடனே, இன்ஸ்பெக்டர் மார்ட்டின் பிரேம்ராஜ் என்னை அழைத்து 10 ஆட்களுடன் குமாரபாளையம் சென்று அங்கே பவித்ரா இருக்கிறாரா என்று பார்க்குமாறு சொன்னார். பவித்ராவுக்கு ஷமீல் வாடகைப் பணம் 2,000 ரூபாய் கொடுத்து கேஸ் கனெக்ஷனுக்கு ஏற்பாடு செய்திருப்பதால் அந்தப் பெண் ஷமீலுடன்தான் இருக்க வேண்டும் என்றும் இன்ஸ்பெக்டர் என்னிடம் சொன்னார். குமாரபாளையத்தில் இருந்த வீட்டு உரிமையாளரிடம் ஷமீல் தாங்கள் இருவரும் பதிவுத் திருமணம் செய்துகொண்டதாக கூறியிருக்கிறார். பழனி எல்லோரையும் அழைத்து குமாரபாளையத்தில் பவித்ராவைத் தேட உதவுமாறு கூறியிருக்கிறார். முஸ்லிம்களுக்கு பயந்து அப்போது யாரும் முன்வரவில்லை. நானும் பழனியும் என்ன செய்ய முடியும். நான் ஒரு பொறுப்பில் இருக்கிறேன். என்னால் எதுவும் செய்ய முடியாது. மேலும் நான் அ.தி.மு.க. கட்சியில் இருக்கிறேன். நான் போய் எதாவது செய்தால் என்னை கட்சி விசாரிக்கக்கூடும்.

கிராமத்து மக்கள் தாங்கள் ஏற்கெனவே ஹேபியஸ் கார்ப்பஸ் பெட்டிஷன் பதிவு செய்திருப்பதால், பவித்ரா பத்திரமாக வீட்டிற்குக் கொண்டுவரப்படுவார் என்று பழனியிடம் சொன்னார்கள். ஆகவே, குமார பாளையத்திற்குப் போக வேண்டியதில்லை என்று சொன்னார்கள். பழனி அங்கே போனாரா என்பது இப்போதும் எனக்குத் தெரியாது.

நான்தான் தலைவர் என்பதால் இன்ஸ்பெக்டர் மார்ட்டின் பிரேம் ராஜ் எனது நம்பரில் மூன்று முறை என்னை அழைத்து

ஆட்களைத் திரட்டிக்கொண்டு ஆம்பூருக்குப் போய் பவித்ராவைத் தேடுமாறு சொன்னார். ஷமீல் என்னை எதிர்த்தும் போராட்டம் நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் இன்ஸ்பெக்டர் என்னிடம் சொன்னார். எப்போதுமே விசாரிப்பது போலத்தான் ஷமீலை தான் விசாரித்ததாகவும், ஆகவே உடனே ஆம்பூருக்குச் செல்லுமாறும் இன்ஸ்பெக்டர் சொன்னார்.

(காவல் துறையினர் ஏன் குமாரபாளையத்திற்குச் செல்லவில்லை என்ற கேள்விக்கு மண்டல் இவ்வாறு பதிலளித்தார்:"2015 ஜூன் 17 அன்று ஒரு ஜீப்பில் இன்ஸ்பெக்டர் மார்ட்டின் பிரேம் ராஜ் ஷமீல் பாஷாவுடன் சென்று கொண்டிருப்பதை பழனி பார்த்திருக்கிறார். ஷமீல் பாஷா மொபைல் போனில் யாருடனோ பேசிக்கொண்டிருந்திருக்கிறார். அவர்கள் திருப்பத்தூர் வரையில் சென்றதாக பழனிக்குத் தகவல் வந்திருக்கிறது.")

ஒரு பெண் தன்னுடைய மனைவியாகவோ காதலியாகவோ இல்லை என்றால் யாரும் இவ்வளவு சித்திரவதைகளை தாங்கிக்கொண்டு உயிரைவிடமாட்டார்கள் அல்லது ஷமீல் பாஷா அந்தப் பெண்ணை விலைக்கு விற்றிருக்க வேண்டும். எங்கள் பெண்களை கொண்டு செல்வது முஸ்லிம் பையன்களின் பழக்கம்தான். இதற்கு முன்புகூட பேரணாம்பேட்டில் இதேபோன்ற பிரச்சனையில் ரிஸ்வான் என்ற முஸ்லீம் பையன் மரணமடைந்தான்.

பிறகு நான் இன்ஸ்பெக்டர் பிரேம்ராஜிடம் பேசியபோது, அவர் தன்னை வாணியம்பாடி கலால் போலீஸ் ஸ்டேசனுக்கு இடமாற்றம் செய்துவிட்டதாக தெரிவித்தார்.

**சிங்காரம் (பள்ளிகொண்டா காவல்நிலைய துணை ஆய்வாளர்):**

ஷமீலிடம் நடத்தப்பட்ட விசாரணை தொடர்பாகவோ, பவித்ரா காணாமல் போனது தொடர்பாகவோ எங்களிடம் எந்த ஆவணமும் இல்லை. இந்த வழக்குகள் தொடர்பாக இங்கிருந்த எல்லா ஆவணங்களையும் ஒன்றுவிடாமல் சிபி–சிஐடி போலீசார் தங்களுடன் எடுத்துச் சென்றிவிட்டார்கள். ஆகவே, உங்களிடம் காட்டுவதற்கு என்னிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை. கேஸ் டைரி கூட இல்லை. இந்த வழக்கின் விவரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது.

**தகவல்களும் நிகழ்வுகளும்:**

- குச்சிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த பழனியின் மனைவி பவித்ரா (வயது 24), ஆம்பூரைச் சேர்ந்த ஷாஜஹானின் மகன் ஷமீல் பாஷா (வயது 26) இருவரும் ஆம்பூரில் உள்ள ஃபரீதா (டெல்டா II) தோல் நிறுவனத்தில் ஒன்றாக வேலை செய்து வந்தனர். இருவருமே அந்த நிறுவனத்திலிருந்து, தெரிய வராத காரணங்களுக்காக, வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.
- வேலூர் மாவட்டம் அணைக்கட்டு ஒன்றியம், குச்சிப்பாளையம் கிராமத்தில் உள்ள தனது வீட்டிலிருந்து பவித்ரா 2015 மே 24 மாலை 4 மணியிலிருந்து காணாமல் போனார். பவித்ராவின் கணவர் பழனி பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் 2015 மே 26 அன்று புகார் பதிவு செய்தார். தனது புகாரில் அவர், தனது மனைவியை புகழேந்தி, அமுதா (புகழேந்தியின் மனைவி), சரவணன், செந்தில் ஆகியோர் 7 பவுன் தங்க நகைகளோடும், ரூ.3,60,000 பணத்தோடும் கடத்திச் சென்றுவிட்டதாக குறிப்பிட்டிருக்கிறார்.
- 2015 மே 26 அன்று பள்ளிகொண்டா காவல் நிலையத்தினர் ஒரு முதல் தகவல் அறிக்கை (சிஆர்என் 140/15) பதிவு செய்தனர். அதில் அவர்கள் சந்தேதிக்கப்படுபவர்களாக புகழேந்தி, சரவணன், செந்தில் ஆகியோரைக் குறிப்பிட்டிருந்தனர்.
- 2015 மே 27 அன்று பவித்ராவின் தாயாருக்கு ஷமீல் பாஷாவிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் அவர், பவித்ரா ஈரோட்டுக்கு வந்து ஒரு புதிய வேலை தேடித் தருமாறு தன்னை அணுகியதாகவும், பவித்ராவை கோவை எக்ஸ்பிரஸ் ரயிலில் தான் திருப்பி அனுப்பியதாகவும் கூறியிருக்கிறார்.
- தற்செயலாக ஷமீல்பாஷா தனது குடும்பத்தினருடன் தனது மாமியாரின் தாயாரை (வயது 95, உடல் நலம் குன்றியிருப்பவர்) பார்ப்பதற்காக ஆம்பூருக்கு வந்தார். ஆம்பூரில் உள்ள தனது மாமனாரின் வீட்டில் ஷமீல் தங்கினார்.
- 2015 ஜூன் 15 அன்று பவித்ராவின் உறவினர்களும் குச்சிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த வேறு சிலரும் ஷமீல் பாஷாவின் மாமா கலீல் வீட்டிற்கு வந்து ஷமீலைத் தேடினர்.
- ஷமீல் பாஷாவை அவரது மாமனார் விட்டிற்கு கலீல் அழைத்து வந்தார். ஷமீல் வந்தவுடன் அவருடன் பவித்ராவின் உறவினர்கள் சண்டை போடத் தொடங்கினார்கள். பவித்ராவைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு கூறினார்கள். அவர்களிடம் ஷமீல் தான் பவித்ராவை ரயிலில் திருப்பி அனுப்பிவிட்டதாகக் கூறினார்.

- மதக் கலவரம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஷமீலின் மாமா கலீல், ஆம்பூர் நகர காவல் நிலையத்திடம் ஒப்படைத்தார். பவித்ரா காணாமல் போன வழக்கு ஏற்கெனவே பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருந்ததால், ஆம்பூர் காவல் நிலையத்தினர் அவர்களை பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்குச் செல்லுமாறு கூறினர்.

- ஆம்பூர் காவல் நிலைய வழிகாட்டலின்படி, கலீல் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு ஷமீலைக் கொண்டு சென்று மாலை 4 மணியளவில் அவரிடம் ஒப்படைத்தார். பள்ளிகொண்டா காவல் நிலையத்தினர் ஷமீலை திருப்பி அனுப்புவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் கலீலும் மற்றவர்களும் நள்ளிரவு 2 மணியளவில் காவல்நிலையத்தில் காத்திருந்தனர். ஷமீல் பாஷாவை பள்ளிகொண்டா காவல்நிலையத்தினர் திருப்பி அனுப்பவில்லை என்பதால் அவர்கள் அனைவரும் வீட்டிற்குத் திரும்பினர்.

- 2015 ஜுன் 16 அன்று காலையில் ஷமீல் பாஷாவின் மாமனார் என்.கே.முகமது கவுஸ், ஷமீல் பாஷாவை வீட்டிற்குச் செல்ல அனுமதிப்பார்கள் என்ற எதிர்பார்ப்புடன், பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்குச் சென்றார். ஆனால், அங்கே ஷமீல் பாஷாவை அவர் பார்த்தபோது, அவர் ஜட்டியுடன், உட்கார வைக்கப்பட்டிருந்ததையும், இன்னொருவருடன் சேர்த்து கைவிலங்கு போடப்பட்டிருந்ததையும் பார்த்தார். மருமகனை விடுவிப்பது குறித்து அவர் துணை ஆய்வாளர் ரவியிடம் கேட்டபோது, ஆய்வாளர் மார்ட்டின் பிரேம்ராஜ் செம்மர கடத்தல் வழக்கில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகவும், அவர் விசாரணை நடத்திய பிறகுதான் ஷமீலை விடுவிக்க முடியும் என்றும் கூறியிருக்கிறார். ஷமீல் பாஷாவின் உறவினர்கள் அவரை கடைசியாக பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் பார்த்தது அதுவே கடைசி முறை.

- ஷமீல் பாஷாவின் உறவினர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்குச் சென்று அவருக்காக இரவு வரையில் காத்திருப்பது என்பது ஒரு வழக்கமான நடைமுறையாக மாறியது. ஆனால், அவர்கள் ஒவ்வொரு நாளும் பள்ளிகொண்டா காவல்நிலையத்தினரால் பல்வேறு காரணங்களைக் கூறி திருப்பி அனுப்பப்பட்டனர்.

- 2015 ஜுன் 19 (வெள்ளிக்கிழமை) காலை 11 மணியளவில் ஷமீல் பாஷாவின் உறவினர்களுக்கு அவரை அழைத்துச் செல்லுமாறு பள்ளிகொண்டா காவல்நிலையத்திலிருந்து தகவல் வந்தது. பகல் 12 மணியளவில் ஷமீலின் மாமனார் காவல் நிலையத்திற்கு சென்றபோது அழைத்துச் செல்வதற்கு முன்பாக ஒரு கடிதத்தில் கையெழுத்திடுமாறு காவல்துறையினர் கூறினார்கள். அந்தக் கடிதம் காவலர்களாலேயே எழுதப்பட்டிருந்தது, அதில் அவர் கையெழுத்திடுவதற்கு முன்பாக அதனை அவர்கள் அவருக்குப் படித்துக்காட்டவும் இல்லை.

- ஷமீல் பாஷா அவரது மாமனாரிடம் ஒப்படைக்கப்பட்டபோது அவரது நிலை மிகவும் மோசமாக இருந்தது. அவரால் தனது இரண்டு கைகளையுமே அசைக்கவோ உயர்த்தவோ முடியவில்லை. தனது வலது கை இருப்பதை ஷமீலால் உணரக்கூட முடியவில்லை. அவரது வலது, இடது கைகள் கன்றிப் போயிருந்தன. காயங்கள் இருந்தன. உடல் முழுக்க அவர் கடுமையான வலியால் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தார்.

- வீட்டுக்கு திரும்பி வரும் வழியில், ஷமீல் பாஷா தனது மாமனாரிடம் காவல்துறையினர் எப்படி தன்னை சித்திரவதை செய்தார்கள் என்பதை விவரித்தார். தனது ஆண் உறுப்பு உள்பட உடல் முழுவதும் தான் அடிக்கப்பட்டதாக ஷமீல் மாமனாரிடம் கூறினார். அவர்கள் வீட்டை அடைந்தபோது, அவர் என்ன சாப்பிட்டாலும், எதைப் பருகினாலும் ரத்த வாந்தி எடுத்தார். ஷமீலின் வயிறு வீங்கியிருந்தது, அவரால் சிறுநீர் கழிக்கவும் முடியவில்லை. ஆகவே, அவருடைய உறவினர்கள் ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கே அவர் 2015 ஜுன் 19 அன்று சேர்க்கப்பட்டார்.

- ஆம்பூர் அரசு மருத்துவமனையில் தனது காயங்களுக்காக ஷமீல் பாஷா சிகிச்சைப் பெற்றுக்கொண்டிருந்தபோது பள்ளிகொண்டா காவல் நிலையத்தினர் ஷமீல் பாஷாவின் மாமனாருக்கு பணம் கொடுத்து பிரச்சனையை மறைத்துவிட முயற்சி செய்தார்கள்.

- 4 நாட்கள் ஷமீல் பாஷாவுக்கு சிகிச்சை அளித்த ஆம்பூர் அரசு மருத்துவமனை மருத்துவர்கள்

அவரை வேலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல 2015 ஜூன் 22 அன்று பரிந்துரைத்தனர்.

- வேலூர் அரசு மருத்துவமனையில் அவருக்கு 4 நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன்பிறகு, அவர் மேற்கொண்டு சிகிச்சை பெறுவதற்காக சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். 2015 ஜூன் 26 அன்று பகல் 2 மணியளவில் ஷமீல் பாஷா சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சைப் பலனின்றி மாலை 6 மணியளவில் அவர் பலத்த காயங்களால் மரணமடைந்தார்.

- ஷமீல் பாஷாவின் மரணத்திற்குப் பிறகு பள்ளிகொண்டா காவல் நிலைய ஆய்வாளர் மார்ட்டின் பிரேம் ராஜ், திப்ப சமுத்திரம் ஊராட்சித் தலைவர் எஸ்.ஜே.மண்டலுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, ஷமீலின் மரணத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்துவதற்காக ஆம்பூரில் உள்ள முஸ்லிம் தலைவர்கள் ஒன்று சேர்கிறார்கள் என்று கூறினார். பவித்ராவை கண்டுபிடிப்பதற்காகத்தான் ஷமீல் பாஷாவை சித்திரவதை செய்ததாகவும் ஆய்வாளர் மார்ட்டின் பிரேம் ராஜ் கூறினார். முஸ்லிம்கள் போராட்டத்தைத் தடுக்க ஆம்பூருக்குச் சென்று ஏதாவது செய்யுமாறு மண்டலை ஆய்வாளர் கேட்டுக்கொண்டார்.

**கண்டறிந்தவைகள்:**

- பவித்ரா, ஷமீல் பாஷா இருவரும் ஒரே நிறுவனத்தில் (ஃபரீதா லெதர் கம்பெனி) வேலை செய்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஒருவரை ஒருவர் நன்கு தெரியும்.

- பவித்ரா மீது அவரது கணவருக்கு சந்தேகம் ஏற்பட்டதால் அவரும் அவரது உறவினர்களும் 6 மாதங்களுக்கு முன் பவித்ராவை வேலையிலிருந்து நின்றுவிடுமாறு வற்புறுத்தினர்.

- ஃபரீதா தோல் நிறுவனத்திலிருந்து ஷமீல் பாஷாவும் விலகினார். ஈரோடுக்கு குடிபெயர்ந்த அவர் கல்யாண் ஜுவல்லர்ஸ் கடையில் ஒரு விற்பனையாளராக வேலை செய்து வந்தார்.

- 2015 மே 24 மாலை 4 மணியளவில் பவித்ரா குச்சிப்பாளையம் கிராமத்தில் உள்ள தனது வீட்டிலிருந்து காணாமல் போனார்.

- பவித்ராவின் கணவர் பழனி பள்ளிகொண்டா காவல்நிலையத்தில் 2015 மே 26 அன்று ஒரு புகார் பதிவு செய்தார். அதில் அவர் தனது மனைவி காணாமல் போய்விட்டதாகவும் அவரை புகழேந்தி அவரது மனைவி அமுதா, சரவணன், செந்தில் ஆகியோர் கடத்தியிருக்கக்கூடும் என்றும் கூறியிருந்தார்.

- பழனி தனது புகாரில் தனது மனைவியை புகழேந்தி அவரது மனைவி அமுதா, சரவணன், செந்தில் ஆகியோர் கடத்திச் சென்றதாக குறிப்பிட்டிருந்தாலும் கூட, பள்ளிகொண்டா காவல்துறையினர் பெண் காணவில்லை என்று மட்டுமே வழக்கைப் பதிவு செய்தார்கள், பழனி தனது சந்தேகத்திற்குரியவர்களாக குறிப்பிட்டவர்களின் பெயர்களைக் கூட காவல்துறையினர் பதிவு செய்யவில்லை.

- 2015 மே 26 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுவிட்டது என்றாலும் கூட, பள்ளிகொண்டா காவல்துறையினர் பவித்ராவை கண்டுபிடிப்பதற்குத் தேவையான எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. ஆகவே, பழனி சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு ஆட்கொணர்வு ஆணை கோரும் மனுவைத் தாக்கல் செய்தார்.

- ஷமீல் பாஷா தொலைபேசி மூலம் பவித்ராவின் தாயாருடன் பேசிய எண்ணைப் பயன்படுத்தி அவருடைய முகவரியை பவித்ராவின் குடும்பத்தினர் கண்டுபிடித்தார்கள். 2015 ஜூன் 15 அன்று பவித்ராவின் குடும்பத்தினர் ஷமீல் பாஷாவைத் தேடி அவரது மாமா கலீலின் வீட்டிற்குச் சென்றார்கள். ஷமீல் பாஷாவின் மாமனார் வீட்டிற்குச் சென்ற கலீல், அங்கிருந்து ஷமீல் பாஷாவைக் கொண்டு வந்தார்.

- பவித்ராவை ஷமீல் பாஷா மறைத்து வைத்திருப்பதாக குற்றம் சாட்டிய பவித்ராவின் குடும்பத்தினர், பவித்ராவை தங்களிடம் ஒப்படைக்குமாறு ஷமீலிடம் கூறினர். பவித்ரா ஈரோட்டுக்கு வந்து தன்னை சந்தித்து, வேலை வாய்ப்புப் பெற உதவுமாறு கேட்டுக்கொண்டது உண்மைதான் என்று ஷமீல் பாஷா ஒப்புக்கொண்டார்.

- பவித்ராவை தான் மறைத்து வைக்கவில்லை என்று கூறிய ஷமீல் பவித்ராவை கோவை எக்ஸ்பிரஸ்

ரயில் மூலம் அனுப்பி வைத்துவிட்டதாகக் கூறியிருக்கிறார். பதட்டமான நிலைமை உருவாகியிருந்ததால் மதக்கலவரம் ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கத்துடன், ஷமீலின் மாமா கலீல் அவரை ஆம்பூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

- இது பவித்ரா காணாமல் போன புகாருடன் சம்பந்தப்பட்டது என்பதாலும் ஏற்கெனவே பள்ளிகொண்டா காவல் நிலையத்தினர் ஒரு முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்துவிட்டதால், ஆம்பூர் காவல் நிலைய ஆய்வாளர் தொலைபேசி மூலம் பள்ளிகொண்டா காவல்நிலையத்துடன் தொடர்புகொண்டு பேசி, ஷமீலை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் ஒப்படைக்குமாறு கலீலிடம் கூறினார்.

- ஆம்பூர் காவல் நிலையத்தினரின் வழிகாட்டல்படி பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் ஷமீல் பாஷாவை கலீல் 2015 ஜூன் 15 அன்று மாலை 4 மணி வாக்கில் ஒப்படைத்தார்.

- கலீலும் ஷமீல் பாஷாவின் மாமனாரும் ஷமீல் பாஷாவை தங்களுடன் காவல்துறையினர் திருப்பி அனுப்புவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் நள்ளிரவு 2 மணி வரை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் காத்திருந்தனர். ஆனால், பள்ளிகொண்டா துணை ஆய்வாளர் அவர்களுடன் ஷமீலை அனுப்ப மறுத்துவிட்டார். ஆய்வாளர் மார்ட்டின் பிரேம் ராஜ் வந்து ஷமீல் பாஷாவிடம் விசாரணை நடத்த வேண்டியுள்ளது என்று ரவி கூறினார்.

- கலீலும் ஷமீலின் மாமனாரும் (என்.கே. முகமது கவுஸ்) பள்ளிகொண்டா காவல்நிலையத்திலேயே ஷமீலை விட்டுவிட்டு வீடு திரும்பினர்.

- மறுநாள் (2015 ஜூன் 16) கலீலும் ஷமீலின் மாமனாரும் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்குச் சென்றபோது அங்கே ஷமீல் தனது உள்ளாடையை மட்டும் அணிந்திருந்தார். மற்றொருவருடன் சேர்த்து கையில் விலங்கிடப்பட்டிருந்தார். அன்றும் கூட ஷமீல் வீட்டுக்கு அனுப்பப்படவில்லை.

- 2015 ஜூன் 17 அன்று கலீலும், முகமது கவுஸ்சும் பள்ளிகொண்டா காவல்நிலையத்திற்கு மீண்டும் சென்றனர். ஆனால், அவர்கள் அன்று ஷமீலைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. ஆய்வாளர் மார்ட்டின் பிரேம் ராஜ், ஷமீல் பாஷாவை விசாரித்துக்கொண்டிருக்கிறார் என்று அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. முழு நாள் காத்திருந்தபோதும் கூட ஷமீல் பாஷாவைப் பார்க்க அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஆகவே, ஷமீல் பாஷாவைப் பார்க்காமலே அவர்கள் இரவில் வீடு திரும்பினர்.

- 2015 ஜூன் 18 அன்று கலீலும் முகமது கவுஸ்சும் மறுபடியும் பள்ளிகொண்டா காவல்நிலையத்திற்குச் சென்றார்கள். அன்றைக்கும் அவர்கள் ஷமீல் பாஷாவைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. அன்றைக்கும் நாள் முழுக்க காத்திருந்தபோதும் கூட ஷமீல் இல்லாமல் அவர்கள் வீடு திரும்பினார்கள்.

- 2015 ஜூன் 19 அன்று பகல் 12 மணியளவில் ஷமீலின் மாமனார் கவுஸ்சுடன் கலீல் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆய்வாளர் மார்ட்டின் பிரேம் ராஜ் காவல்நிலையத்திற்கு வந்து ஷமீல் பாஷாவை அழைத்துச் செல்லுமாறு சொன்னதாகத் தெரிவித்தார். மதியம் 1 மணியளவில் கவுஸ் பள்ளிகொண்டா காவல்நிலையத்திற்குச் சென்றார். ஆய்வாளர் மார்ட்டின் பிரேம் ராஜ் தாங்கள் ஷமீல் பாஷாவிடமிருந்து, உண்மையை வரவழைப்பதற்காக அவரை அடித்ததாக கலீல், கவுஸ் இருவரிடமும் கூறினார். தாங்கள் அடித்ததால் ஷமீலுக்கு கொஞ்சம் காயம் ஏற்பட்டிருப்பதாகவும் அதற்காக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார். சூடாக ஒத்தடம் கொடுத்தால் ஷமீலுக்கு குணமாகிவிடும் என்றும் ஆய்வாளர் கூறியிருக்கிறார்.

- ஷமீல் பாஷாவால் நடக்கக்கூட முடியவில்லை. தோள்கள் கடுமையாக வலித்த நிலைமையில் அவரால் கைகளை அசைக்க முடியவில்லை.

- ஷமீலை அவரது மாமனாரிடம் ஒப்படைப்பதற்கு முன்பாக பள்ளிகொண்டா காவல்நிலையத்தினர் சில எழுதப்படாத ஆவணங்களில் அவரை கையெழுத்திடுமாறு கூறினார். அவரும் கையெழுத்திட்டார்.

- ஷமீல் பாஷா பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் 2015 ஜூன் 15 முதல் ஜூன் 19 வரை

வைக்கப்பட்டிருந்து, சித்திரவதை செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டார் என்றாலும் கூட, அவர் கைது செய்யப்பட்டதாகக் காட்டக்கூடிய எந்த ஒரு பதிவும் காவல்நிலையத்தில் இல்லை. ஷமீல் பாஷா நீதிபதியின் முன் நிறுத்தப்படவில்லை. அவரது உறவினர்களிடம் அவரது கைது ஆணை தரப்படவில்லை.

- டி.கே.பாசு எதிர் மேற்கு வங்க அரசு வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த வழிகாட்டல்களை பள்ளிகொண்டா காவல்நிலைய ஆய்வாளர் மார்ட்டின் பிரேம் ராஜ், அவரது சக காவலர்கள் அப்பட்டமாக மீறியுள்ளனர்.

- வீட்டுக்குத் திரும்பி வரும் வழியில் ஷமீல் பாஷா தனது மாமனாரிடம் தன்னை ஆய்வாளர் மார்ட்டின் பிரேம்ராஜ், காவலர்கள் முரளி, கண்ணன், ஐயப்பன் மற்றும் சிலர் எப்படி சித்திரவதை செய்தார்கள் என்பதை விலக்கியிருக்கிறார்.

- தன்னை சித்திரவதை செய்தபோது காவல்துறையினர் அனைவரும் குடிபோதையில் இருந்ததாக ஷமீல் கூறியிருக்கிறார். தனது ஆண் உறுப்பில் கூட தாக்கப்பட்டதாக கூறியிருக்கிறார்.

- ஷமீல் பாஷாவின் வயிறு வீங்கியிருந்தது அவரால் சிறுநீர் கழிக்கவும் முடியவில்லை. அவர் எதைச் சாப்பிட்டாலும் பருகினாலும் வாந்தி எடுத்தார். ஆகவே அவர் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

- ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது அவர் மருத்துவர்களிடம் தன்னை பள்ளிகொண்டா காவல்நிலைய ஆய்வாளர் மார்ட்டின் பிரேம் ராஜும் வேறு 5 காவலர்களும் கொடூரமான முறையில் தாக்கியதாக தெளிவாகக் கூறியிருக்கிறார்.

- ஆனால், மருத்துவமனை பதிவேட்டில் ஷமீல் பாஷா அடையாளம் தெரியாத 6 பேர்களால் தாக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. இது முற்றிலும் பொய்யான தகவலாகும்.

- ஆம்பூர் அரசு மருத்துவமனையில் காயங்களுக்காக ஷமீல் பாஷாவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டபோது, ஷமீலின் மாமனாருக்கு இது பிரச்சனையை மூடி மறைக்க காவல்துறையினர் விரும்பியதைத் தெளிவாகக் காட்டுகிறது. பணம் கொடுத்து பிரச்சனையை மறைக்க பள்ளிகொண்டா காவல் நிலையத்தினர் முயற்சி செய்தார்கள்.

- ஷமீல் பாஷாவுக்கு மூன்று நாட்கள் சிகிச்சை அளித்தப் பிறகு ஆம்பூர் அரசு மருத்துவமனை மருத்துவர்கள் அவரை சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள்.

- ஆம்பூர் அரசு மருத்துவமனையிலிருந்து பரிந்துரைக்கப்பட்டதால் ஷமீல் பாஷா வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக 2015 ஜூன் 22 அன்று சேர்க்கப்பட்டார்.

- பள்ளிகொண்டா காவல்நிலைய ஆய்வாளர் பிரேம் ராஜ் மற்றும் அவரது காவலர்களால் தாக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட காயங்களால் ஷமீல் பாஷா 2015 ஜூன் 26 அன்று சென்னையில், ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் மரணமடைந்தார்.

- உடலில் பல வகைப்பட்ட காயங்களாலும் நரம்பு தொகுப்பில் ஏற்பட்ட பாதிப்புகளாலும் ஷமீல் பாஷா மரணமடைந்தார் என்று சென்னை, ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் ஷமீலுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் அறிக்கை அளித்துள்ளனர்.

- ஷமீல் பாஷா மரணமடைந்த பிறகு, பள்ளிகொண்டா காவல் நிலைய ஆய்வாளர் மார்ட்டின் பிரேம் ராஜ், திப்ப சமுத்திரம் கிராம ஊராட்சித் தலைவர் எஸ்.ஜே.மண்டலுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, ஷமீலின் மரணத்திற்குக் கண்டனம் தெரிவித்து போராட்டம் நடத்துவதற்காக

- ஆம்பூரில் உள்ள முஸ்லிம் தலைவர்கள் ஒன்று கூடுகிறார்கள் என்று கூறியுள்ளார். பவித்ரா எங்கே இருக்கிறார் என்று கண்டுபிடிப்பதற்காகத்தான் ஷமீலை தான் சித்திரவதை செய்ததாகவும் ஆய்வாளர் கூறியிருக்கிறார். ஆகவே, எஸ்.ஜே.மண்டல் ஆம்பூருக்குப் போய், முஸ்லிம்களின் போராட்டத்தைத் தடுக்க ஏதாவது செய்யுமாறு கேட்டுக்கொண்டிருக்கிறார்.

- ஷமீல் பாஷாவின் மரணத்திற்குப் பிறகு குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 174ன் கீழ் ஒரு வழக்கு

பதிவு செய்யப்பட்டது. நீதி விசாரணைக்கு ஆணையிடப்பட்டது.

- நீதிபதி மும்மூர்த்தி ஷமீல் பாஷாவின் தந்தை ஷாஜஹானிடம் விசாரணை நடத்தியிருக்கிறார். ஆனால், இன்று வரையில் ஆரம்பத்திலிருந்தே இதன் முழுக் கதையும் தெரிந்த ஷமீல் பாஷாவின் மனைவி, மாமனார், மாமா ஆகியோருடன் நீதிபதி விசாரணை நடத்தவில்லை.

- ஷமீல் பாஷாவுக்கு மூன்று அரசு மருத்துவமனைகளில் (ஆம்பூர், வேலூர், சென்னை) சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்றபோதிலும், ஷமீலின் குடும்பத்திற்கு மருத்துவ ஆவணங்கள் எதுவும் தரப்படவில்லை.

**பரிந்துரைகள்:**

- ஷமீல் பாஷாவின் சட்டவிரோதக் காவல், சித்திரவதை, அவரை மரணத்திற்குள்ளாக்கிய ஆகிய காரணங்களுக்காக ஆய்வாளர் மார்ட்டின் பிரேம் ராஜ் மற்றும் அவரது காவலர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும்.

- தற்போது பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ள ஆய்வாளர் மார்ட்டின் பிரேம் ராஜ் மீது கொலை வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும். அனைத்துக் காவல் நிலையங்களிலும் உள்ள அனைத்து அறைகளிலும் உடனடியாக சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்த அரசாங்கம் ஆணையிட்டாக வேண்டும்.

- டி.கே. பாசு எதிர் மேற்கு வங்க மாநில அரசு வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த வழிகாட்டலின்படி ஷமீல் பாஷாவின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் காவல் தகவல் வழங்காததற்காக, சட்டவிரோத காவல், சித்திரவதை, மரணம் ஏற்படுத்துதல் ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட, டி.எஸ்.பி., வேலூர் எஸ்.பி. உள்ளிட்ட அனைத்து காவல்துறையினரும் தண்டிக்கப்பட வேண்டும்.

- பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உடனடியாக ரூ.10 லட்சம் டைக்கால நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

- இந்த 10 லட்சம் ரூபாய் இழப்பீடு ஷமீல் பாஷாவின் சட்டவிரோத காவல், சித்திரவதையில் சம்பந்தப்பட்ட ஆய்வாளர் மார்ட்டின் பிரேம் ராஜ் மற்றும் அவரது 5 காவலர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

- ஷமீல் பாஷாவின் மனைவிக்கு ஷமீலின் உயிரிழப்பையும் அவரது குடும்பத்தின் வாழ்வாதாரம் பறிபோனதையும் ஈடுகட்டுவதற்காக அரசாங்க வேலை வழங்கப்பட வேண்டும்.

- சட்டவிரோத காவல், சித்திரவதை மற்றும் மரணம் ஏற்படுத்தப்பட்டது தொடர்பாக, ஒரு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியின் கண்காணிப்பில், சுயேச்சையான விசாரணை அமைப்பாகிய சிபிஐ நிறுவனத்தால் ஒரு சுயேச்சையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

- இன்று வரையில் நீதிபதியால் கண்டுகொள்ளாமல் விடப்பட்டுள்ள முக்கிய சாட்சியாக ஷமீலின் மனைவி, மாமனார், மாமா ஆகியோர் நீதிபதியால் விசாரிக்கப்பட வேண்டும். இல்லையேல் அவரது அறிக்கை முழுமையற்றதாகவும் பயனற்றதாகவுமே இருக்கும்.

- ஷமீல் பாஷாவுக்கு மூன்று அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை தொடர்பான ஆவணம் எதையும் எந்த மருத்துவமனையும் வழங்கவில்லை.

- ஷமீலின் மனைவிக்கும் குடும்பத்தினருக்கும் இன்று வரையில் ஏன் ஷமீல் பாஷா அவதிப்பட்டார் என்பதும் அவருக்கு என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது என்பதும் தெரியாது. அரசு மருத்துவமனைகளில் பொதுவாக இப்படித்தான் நடக்கிறது.

- ஆகவே, நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் அவர்களிடம் அளிப்பதை அரசாங்கம் சட்டப்பூர்வமாக கட்டாயமாக்க வேண்டும்.

- இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட காவல்துறையினர் பணத்தை வீசி, தங்களது பதவியையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி சாட்சிகளை மௌனமாக்க முயன்றுள்ளனர் என்பதால், இந்த விசாரணை தினசரி அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் கண்காணிப்பில் நடத்தப்பட வேண்டும்.

# உச்சநீதிமன்றத்தின் பங்களிப்பை சீரமைத்தல்

உயர்நீதிமன்றங்களிலிருந்து வரும் சிவில், கிரிமினல், வழக்கமான மேல்முறையீடுகளை விசாரிப்பதற்கென தனியான ஒரு 'தேசிய மேல்முறையீட்டு நீதிமன்றம்' அமைக்கப்பட வேண்டும் எனக்கோரும் ஒரு சிறப்பு அனுமதி மனுவை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. இதன்மூலம், கடந்த காலத்தில் மீண்டும் மீண்டும் எழுப்பப்பட்டு வெற்றி பெறாமல்போன ஒரு பிரச்சனையை எடுத்துக்கொள்வதற்குத் தான் தயாராக இருப்பதை உச்சநீதிமன்றம் வெளிப்படுத்தியுள்ளது.

உயர்நீதிமன்றங்கள் அளிக்கிற ஒவ்வொரு தீர்ப்பும் சரியானதுதானா என்று தீர்மானிக்கிற சுமையை உச்சநீதிமன்றம் சுமந்துகொண்டிருக்க வேண்டுமா, அரசமைப்பு சாசன முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில் மட்டும் அது தனது நேரத்தை முழுமையாகச் செலவிட வேண்டாமா என்பதுதான் கேள்வி. உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தேங்கிக் கிடப்பது, அவ்வாறு தேங்கிக் கிடக்கும் வழக்குகளை அரசமைப்பு சாசன முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகளாகவும் வழக்கமான இதர வழக்குகளாகவும் பிரிப்பது ஆகிய இரண்டும் இதிலுள்ள அடிப்படையான பிரச்சனைகளாக இருக்கக்கூடும்.

மூன்றாவது பிரச்சனை, திரும்பத் திரும்ப பேசப்பட்டு வந்துள்ள, நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வரக்கூடிய மனுதாரர்களின் சிரமங்கள் தொடர்பானதாகும்; அவர்களுக்கு புதுதில்லி வெகுதொலைவில் அமைந்திருக்கக்கூடும். இதற்குத் தீர்வாக சில ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. உச்சநீதிமன்றத்தை 'அரசமைப்பு சாசனப் பிரிவு' என்றும், 'சட்டப் பிரிவு' என்றும் பிரிப்பது; முதன்மையான அரசமைப்பு சாசன அமர்வு மன்றத்தை தலைநகர் தில்லியில் செயல்படுத்துவது, உயர்நீதிமன்றங்களின் ஆணைகள் மீதான மேல்முறையீடுகளை விசாரிப்பதற்கென 4 மண்டல அமர்வு மன்றங்களை உருவாக்குவது; அரசமைப்பு சாசன விவகாரங்கள் சாராத வழக்குகளை விசாரிப்பதற்கென 4 'முறையீட்டு விசாரணை அமர்வு மன்றங்கள்' கொண்ட ஒரு தேசிய மேல்முறையீட்டு நீதிமன்றத்தை உருவாக்குவது ஆகியவை அந்த ஆலோசனைகளில் சிலவாகும்.

தேசிய மேல்முறையீட்டு நீதிமன்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று ஒரு வழக்குரைஞர் முன்வைத்த கோரிக்கையை நிராகரித்த மத்திய சட்ட அமைச்சகம், தில்லிக்கு வெளியே உச்சநீதிமன்ற அமர்வுகளை ஏற்படுத்துவதை அடுத்தடுத்து வந்த தலைமை நீதிபதிகள் எதிர்த்துள்ளனர் என காரணம் கூறியுள்ளது.

மேலும், இது தொடர்பாக அமைச்சகம் சட்ட ஆலோசனைகளைக் கோரியபோது, உச்சநீதிமன்றத்தின் பணியை மாற்றியமைக்கக்கூடிய அரசமைப்பு சாசனத் திருத்தம் எதுவும் ஏற்கத்தக்கதல்ல என்றும், ஏனெனில் அது அரசமைப்பு சாசனத்தின்படி உச்சநீதிமன்றத்திற்கு உள்ள தன்மையை மாற்றிவிடும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்ட ஆணையம் தனது 229வது அறிக்கையில் (2009), தேவைப்பட்டால் நான்கு மண்டலங்களில் முறையீட்டு தீர்வு அமர்வு மன்றங்களும், அரசமைப்பு சாசன அமர்வு மன்றம் தில்லியிலும் செயல்படும் வகையில் 130வது சட்ட உரையில் திருத்தம் செய்யலாம் ("அவ்வப்போது, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன், இந்திய தலைமை நீதிபதி நியமிப்பதற்கேற்ப உச்சநீதிமன்றம் தில்லியில் அல்லது அதுபோன்ற வேறு இடம் அல்லது இடங்களில் செயல்படும்") என்ற ஆலோசனையைக் கூறியுள்ளது. இந்த ஆலோசனையை நிராகரிப்பதாக சட்ட அமைச்சகத்திற்கு வந்துள்ள கருத்து அமைந்துள்ளதாகத் தெரிகிறது.

கீழ்நிலை நீதிமன்றங்களின் முடிவுகளை மாற்றுவதற்கான கடைசிப் புகலிடமாக இருப்பவை முறையீட்டுத் தீர்வு நீதிமன்றங்கள். உயர்நீதிமன்றத்தின் ஆணைகள் மீதான மேல்முறையீட்டுக்கு சிறப்பு அனுமதி வழங்கும் அதிகாரம் 136வது சட்ட உரையின் கீழ் உச்சநீதிமன்றத்துக்கு உள்ளது. அந்த அதிகாரத்தை தனக்குக் கீழ் நிலையில் இருக்கக்கூடிய ஒரு நீதிமன்றத்துடன் உச்சநீதிமன்றம் பகிர்ந்துகொள்வது ஏற்கத்தக்கதுதானா என்பதுதான் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையாக உள்ளது. மேலும், உச்சநீதிமன்றம் அண்மைக்காலமாக அரசமைப்பு

சாசனத்திற்கு விளக்கமளிக்கும் தனது பங்களிப்பு குறித்த அக்கறையோடு இருந்து வருகிறது. அநேகமாக, தினந்தோறும் அரசமைப்பு சாசன அமர்வு கூடுகிறது. தற்போதைய அமைப்பிற்குள்ளேயேகூட நீதி கிடைப்பதற்கு மண்டல நீதிமன்றங்கள் உதவக்கூடுமேயன்றி, வழக்குகள் குவிந்துபோவதில் உதவிட இயலாது. தேசிய மேல்முறையீட்டு நீதிமன்றம் ஒன்று தேவை என்ற கருத்து பரிசீலனைக்கு உரியது. ஆனால், இந்திய உச்சநீதிமன்றத்தின் ஐயத்திற்கிடமற்ற அதிகாரத்தைக் கீழிறக்கும் வகையில் அது இருந்துவிடக்கூடாது.

**தி இந்து, பிப்ரவரி 29, 2016**

*ஆட்டோ டிரைவரை அடித்து கொன்றதாக புகார்*

## இன்ஸ்பெக்டர் மீதான வழக்கை 2 மாதத்துக்குள் விசாரித்து முடிக்க வேண்டும்

நாகை மாவட்டம், நாகூரை சேர்ந்தவர் ஆட்டோ டிரைவர் சுரேஷ். இவர் தன் நண்பர் பிரசாத்துடன், கடந்த 2013–ம் ஆண்டு டிசம்பர் 31–ந் தேதி வாஞ்சூர் சோதனை சாவடி அருகே தன் ஆட்டோவை நிறுத்தி பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவ்வழியாக வந்த இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன், ஆட்டோவை எடுத்துச் செல்லும்படி கூறியுள்ளார். அதற்கு சுரேஷ், தன் ஆட்டோ சாலையோரம், போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறு இல்லாமல்தானே நிற்கிறது என்று கூறியுள்ளார். இதில் ஆத்திரமடைந்த இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன், ஆட்டோ டிரைவர் சுரேசை சரமாரியாக பலமாகத் தாக்கியுள்ளார். பின்னர், போலீஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று அடித்துள்ளார். இதில் மயங்கி விழுந்த சுரேஷை, அங்குள்ள அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். ஆனால், அவர் சிகிச்சைப் பலனின்றி இறந்துவிட்டார்.

இதையடுத்து சென்னை ஐகோர்ட்டில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு கடந்த ஆண்டு ஜூலை மாதம் விசாரணைக்கு வந்தபோது, இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் மீது குற்றவியல் மற்றும் துறை ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், இறந்த சுரேசின் மனைவி, குழந்தைகளுக்கு ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த சம்பவம் குறித்து சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், தமிழக அரசு சார்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில், இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்சய்கிஷன் கவுல், நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது நாகை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு பதில் மனு தாக்கல் செய்தார். அதில், ஆட்டோ டிரைவர் சுரேசை தாக்கியதாக இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் மீது குற்றம் சுமத்தப்பட்டது. இவர் மீது துறை ரீதியான விசாரணை நடத்தியபோது, குற்றச்சாட்டு நிரூபணமாகியுள்ளது. இவர் மீது நடவடிக்கை எடுக்க டி.ஐ.ஜி.க்கு கோப்புகளை கடந்த மாதம் அனுப்பி வைக்கப்பட்டது. டி.ஐ.ஜி. தகுந்த உத்தரவினை விரைவில் பிறப்பிக்க உள்ளார் என்று கூறியிருந்தார். அதேபோல, ஆட்டோ டிரைவர் சாவு குறித்து சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை நடத்தினார்கள். இந்த விசாரணையின் விவரங்களை ரகசிய அறிக்கையாக ஐகோர்ட்டில் சி.பி.சி.ஐ.டி. அதிகாரிகள் தாக்கல் செய்தனர்.

இவற்றை எல்லாம் படித்து பார்த்த நீதிபதிகள், இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் மீது பதிவான வழக்கை சி.பி.சி.ஐ.டி. போலீசார் 2 மாதங்களுக்குள் விசாரித்து முடிக்கவேண்டும். பின்னர் சம்பந்தப்பட்ட கோர்ட்டில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்யவேண்டும். அதன்பின்னர் அதுதொடர்பான அறிக்கையை இந்த ஐகோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டும் என்று உத்தரவிட்டனர். பின்னர் விசாரணையை வருகிற ஜூன் 7–ந் தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்தனர்.

**தினத்தந்தி, 15 மார்ச் 2016**

# தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் அளிக்கப்படும் பதில்களுக்கு ஒரு சீரான ஏற்பாடு

சென்னை மாநகராட்சியின் அனைத்து துறைகளும், மண்டல அலுவலகங்களும் ஒரு குறிப்பிட்ட வடிவில் தகவல் உரிமைச் சட்ட (RTI) பதில்களை அளிக்க வேண்டும் என்று மாநகராட்சி நிர்வாகம் ஆணையிட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் மனுக்களுக்கு முழுமையற்ற, தவறான பதில்கள் தரப்படுவதாக வரும் புகார்கள் அதிகரித்துள்ள பின்னணியில் இவ்வாறு ஆணையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, உதவி ஆணையர் வி. கஸ்தூரி கடந்த பிப்ரவரியில் அனைத்து துறைத் தலைவர்கள் மண்டல துணை ஆணையர்கள், வட்டார அதிகாரிகள் உள்ளிட்டோருக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். மாநில அரசின் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில், RTI மனுக்களுக்கான பதில்களை அனுப்புவதற்குரிய புதிய வழிகாட்டல்கள் அந்தக் கடிதத்தில் உள்ளன.

| கடமைப்பொறுப்பை உறுதிப்படுத்துதல் | | | |
|---|---|---|---|
| தகவல் உரிமை நடைமுறைகளை முறைப்படுத்துவது புதிய வழிகாட்டல்களின் நோக்கம் | | | |
| **எந்தவொரு RTI விண்ணப்பத்திற்கும் அளிக்கப்படும் பதிலில் பின்வரும் அம்சங்கள் இருக்க வேண்டும்** | **விண்ணப்பதாரர் கோரியுள்ள தகவல் மறுக்கப்படுமானால்** | **வேறு அதிகார அமைப்பு சம்பந்தப்பட்டதாக குறிப்பிட்ட தகவல் இருக்குமானால்** | **RTI பதிலின் கடைசிப் பத்தியில் பின்வரும் அம்சங்கள் இருக்க வேண்டும்** |
| • RTI விண்ணப்ப எண்<br>• விண்ணப்ப தேதி | • மறுக்கப்படுவதற்கான விளக்கமான காரணங்களை அதிகாரி தெரிவிக்க வேண்டும் | • RTI சட்டத்தின் 6 (3) பிரிவின் கீழ் விண்ணப்பம் சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புக்கு மாற்றப்படலாம் | • முதலாவது மேல் முறையீட்டு அதிகாரியின் பெயர், பதவி, முகவரி, மின்னஞ்சல் |
| • சம்பந்தப்பட்ட அதிகாரியின் பெயர்<br>• அதிகாரியின் பதவிப் பொறுப்பு<br>• அதிகாரியின் தொலைபேசி எண்<br>• அதிகாரியின் மின்னஞ்சல் முகவரி | • குறிப்பிட்ட தகவல் RTI சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் மறுக்கப்படுகிறது என்பதை அதிகாரி குறிப்பிட வேண்டும் | • எந்த அலுவலகத்தின் அதிகாரிக்கு விண்ணப்பம் மாற்றியனுப்பப்படுகிறதோ அவரைப் பற்றிய விவரங்கள் விண்ணப்பதாரருக்கு அனுப்பப்பட வேண்டும் | • முதலாவது மேல்முறையீடு 30 நாட்களுக்குள் செய்யப்படலாம் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும் |

ஆண்டுதோறும் சென்னை மாநகராட்சிக்கு 7,000க்கும் மேற்பட்ட RTI மனுக்கள் வருகின்றன. ஆனால், பெரும்பாலான பதில்கள் அரைகுறையாக உள்ளன, தவறான தகவல்களோடும் உள்ளன என்று மக்கள் கூறுகிறார்கள்.

“RTI மனுக்களுக்கான பெரும்பாலான பதில்கள் முழுமையற்றதாக உள்ளன. நான் இந்த ஆண்டு 35 மனுக்கள் தாக்கல் செய்தேன். ஆனால் 10 மனுக்களுக்கு மட்டுமே பதில்கள் வந்தன,” என்றார் தியாகராய நகர் குடியிருப்போர் நலச் சங்கத்தின் செயலாளர் பி. கண்ணன்.

“தி.நகரில் ஆக்கிரமிப்பு பற்றி ஒரு RTI மனுவை எங்கள் சங்கம் தாக்கல் செய்திருந்தது. அதற்கு, சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரி, நேரில் வந்து தகவலைப் பெற்றுக்கொள்ளுமாறு எங்களைக் கேட்டுக்கொண்டார். நாங்கள் நேரில் சென்று அவரைப் பார்த்தபோது, இத்தகைய கேள்விகளை சட்டத்தின் RTI கீழ் எழுப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்,” என்றார் கண்ணன்.

## முபமையற்ற பதில்

“ஒரு கட்டட அனுமதி தொடர்பாக விரிவானதொரு RTI விண்ணப்பத்தை நான் சென்னை மாநகராட்சியிடம் தாக்கல் செய்திருந்தேன். எனக்கு மெட்ரோ வாட்டர் அலுவலகத்திலிருந்து முழுமையற்ற ஒரு பதில் வந்தது,“ என்று பெரம்பூரில் குடியிருக்கும் அஹமது சிராஜூதீன் கூறினார். “கட்டட அனுமதி தொடர்பான தகவல் எதுவுமில்லாமல் அந்த விண்ணப்பத்தை மாநகராட்சி அதிகாரிகள் மெட்ரோவாட்டர் அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டனர். இது மாநகராட்சியின் பொறுப்புதான்,” என்றும் சிராஜூதீன் கூறினார்.

**தி இந்து, 28 பிப்ரவரி 2016**

*தகவல் உரிமை சட்டம் தன்னைக் கட்டுப்படுத்தாது என்கிறது உச்சநீதிமன்றம்*

# நிலுவையில் உள்ள தீர்ப்புகள் பற்றிய தகவல்களைத் தர மறுப்பு

– கிருஷ்ணதாஸ் ராஜகோபால்

## தில்லி உயர்நீதிமன்ற ஆணைக்கு எதிரான மேல்முறையீடு நிராகரிப்பு
## வெளிப்படைத்தன்மைக்கு ஒரு அடி

மத்திய தகவல் ஆணையத்தின் ஆணையைப் புறக்கணித்து, உச்சநீதிமன்றத்தின் ஒரு இரட்டை நடுவர் ஆயம் (டிவிஷன் பெஞ்ச்), தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் பதிலளிக்க உச்சநீதிமன்றம் கடமைப்பட்டிருக்கிறது என்று அறிவிக்க மறுத்துவிட்டது.

- ''தள்ளி வைக்கப்பட்டுள்ள தீர்ப்புகள்'' எத்தனை என்பதை விசாரித்து தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் வரக்கூடிய மனுக்களுக்கு பதிலளிக்க ஏற்ற வகையில் உச்சநீதிமன்றம் தனது ஆவணங்களை வைத்திருக்க வேண்டும் என்று மத்திய தகவல் ஆணையம் கூறியுள்ளது.
- தகவல் ஆணையத்தின் முடிவு தில்லி உயர்நீதிமன்றத்தின் ஒரு தனி நீதிபதி அங்கீகரித்துள்ளார். இது தொடர்பான ஒரு வழக்கில் உச்சநீதிமன்றம் தன்னை ஒரு எதிர் தரப்பாக சேர்த்துக்கொண்டது.

❖ ''ஒரு தீர்ப்பை அறிவிப்பதில் நியாயமற்ற தாமதம் ஏற்படுமானால் மனுதாரர்களின் நம்பிக்கை ஆட்டம் காண்கிறது.''

– உச்சநீதிமன்றம் 2001ல் அளித்த ஒரு தீர்ப்பு

வழக்குகளில் அளிக்கப்பட வேண்டிய தீர்ப்புகள் ஆண்டுக்கணக்காக நிறுத்திவைக்கப்படுமானால் மனுதாரர்களின் நம்பிக்கை ஆட்டம் கண்டுவிடும் என்று 15 ஆண்டுகளுக்கு முன் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், இப்போது அளித்துள்ள ஒரு தீர்ப்பில், நிலுவையில் உள்ள தீர்ப்புகளின் எண்ணிக்கை விவரங்களைப் பராமரிக்க வேண்டும் என்றும், தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் அந்த விவரங்களைப் பொதுமக்களுக்குத் தெரிய வேண்டும் என்று கோருகிற மனுவைத் தள்ளுபடி செய்துள்ளது (2016 மார்ச் 14).

நிலுவையில் உள்ள அல்லது ''நிறுத்தி வைக்கப்பட்டுள்ள'' தீர்ப்புகளின் எண்ணிக்கையை உச்சநீதிமன்றம் வெளிப்படுத்த வேண்டும் என்பது மத்திய தகவல் ஆணையத்தின் (CIC) முடிவு. ஆனால், இந்தச் சட்டத்தின் கீழ் பதிலளிக்கும் கடமைப் பொறுப்பு தனக்கு இல்லையென்று உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது. ஆணையத்தின் முடிவை தில்லி உயர்நீதிமன்றத்தின் ஒரு தனி நீதிபதி அங்கீகரித்துத் தீர்ப்பளித்திருந்தார். அந்த வழக்கில் உச்சநீதிமன்றம் தானே ஒரு எதிர்த்தரப்பாக வாதாடியது குறிப்பிடத்தக்கது. ஆயினும், தனி நீதிபதியின் ஆணை 2016 ஜனவரி 7ல் ஒரு இரட்டை நடுவர் ஆயத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. உச்சநீதிமன்றத்தின் பிரதிநிதியாக அதன் பதிவாளர் தாக்கல் செய்த மேல்முறையீடு மீது தீர்ப்பளித்த இரட்டை நடுவர் ஆயம் இவ்வாறு தள்ளுபடி செய்தது.

நீதிபதிகள் பி.சி. கோஸ், அமிதவா ராய் ஆகியோர் கொண்ட ஒரு நீதி ஆயம் (பெஞ்ச்) தகவல் உரிமைச் சட்ட மனுதாரர் லோகேஷ் பத்ரா தாக்கல் செய்திருந்த, தில்லி உயர்நீதிமன்ற இரட்டை நடுவர் ஆயத்தின் தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்ய முடிவு செய்தது.

''நீதிமன்றத்தின் மீது முழு மரியாதையோடு சொல்கிறேன், இந்த மனு தள்ளுபடி

செய்யப்படுமானால் உச்சநீதிமன்றத்தின் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையை இது தகர்த்துவிடும். வெளிப்படைத்தன்மை பற்றியும் தகவல் உரிமைச் சட்டம் பற்றியும் உச்சநீதிமன்றம் பெரிய அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறது, ஆனால் தனக்கென்று வருகிறபோது, மிக அடிப்படையான தகவல்களைக்கூட வெளிப்படுத்தத் தயங்குகிறது,'' என்று பத்ரா சார்பில் வாதாடிய வழக்குரைஞர் பிரசாந்த் பூஷன் கூறினார்.

''நிறுத்திவைக்கப்பட்டுள்ள தீர்ப்புகள்'' எத்தனை என்ற தகவல்களைத் தகவல் உரிமைச் சட்ட மனுதாரர்களுக்குத் தெரிவித்திடும் வகையில் தனது ஆவணங்களைப் பராமரித்து வரவேண்டும் என்று CIC ஆணையிட்டுள்ளது. ''தீர்ப்புகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ள வழக்குகளின் மொத்த எண்ணிக்கை முறைப்படி பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் கருத்து. இப்போது கணினி இணைப்பு வசதிகள் வந்துவிட்டன. ஆகவே, இப்படிப்பட்ட தகவல்களை பொதுமக்களுக்கான இணையத் தளங்களில் வெளியிடுவதில் குறிப்பான எந்த சிக்கலும் இருக்க முடியாது,'' என்று CIC கூறியுள்ளது.

2001ம் ஆண்டில் அனில் ரவி எதிர் பீஹார் மாநில அரசு வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையிலேயே இந்த முடிவை CIC எடுத்தது. உச்சநீதிமன்றம் அந்தத் தீர்ப்பில் இப்படிக் கூறியிருந்தது: ''ஒரு தீர்ப்பை நிறுத்திவைத்த பிறகு அதனை அறிவிப்பதில் நியாயமற்ற தாமதம் ஏற்படுமானால் மனுக்கள் மீதான முடிவுகள் தொடர்பாக மனுதாரர்களின் நம்பிக்கை ஆட்டம் கண்டுவிடும்.''

**தி இந்து, 16 பிப்ரவரி 2016**

# மாற்றுக் கருத்துக்கு வழியில்லாவிட்டால் சுதந்திரமும் இல்லை

– சஞ்சய் ஹெக்டே

*கருத்து வேறுபாடு உள்ளவர்கள் இல்லாத ஜனநாயகம் என்பது சாத்தியமற்றது. சுதந்திரமாக சிந்திக்கும் சுதந்திரமான மனிதர்கள் அதனை சுதந்திரமாகப் பேசவும் செய்வார்கள். அந்தச் சிந்தனையோ, அது வெளிப்படுத்தப்படும் விதமோ எவ்வளவு வெறுப்புக்குரியதாக இருந்தபோதிலும், முதிர்ச்சியுள்ள ஒரு ஜனநாயகத்தில் அது பொறுத்துக்கொள்ளப்படும், சொல்லப்போனால் அதனை வெளியிடுவதற்கு ஊக்கமளிக்கப்படும்.*

கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு முன்பாக, 1919ஆம் ஆண்டில், அமெரிக்க அரசு முதலாம் உலகப்போரை அப்போதுதான் முடிவுக்குக் கொண்டுவந்திருந்தது. எல்லாப் போர்களையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்கான போர் என்று கூறப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த கோடைக்காலத்தில் இனக் கலவரங்கள் நடந்தன. இலையுதிர் காலத்தில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடைபெற்றன. அமெரிக்காவின் தலைமை வழக்குரைஞர் வீட்டு வாசலில் ஒரு வெடிகுண்டு வெடித்தது. அதே ஆண்டில், அமெரிக்க உச்சநீதிமன்றத்தில் ஆபிரஹாம் எதிர் அமெரிக்க அரசு வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ரஷ்யாவில் பிறந்தவர்களான 5 பேர் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் யுத்த முயற்சிகளுக்கு எதிராக, (ரஷ்யா குறித்து அமெரிக்கா கடைப்பிடித்த பகைமை அணுகுமுறைகளுக்கும் எதிராக) அந்த 5 பேரும் பல தொடர்ச்சியான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டார்கள். அதன்மூலம் அரசின் யுத்த நடவடிக்கைகளுக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டிவிட்டு ஊக்குவித்தார்கள் என்ற அடிப்படையில், 1917ஆம் ஆண்டின் வேவு பார்த்தல் தடுப்புச் சட்டத்தின் அந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. அந்தச் சட்டம் 1918ல் கொண்டுவரப்பட்ட தேச விரோத தடுப்புச் சட்டத்தின் மூலம் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டது. மனுவை விசாரித்த நீதிமன்றம், அந்த 5 பேரும் குற்றவாளிகள்தான் என்ற தீர்ப்பை அங்கீகரித்தது. ஆனால், நீதிபதிகள் குழுவில் இடம்பெற்றிருந்த நீதிபதி ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் ஜூனியர், அந்தத் தீர்ப்பில் மாறுபட்டார். தனது மாறுபட்ட தீர்ப்பின் நகலை அவர், குழுவின் இதர நீதிபதிகளிடம் சுற்றுக்கு விட்டார். மூன்று நீதிபதிகளும் அவரைச் சந்தித்து தீர்ப்பில் முரண்பட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டனர். நீதிபதி ஹோம்ஸ்ஸிடமிருந்து வரக்கூடிய மாறுபட்ட கருத்து, நாட்டின் உறுதிப்பாட்டை பலவீனப்படுத்திவிடும், அது எதிரிக்குச் சாதகமாகிவிடும் என்று அவர்கள் கவலைப்பட்டனர். நீதிமன்ற அமைப்பின்மீது மிகுந்த மரியாதை கொண்டவர் ஹோம்ஸ். தீர்ப்புகளில் ஒத்த கருத்து அமைய வேண்டும் என்பதற்காக பல நேரங்களில் அவர் தனது சொந்த நம்பிக்கைகளைப் பின்னுக்குத் தள்ளியவர். ஆயினும், இம்முறை தனது மனதில் உள்ளதை வெளிப்படுத்த வேண்டும் என்று அவர் கருதினார். நீதிபதிகளுக்கான இருக்கையிலிருந்து அவர் தனது மாற்றுக் கருத்தை வாசித்தார். அது ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. சுதந்திரம் என்பதற்கான அடையாளச் சின்னமாக அவரது மாற்றுக் கருத்து போற்றப்படுகிறது.

ஹோம்ஸ் தனது தீர்ப்பில் எழுதியது வருமாறு: ‘‘ஆனால், முரண்படும் நம்பிக்கைகள் பலவற்றை காலம் வீழ்த்தியுள்ளது என்று மனிதர்கள் உணர்கிறபோது, தங்களது சொந்த செயல்களின் அடிப்படைகள் மீது அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையைவிடவும் அதிக நம்பிக்கையோடு, கருத்துகள் சுதந்திரமாக பகிர்ந்துகொள்ளப்படுகிறபோதுதான் எதிர்பார்க்கப்படும் இறுதியான நன்மையைச் சென்றடைய முடியும் என்பதை உணர்வார்கள். உண்மைக்கான சிறந்த பரிசோதனை சந்தைப் போட்டியில் தான் ஏற்கப்பட வேண்டும் என்ற சிந்தனையின் வலிமையே ஆகும் என்பதையும், தங்களது விருப்பங்களைப் பாதுகாப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரே அடித்தளம் உண்மைதான் என்பதையும் அவர்கள் உணர்வார்கள். எவ்வகையிலும் இதுவே நமது அரசமைப்பு சாசனத்தின் கோட்பாடாகும். இது ஒரு பரிசோதனைதான். வாழ்க்கை முழுவதுமே ஒரு பரிசோதனைதான் என்பது போன்றதே இது.’’

நீதிபதி ஹோம்ஸ் கூறிய இதே வார்த்தைகளை, சென்ற ஆண்டு இந்திய உச்சநீதிமன்றத்தின் நீதிபதி ரோஹின்டன் நாரிமன் எடுத்துக்காட்டினார். ஷ்ரேயா சிங்கால் வழக்கில், தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 66A பிரிவு உச்சநீதிமன்றத்தால் தள்ளுபடி செய்தபோது அவர் இதனை

எடுத்துக் கூறினார். உச்சநீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பு, இந்தியாவில் இணைய வழி உரைகளுக்கு கைது செய்யப்படலாம், வழக்குத் தொடுக்கப்படலாம் என்ற அச்சுறுத்தல்களிலிருந்து விடுதலை அளித்தது.

''இந்தியா, அதாவது பாரதம், மாநிலங்களின் ஒரு ஒன்றியமாக இருக்கும்,'' என்று அரசமைப்பு சாசனத்தின் சட்ட உரை–1 அறிவிக்கிறது. ஆனால், உண்மை நடப்பில் பாரத நாடாகிய இந்தியாவின் 70 ஆண்டு கால சுதந்திரத்தில், வலுவான பல அரசியல் கருத்துகளிடையே ஒற்றுமையின்மை இருந்து வந்திருக்கிறது. அந்தக் கருத்துகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவையாக இருந்துவந்திருக்கின்றன.

2014 மே மாதம் நடந்த தேர்தலில் ஒரு பெரும்பான்மை அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகுதான் இந்தியா தனது இயற்கையான மரபுக்கு வந்துள்ளது என்ற கருத்து கூறப்படுகிறது. 1947ல் முழுமையாக மடிந்துவிடாத மேற்கத்திய யுகமாக, ஒரு பேரரசின் முடிவுரையாக மட்டுமே கடந்த 60 ஆண்டுகளில் இந்தியக் குடியரசு இருந்துவந்திருக்கிறது என்ற வாதமும் கிளப்பப்படுகிறது. இந்தியாவுக்குள் சிறுபான்மையினரை திருப்திப்படுத்துகிற ஒரு போலித்தனமான ஒப்பனையாகவே நேருவின் சிந்தனை அடிப்படையிலான பொதுக் கருத்து இருந்துவந்திருக்கிறது என்றும், அது இந்தியாவுக்கு வெளியே மேற்கத்திய ஆதிக்கத்திற்குப் பணிந்து போகிறது என்றும் வாதிடப்படுகிறது.

இதை மறுக்கிற இடதுசாரி தரப்பு வாதங்களில் மேற்கத்திய நலன்களுக்கு சேவை செய்கிற போக்கு இருக்கிறது என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால், உள்நாட்டில் யாரையேனும் திருப்திப்படுகிற அணுகுமுறை இருந்து வந்திருக்குமானால் அது பணக்காரார்களையும், மதம் சார்ந்த பெரும்பான்மையினரையும் திருப்திப்படுத்துவதேயாகும் என்று இடதுசாரிகள் கூறுகிறார்கள். மூன்றாவது வாதமாக, தொன்மைக்கால ஆட்சி நியாயப்படுத்தப்படுகிறது. பொருளாதார வளர்ச்சி சீராக இருந்து வந்தது என்றும், இன்ற அது தீவிரமான தேசியவாதத்தை நோக்கிய பெரும் சாய்வின் குறுக்கீட்டுக்கு உள்ளாகியுள்ளது என்று கூறப்படுகிறது.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் மக்கள் இயக்கங்களுக்கு தலைமை தாங்குகிறவர்கள் வேறொரு கதையைச் சொல்கிறார்கள். தலைநகர் தில்லியில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களுக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்கள் நடந்துவந்திருக்கின்றன என்பதே அவர்கள் முன்வைக்கிற வாதம். இந்திய வாழ்க்கை என்பது மாறுபட்ட வாதங்களின் குழப்பங்களும் இணக்கங்களும் கலந்திருப்பதேயாகும். இங்கே கிராமங்களும் நகரங்களும், கடைத் தெருக்களும் பெரும் வர்த்தக வளாகங்களும் சூழ்ந்திருக்கின்றன. தொலைக்காட்சி அரங்குகள் இந்திய தேசத்தின் வாழ்க்கையை நாள்தோறும் காட்டிக்கொண்டிருக்கின்றன. இந்தக் குழப்பமான, இணக்கமான வாதப்பூர்வமான இந்திய வாழ்க்கைக்கு மேற்படி மாறுபட்ட குரல்களும், வேறு குரல்களும் பங்களித்து வந்துள்ளன. அவசர நிலை ஆட்சி நடைபெற்ற அந்த 20 மாதங்கள் தவிர்த்து வேறு எப்போதுமே இங்கே ஒரே விதமான குரல் ஒலித்ததில்லை. அதேபோல், அரசாங்கத்தின் நிலைபாட்டுடன் முரண்படுகிற கருத்துகள் தேச நலனுக்கு எதிரானவை என்றும் சொல்லப்பட்டதில்லை. இந்தியாவில் கலகக் குரல்களை வெளிப்படுத்தவும் முடிந்திருக்கிறது, அதே நேரத்தில் லட்சக்கணக்கான கலகக் குரல்களைக் கட்டுப்படுத்தவும் முடிந்திருக்கிறது. இந்தியாவின் நண்பர்கள் இதைக் கண்டு மகிழ்கிறார்கள். எதிரிகள் வியப்படைகிறார்கள். இந்தியாவுடன் ஆயிரமாண்டு போர் தொடுக்கப்போவதாக அறிவித்தவர் பாகிஸ்தானின் அன்றைய பிரதமர் ஜுல்ஃபிகர் அலி புட்டோ. அவர் மரண தண்டனை அளிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது இவ்வாறு கூறினார்: ''பாகிஸ்தானைவிட இந்தியா பல மடங்கு பன்முகத்தன்மை வாய்ந்தது, ஆனால், இந்தியாவின் ஜனநாயகத்தில் ஒலிக்கிற இரைச்சல்களாலும் குழப்பங்களாலும்தான் அது ஒரே நாடாக பிணைக்கப்பட்டிருக்கிறது.''

## இப்போது ஏன் ?

பிறகு ஏன், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சமீபத்திய நிகழ்வுகள், இந்தியாவில் மாற்றுக்கருத்துகள் ஒலிப்பதற்கு எதிராக இவ்வளவு பெரும் ஆத்திரத்தை கிளப்பிவிடுகின்றன ? நாட்டின் வேறு சில பகுதிகளில் பல ஆண்டுகளாகவே ஒலித்து வந்திருக்கிற சில முழக்கங்கள், இந்த வளாகத்திலும் ஒலித்தபோது எதற்காக பெரும்பான்மையினர் அச்சத்தோடும் ஆத்திரத்தோடும் எதிர்வினையாற்றுகிறார்கள் ? பெரும்பான்மையினர் கருத்துக்கு மாற்றான கருத்துகள் எல்லாமே தேச விரோதம் என்று பார்க்கப்படுகிற அளவிற்கு, விவாதங்களின் வெப்பத்தை அதிகரிப்பதால் ஆதாயம் அடைகிறவர்கள் யார் ? அரசாங்கத்துக்கு எதிரான ஒரு மாறுபட்ட கருத்து தேசத்துக்கு எதிரான விரோதக் கருத்தாக எப்போது மாறுகிறது ? எந்தவிதமான சந்தேகத்தை வெளிப்படுத்தினாலும் அது, நாட்டைத் துண்டாட விரும்புவோருக்கு ஆதரவான கருத்தாக சித்தரிக்கப்படும்போது நாட்டின் பொதுக் கருத்து என்பது ஆழ்ந்த மௌனத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறதா ? போலீஸ் ராஜ்ஜியம் என்று சொல்லத்தக்க அளவில் ஒரு சர்வாதிகார நிர்வாகத்தை வழங்கக்கூடிய வலுவான தலைவர்களால் மட்டுமே நாட்டை

ஒன்றுபடுத்தி வைத்திருக்க முடியும் என்கிற அளவுக்கு இந்தியா பலவீனமடைந்துவிட்டதா? அனைத்துக் குறைகளுக்கும் தீர்வு ஒத்த கருத்தில் மூழ்கடிப்பதே என்கிற அளவுக்கு இந்தியாவின் அடையாளம் தளர்ந்துபோய்விட்டதா?

எதிர்க்கருத்து என்பது தேசவிரோதமானதல்ல. வரலாற்றில் முக்கியத் தருணங்களில் எல்லாம் வெளிப்படுத்தப்பட்ட எதிர்க் கருத்துகளின் அடித்தளத்தில்தான் இந்த தேசம் கட்டப்பட்டிருக்கிறது. மகத தேசத்தை ஆண்ட நந்தர்கள் அலெக்ஸாண்டரின் படையெடுப்புகளை எதிர்கொள்வதில் மெத்தனமாக இருந்ததால் அவர்களோடு முரண்பட்ட கௌடில்யர் மௌரிய சாம்ராஜ்யத்தை நிறுவினார். அன்றைய பழமைவாதங்களை எதிர்த்து முரண்பட்டார் புத்தர். அவரது எண்ணங்களை எட்டுத் தடங்கள் கொண்ட பாதை வெளிப்படுத்தியது. சனாதன தர்மம் மங்கிப்போய்க்கொண்டிருந்தபோது தனது எதிர்க்கருத்தை வெளிப்படுத்திய ஆதிசங்கரர் அதனை மீண்டும் நிலைநாட்டினார். தக்காண அரசர்களோடும் முகலாயப் பேரரசோடும் முரண்பட்ட சிவாஜி மராத்திப் பேரரசுக்கு அடிக்கல் நாட்டினார். பாரக்பூர், மீரட் நகரங்களில் முகாமிட்டிருந்த ராணுவ வீரர்களின் எதிர்க்கருத்து 1857ல் முதலாவது சுதந்திரப் போருக்கு இட்டுச்சென்றது. லோகமான்ய திலகர் முதல் நேதாஜி போஸ், நேரு, காந்தி வரையில் எதிர்க்கருத்துகளின் நீண்ட தொடர்ச்சி சுதந்திர இந்தியாவுக்கான பாதையை நமக்குத் தந்தது. மகாத்மா காந்தியுடன்கூட முரண்பட்ட டாக்டர் அம்பேத்கர், இத்தனை ஆண்டுகளாக உறுதியோடு இருக்கிற இந்திய அரசமைப்பு சாசனத்தை நமக்கு வழங்கினார்.

நமது குடியரசு தன்னில் பல எதிர்க் கருத்தாளர்களைக் கண்டு வந்துள்ளது. அவர்களது அந்நாள் எதிர்க் கருத்துகள் பின்னாள் நடைமுறையாகவும் மாறின. சோவியத் யூனியனை முன்மாதிரியாகக் கொண்டு உருவாக்கப்பட்ட திட்டமிடல் அணுகுமுறையை அன்று சி. ராஜகோபாலாச்சாரி எதிர்த்தார். பின்னர், பி.வி. நரசிம்மராவ், மன்மோகன் சிங் இருவரும் 'லைசன்ஸ் கோட்டா' முறையை ஒழித்தனர். ஜெயப்பிரகாஷ் நாராயணன் விடுத்த முழுப் புரட்சி அறைகூவல் அவசர நிலை ஆட்சிக்கும் இட்டுச் சென்றது, அதேவேளையில் சர்வாதிகாரத்துக்கு எதிரான ஒரு பொதுக்கருத்து உருவாவதற்கும் வழிவகுத்தது.

**நீதிபதி கன்னாவை நினைவுகூர்வோம்**

அவசர நிலை ஆட்சிக்காலத்தில் ஏடீஎம் ஜபல்பூர் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பில் மாறுபட்டார் நீதிபதி ஹெச்.ஆர். கன்னா. உயிர்வாழும் உரிமை மனிதர்களோடு கூடப் பிறந்தது, அது ஒன்றும் அரசமைப்பு சாசனத்தால் வழங்கப்பட்ட நன்கொடை அல்ல, ஆகவே, அந்த உரிமையை விலக்கி வைக்க முடியாது என்றார் அவர். இப்படி ஒரு மாறுபட்ட தீர்ப்பை அளித்ததால் இந்தியாவின் தலைமை நீதிபதி பதவியை அவர் இழக்க வேண்டியதாயிற்று. ஆயினும், அவருக்கு தேசத்தின் நன்றியைத் தெரிவிக்கும் விதத்தில், கடைசியாக அவர் தலைமை தாங்கிய நீதிமன்ற அறை–2 அவருடைய உருவப்படம் வைக்கப்பட்டது. சார்லஸ் ஈவான்ஸ் ஹ்யூக்ஸ் கூறிய வார்த்தைகளை அவர் என்றென்றும் நினைவுபடுத்துகிறார்: "கடைசிப் புகலிடமாக உள்ள நீதிமன்றத்தில் ஒரு கருத்து வேறுபாடு என்பது சட்டத்தின் உணர்வு மேலோங்குவதற்கும், எதிர்காலத்தின் அறிவார்ந்த நிலைக்கும் விடுக்கப்படுகிற வேண்டுகோளேயாகும்."

கருத்து வேறுபாடு உள்ளவர்கள் இல்லாத ஜனநாயகம் என்பது சாத்தியமற்றது. சுதந்திரமாக சிந்திக்கும் சுதந்திரமான மனிதர்கள் அதனை சுதந்திரமாகப் பேசவும் செய்வார்கள். அந்தச் சிந்தனையோ, அது வெளிப்படுத்தப்படும் விதமோ எவ்வளவு வெறுப்புக்குரியதாக இருந்தபோதிலும், முதிர்ச்சியுள்ள ஒரு ஜனநாயகத்தில் அது பொறுத்துக்கொள்ளப்படும், சொல்லப்போனால் அதனை வெளியிடுவதற்கு ஊக்கமளிக்கப்படும். ஒரு தவறான கருத்தை வெளிப்படுத்த முடியாத சிந்தனைகளின் கிடங்கிற்குள் புழுங்கவிடுவதைவிட, அவர்களை ஒலிக்கவிடுவதும், கருத்துக் களத்தில் அது நிராகரிக்கப்படுவதுமே சிறந்தது. சுதந்திரமான மனிதர்கள், சுதந்திரமாகவும் தங்களது சுய விருப்பத்தோடும், ஒரு சுதந்திர நாட்டின் குடிமக்களாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளுக்குத் தங்களை உட்படுத்திக்கொள்வதைவிட மிகப் பெரிய ஜனநாயக சிந்தனை எதுவும் கிடையாது. முழு சர்வாதிகார அரசுகள் மட்டமே எதிர்க் கருத்துகளையும், எதிர்க் கருத்தாளர்களையும் ஒடுக்குகின்றன. கடந்தகால காலனியாட்சியின் மிச்ச சொச்சங்களைப் பிடித்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்துகிற, அனைத்தையும் கட்டுப்படுத்துகிற ஒரு அரசாங்க அமைப்பிலிருந்து இன்னும் விடுபடாத நாடு மட்டுமே எதிர்க்கருத்துகளை தேச விரோதம் என்று முத்திரை குத்துகிறது. ஒரு உண்மையான சுதந்திர தேசம், தான் தகர்க்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்படுமானால்கூட அதையும் நம்பிக்கையோடு ஆய்வு செய்யத் தயாராக இருக்கும்; கருத்துக் களத்தில் அது ஒரு தவறான சிந்தனையாக எடுபடாமல் போகக்கூடும். உலகத்தின் மகத்தான தேசங்களில் ஒன்றான தானும் இடம்பெற்று, தனது எதிர்காலம் பற்றிய நம்பிக்கையோடு உள்ள நாடாகத் திகழ வேண்டும் என்றால் இந்தியா இப்படித்தான் இருக்க வேண்டும் என்பது எனது கருத்து. அன்பான வாசகரே, உங்கள் கருத்தும் இதுதானா?

(கட்டுரையாளர் உச்சநீதிமன்றத்தில் ஒரு மூத்த வழக்குரைஞர்)

**தி இந்து, மார்ச் 4, 2016**

For Private Circulation Only

*Education Material Published on behalf of*

*Campaign for Custodial Justice & Abolition of Torture by*
*Human Rights Advocacy and Research Foundation (HRF)*

*# 54, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, INDIA.*
*☎ 044 2235 3503, 044 2235 1919 Fax : 044 2235 5905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsfoundation.org.in*